மீள்பார்வை

மீள்பார்வை

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 376 • 01 செப்டம்பர் 2017 வெள்ளிக்கிழமை • துல் ஹஜ் 1438 • விலை 40.00

எமது வாசக நெஞ்சங்களுக்கு
ஹஜ்ஜுப் பெருநாள்
நல்வாழ்த்துக்கள்

RI MOBILE
Wholesale Dealers in Mobile Phone Accessories
077-3050949
077-4843323
Tel: 011-2439470
151/11, Mumbai Plaza, 2nd Cross Street, Colombo - 11
Branch: 159/21, Green Arcade, Main Street, Colombo - 11
தேவையான பொருட்களை இருக்குமிடத்தில் இருந்தே மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள அழையுங்கள் 0777 777 761 0777 674 941

எங்களைக் காப்பாற்ற யாருமே இல்லையா?

சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற ஆங்சாங் சூகியின் அரசாங்கத்தின் கீழான மியன்மார் இராணுவம் அராக்கான் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விட்டுள்ள இனப்படுகொலைகள் உக்கிரமடைந்து வருகின்றன.

மியன்மார் அரச படைகளினாலும் இனவாத தீவிரப் போக்குக் கொண்டவர்களாலும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், வயோதிபர்கள் எனப் பாகுபாடின்றி ஆயிரக்கணக்கில் மக்கள் கொடூரமாக கொல்லப்பட்டு வருகின்றனர். பலர் உயிர்பிழைப்பதற்காக நாட்டை விட்டு வேறு நாடுகளுக்கு கடல் வழியாக தப்பி ஓடுகின்றார்கள். 100 கிலோ மீட்டர் தூரம் வரையான பரப்பு தீயில் எரிந்து கொண்டிருப்பதை செய்மதி மூலமாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது என அல் ஜஸீரா செய்திச் சேவை தகவல்கள் வெளியிட்டுள்ளது. இது தவிர உலகின் எந்த ஊடகமும் இந்த மக்களின் அவலத்தை வெளிக் கொண்டுவருவதற்கு மறுத்துள்ளது. (பக்.11)

(படஉதவி: அல் ஜஸீரா)

20 ஆவது திருத்தம் தொடர்பிலான மனுக்கள் விசாரணை

அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே தினத்தில் நடத்துவது தொடர்பில் முன்னெடுக்கப்பட்டுவரும் மாகாண சபை தேர்தல் (திருத்த) சட்டமூலம் அல்லது 20 ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலத் துக்கு எதிராக தென் மாகாணசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ள நிலையில் வடமத்திய மாகாணம் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளது. இந்தத் திருத்தச் சட்டமூலம் அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணானது என உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அனைத்து மனுக்களும் செப்டம்பர் 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன. (பக்.11)

அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் இலங்கைக்குள் ஐஎஸ் ஐ கொண்டுவரும் முயற்சி

அமைச்சரவைக்குக் கூட அறிவிக்காமல் 2007 ஆம் ஆண்டு அமெரிக்காவுடன் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு ஒப்பந்தம், 10 ஆண்டுகளில் காலாவதியாவதனால் அதனை புதுப்பிக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

அப்போதைய யுத்த சூழலை எதிர்கொள்வதற்கு அமெரிக்க இராணுவத்தின் உதவி தேவை எனக் காரணம் காட்டி, அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ, அமெரிக்க தூதுவர் ரொபர்ட் ஓ ப்ளேக் ஆகிய இரு அமெரிக்கர்களும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இவ்வருட மார்ச் மாதத்தில் காலாவதியான இந்த ஒப்பந்தத்தை மீளப் புதுப்பிக்கப்படும் என பிரதமர் பாராளுமன்றில் சொன்னாலும் அது அமைச்சரவைக்கு முன்வைக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார். (பக்.11)

இலங்கை மீதான போர்க் குற்ற விசாரணை ஆரம்பம்

ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைகளை விசாரிப்பதற்கான காலம் மேலும் இரண்டு வருடங்கள் தள்ளிப் போடப்பட்ட போதும், போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை முன்னாள் ராணுவ தளபதி ஜகத் ஜெயசூர்ய மீது பிரேசில் மற்றும் கொலம்பியா ஆகிய தென் அமெரிக்கா நாடுகளில் சில மனித உரிமை குழுக்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளன. (பக்.11)

கருக்கலைப்புச் சட்டம் விரைவில்

பாலியல் வன்முறையால் உருவாகும் மற்றும் மரபணு பிறழ்வுக்குள்ளான கருக்களை கலைப்பதற்கு சட்ட ரீதியாக அனுமதியளிக்கும் வகையில் சட்டம் கொண்டு வரப்படவுள்ளதாக சுகாதார கல்வி பணியகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் டாக்டர் கபில ஜயரட்ன தெரிவித்தார்.

உத்தேச சட்ட மூலத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்றும் நாடாளுமன்றத்தின் அங்கீகாரம் பெற வேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (பக்.11)

கட்டாரிலுள்ள சிங்களப் பாடசாலை அபிவிருத்தி

இலங்கையின் பௌத்த மதகுரு ஒருவர் திஹாரிய மாணவர்களுக்கு மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணித்துக் கொடுத்தது போல, கட்டார் அரசாங் கம் இலங்கை சிங்கள மாணவர்களுக்கு பாடசாலை நிர்மாணித்துக் கொள்வதற்குத் தேவையான காணியை கட்டாரில் வழங்கியுள்ளது. 2001 ஆம் ஆண்டு முதல் கத்தாரிலுள்ள இலங்கையர் களால் நடத்தப்பட்டு வருகின்ற இந்த சிங்களப் பாடசாலையில் (பக்.14)

16-25 வயதிற்குட்பட்ட மாணவிகளுக்கான
கண்டி மடவளையில் பெண்களுக்கான வதிவிட வசதியுடனான கற்கைநெறி
ஆங்கிலம் மற்றும் வாழ்க்கைத்திறன்களை வளர்த்துக்கொள்ள
100 நாள் Full Time
விஷேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கைநெறி
ENGLISH & Life Skills
5 சான்றிதழ்கள்
சர்வதேச ISO சான்றிதழ் மற்றும் அரச அங்கீகார (TVEC) சான்றிதழ் உட்பட
இக் கற்கைநெறியில் உள்ளடங்குபவை:
- English Language (Special)
- Information Technology (IT)
- Life Skills & Motivation
- தஜ்வீத், தர்பியா மற்றும் அஹ்லாக்
- Sinhala Language
- Art & Craft (சுயதொழில் பயிற்சி)
- Cookery
- Dress Making (தையல்)
- Human Development
- Counseling (உளவியல்)
- Psychology
- Beauty Culture (Natural)
- Bridal Dressing
- Social Media & Safety
சிறப்புத் தேர்ச்சி பெறும் மாணவிக்கு UK சான்றிதழ் வழங்கப்படும்
ஆரம்பம்: Sep 14th
இவற்றுடன் மேலும் சில பாடநெறிகள்
TOEIC EDFOCUS fusion
EMERRAD Ladies College
36/3B | SIRIMALWATTA ROAD | MADAWALA BAZAAR | KANDY
M: 0777 71 71 29 T: 081 20 50 600
Hotline : 0777 877 966

NCH New City Hardware
வாடிக்கையாளர்களுக்கு எமது இதயம் கனிந்த ஈதுல் அழ்ஹா நல்வாழ்த்துக்கள்
58 MESSENGER STREET, COLOMBO - 12. Tel: 011 4377931, 011 2444016, 011 5830188. E-Mail: newcity@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மியன்மார் முஸ்லிம்களுக்காக என்ன செய்யலாம்?

- பைரூஸ் மஹாத்

மியன்மார் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வண்ணம் உத்தியோக பூர்வமாக எமது அமைப்புகள் அதிலும் குறிப்பாக சிங்கள பௌத்த தரப்புகளை கொண்ட சிவில் அமைப்புகள் மற்றும் சகல இனங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசியல் தரப்புகள் மூலம் கண்டனங்களையும் மனிதாபிமான கோரிக்கைகளையும் முன்வைக்கலாம்.
துஆக் கேட்பது மாத்திரமல்ல.

ADDRESS	Myanmar Embassy in Colombo, Sri Lanka 4A, Rosmead Avenue Rosmead Place Colombo 7 Sri Lanka
TELEPHONE	(+94) (11) 268 1007
FAX	(+94) (11) 268 2052
EMAIL	myanlanka@gmail.com
WEBSITE	
OFFICE HOURS	09.30-16.30
HEAD OF MISSION	U Min Thein Zan, Ambassador

சகோதரர்களே கீழே Your name என்ற இடத்தில் உங்கள் பெயர்களைக் குறிப்பிட்டு கீழுள்ள விடயத்தை copy செய்து / வெட்டி எடுத்து தரப் பட்டுள்ள மியன்மார் தூதரகத்தின் E mail அல்லது விலாசத்திற்கு அதிக மதிகம் அனுப்பவும். இதை மற்றவர்களுக்கும் தெரியப்படுத்துங்கள்.

தகவல்: Waffa Farook.

Email: myanlanka@gmail.com
myanemcmb@gmail.com
Address: Myanmar Embassy in Colombo, 4A, Rosmead Avenue, Rosmead place, Colombo-07.

His Excellency the Ambassador
Myanmar Embassy
Colombo
Sri Lanka

Your Excellency,

Pathetic plight of Rohingya people

We strongly believe that you would appreciate the fact that humanity has no border and need no any other identities than being human.

Though, Rohingyas are denied of Myanmar identity for reasons under debate for more than decades, we still believe they deserve due protection and safety in the land where they live which is governed by a Nobel Peace prize winner.

News that are reaching us contradicting our hope and unfolding an intolerable pathetic scenario where thousands of Rohingyas are murdered in cold blood and tens of thousands of survivers are fleeing as refugees to escape death.

We, as fellow human beings, beyond all divisions and boundaries wish to express our deepest sympathy to the victims and urge the government of Myanmar in the name of humanity to ensure the protection and safety of Rohingya people who are at the point of death and total destruction.

Thanking you
Sincerely

Your Name

பல்போர் பிரகடனம் கட்டுரைப் போட்டி

பலஸ்தீன மக்களின் தலைவிதியை மாற்றியமைத்த, அவர்களின் வாழ்வில் பேரிடியாய் விழுந்த 'பால்போர் பிரகடனம்' மேற்கொள்ளப்பட்ட 100 வருட நிறைவையொட்டி, இலங்கை-பலஸ்தீன் நட்புறவுச் சங்கமும் இலங்கைக்கான பலஸ்தீன தூதரகமும் இணைந்து ''பல்போர் பிரகடனத்தின் பின்னரான பலஸ் தீனின் நீதிக்கான தேடல்'' எனும் தலைப்பில் கட்டுரைப் போட்டியொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

1500 சொற்களுக்கு மேற்படாமல் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் கட்டுரை வரையப்பட முடியும். கட்டுரையானது பலஸ்தீன மக்களின் சுதந்திரத் துக்கும் நீதிக்குமான உரிமைகள் தொடர்பிலான ஆய்வாக அமைவதுடன், பின்வரும் விடயதானங்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும் என எதிர்பார்க் கப்படுகிறது.

- பலஸ்தீன மக்களின் நிலங்களை யூதர்களுக்கு வழங்க பிரித்தானியாவுக்கு எவ்வகையில் அதிகாரம் கிடைத்தது?
- இச்சட்டவிரோத பிரகடனத்தின் பின்புலங்கள்
- மனிதாபிமானம், பாதுகாப்பு மற்றும் சர்வதேச சட்டங்களின் பார்வையில் இச்சட்ட விரோத பிரகடனத்தினால் பலஸ்தீன மக்களின் இயல்பு வாழ்வில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளும், உலகளாவிய ரீதியில் அதன் அதிர்வலைகளும்
- இன்றைய பலஸ்தீன மக்களின் இன்னல்களுக்கு இங்கிலாந்து பதில் கூறுமா?
- பிரகடனம் தொடர்பிலும், நீதியின் அடிப்படையில் பலஸ்தீன அமைதிக்கான செல்நெறி தொடர்பிலும் கட்டுரையாளரது தனிப்பட்ட கண்ணோட்டம்

கட்டுரைகள் மூன்று வல்லுனர் குழுக்களினால் மதிப்பாய்வு செய்யப்படும். கட்டுரை ஆய்வுகளுக்கான ஆதாரங்களும் உசாத்துணைகளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மொழியிலும் தனித்தனியாக தேர்வு செய்யப்படும் வெற்றி யாளர்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படுவதோடு, போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும். முதலாம் பரிசாக 60,000 ரூபாவும், இரண்டாம் பரிசாக 40,000 ரூபாவும், மூன்றாம் பரிசாக 20,000 ரூபாவும் வழங்கப்படும்.

கட்டுரைகள் PDF வடிவில் balfour100years@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு 02.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது கட்டுரைகளின் தட்டச்சுப் பிரதிகள் 110/10, Wijerama Mawatha, Colombo 07 என்ற முகவரியில் உள்ள இலங்கைக்கான பலஸ்தீன் தூதரகத்துக்கு கிடைக்கச் செய்ய முடியும்.

கட்டுரையின் தலைப்பு (01), கட்டுரையாளரின் பெயர் (02), முகவரி (03), தொலைபேசி இலக்கம் (04), மின்னஞ்சல் முகவரி (05), சொற்களின் எண்ணிக்கை (06) ஆகியவற்றை உள்ளடக்கிய முகப்பு அட்டை இணைக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களை 0112695991 என்ற இலக்கத்தை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும்.

மியன்மாரும் நாய்களும்

- முஹம்மத் நிஸௌஸ்

குர்பான் மாடு கொழுக்கலைன்னு
கோவிச்சு கதைக்கிற பாத்தும்மா
பர்மா மக்கள் பசியோடு
படுகிற பாட்டைப் பாரும்மா

ஹஜ்ஜுப் பெருநாள் அபாயாவில்
கல்லு பழசென்று கவலையா?
பச்சப் பிள்ளை சிறுவர்களை
கொல்லும் மியன்மாரை நினைத்துப் பார்.

பலகாரம் கருகிப் போச்சென்று
பதறுதா சாச்சி -மியன்மாரில்
கலவரம் நடந்து வீடு வாசல்
கருகி சருகாய்ப் போயாச்சி

மாறி மாறி அறுப்பு பற்றி
கூறிக் குத்பாவில் அறுப்பவரே
கூறு போட்டு ரோஹிங்யாவில்
கொல்லும் நிலை பற்றி மௌனம் ஏன்?

யாரு செத்தா எனக்கென்ன
என்று இருப்பவர் முஸ்லீமா?
ஆரும் அவஸ்தைப் படுகையில்
அதற்காய்த் துடிப்பவன் முஸ்லீமா?

ஒருதரமேனும் இறைவனிடம்
உயர்த்துவோம் கையை இறைவனிடம்
கருணை ரஹ்மான் கபூல் செய்தால்
கயவர்கள் கொட்டம் அழிந்து விடும்.



உலகின் மலிவான இரத்தம்!

- ரிஸ்வான் ஷஹீட்

மிருகவதையை தடுத்த புத்தன்
மனிதவதையை தடுக்கவில்லையோ?

பசுவதையை தடுத்த பௌத்தன்
சிசுவதையை தடுக்கவில்லையே?

இரக்கத்தை போதித்த புத்தம்
அரக்கத்தை பின்பற்றுவதேனோ?

அரச மரத்தின் குளுமை
அரகான் மாநிலத்தை எரிப்பதேன்?

புத்தன் அணிந்த காவி
ரத்தம் சுவைக்க அலைவதேன்

பாலஸ்தீன, சிரிய மக்களுக்கு அடுத்ததாக ரோஹிங்ய முஸ்லிம்களின் ரத்தம்தான் உலகில் மிகவும் மலிவானது போல..

மியன்மார் அவலம்

- ஜுனைத் எம். ஹாரிஸ்

ஐலான் குர்தி என்ற சிரிய நாட்டு சிறுவனை காட்டி முழு உலகையும் திரும்பிப் பார்க்க வைத்த மேல்குலக ஊடகங்களுக்கு இந்த மியன்மார் குழந்தையின் பரிதாபம் தெரியாமல் போனது ஏனோ?

ஐலான் குர்தி என்ற சிறுவனின் உயிரிழந்த சடலத்தைக் காட்டி சிரியாவுக்கு எதிராக முழு உலகையும் திசை திருப்ப நினைத்த ஊடகங்களுக்கு இந்த மியன்மார் முஸ்லிம்களின் நிலைமையை உலகுக்கு எடுத்துக் காட்ட ஏன் முடியவில்லை.

உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான 7 நாள் வதிவிடப் பயிற்சிநெறி

இவ்வருடம் க.பொ.த உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான 7 நாள் வதிவிடப் பயிற்சிநெறியொன்றை - Youth Development Program (YDP) முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் ஸ்ரீலங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கமும் இணைந்து நடாத்தவிருக்கின்றது.

நாடளாவிய ரீதியில் பிரஸ்தாபிய அடிப்படையில் மும்மொழிகளிலும் பிரத்தியேகமாக இடம்பெறவுள்ள இப்பயிற்சிநெறியானது, இஸ்லாமிய அடிப்படை அறிவு, தலைமைத்துவ வழிகாட்டல்கள், உயர்கல்வி வழி காட்டல்கள்கள், தொழிற்துறை வழிகாட்டல்கள், ஆன்மீக தார்மீக விழு மியங்கள், இளைஞர்களுக்கான உளவளத்துறை பயிற்றுவிப்புக்கள், விளை யாட்டு நிகழ்ச்சிகள் போன்ற பல தேவையான உள்ளடக்கங்களோடு அமையவிருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்தோடு, நிகழ்வின் இறுதியில், ஒவ்வொரு பயிற்சிநெறியிலும் சிறந்த மாணவர்களுக்கான பதக்கங்கள் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலம் என வழங்கப்படுவதோடு, பங்குபற்றிய அனைத்து மாணவர்களுக்குமான சான்றிதழ்களும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும்:

» சகோ. கவ்வாம் (தமிழ் மொழி): 0767212141
» சகோ. ஹாஷிர் (ஆங்கில மொழி): 0771002545
» சகோ. அஷ்ரப் அலி (சிங்கள மொழி): 0776194156
» பெண்கள் பகுதி: 0777412439

உலமாக்களுக்கான விஷேட கற்கை நெறி

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் ஒத்துழைப் புக்கும் ஒருங்கிணைப்புக்குமான குழு 'முரண்பாட்டுத் தீர்வுக் கல்வி' எனும் விஷேட கற்கை நெறியொன்றை ஆலிம் களுக்கு வழங்கி வருகின்றது. முதலாவது கற்கை நெறியை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளது.

இவ்விஷேட கற்கை நெறி 150 மணித்தியாலயங்களைக் கொண்டதாகும். வார இறுதி நாட்களான சனி, ஞாயிறு தினங்களில் வதிவிட வசதியுடன் நடாத்தப்படும். மேற்படி கற்கை நெறியில் இன்றைய சவால்களாக அமைந்திருக்கும் பிரச்சினைகளை அடையாளங் கண்டு அவற்றுக்கான தீர்வுகள், அணுகுமுறைகள் பற்றி ஷரீஆவின் ஒளியில் விரிவாக ஆராயப் படவுள்ளது.

மேலும் பல்வேறு தலைப்புக்களில் ஆலிம்களை வலு ஊட்டவும், அவர்களின் திறன்களை வளர்க்கவும் கள ஆய்வு களுக்கான வழிகாட்டல்களை வழங்கவும் திட்டமிடப்பட் டுள்ளது. இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்பவர்களுக்கு ஜம்இய்யாவினால் சான்றிதழ் வழங்கப்படும். இதில் 40 ஆலிம் கள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இக்கலைத் திட்டத்தில் இணைந்து பயன்பெற விரும்பும் ஆலிம்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் 2017.09.08 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் விதத்தில், Coordinator, CCC Division, No.281, ஜயந்த வீரசேகர மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: அஷ்-ஷைக் எம்.எஸ். அப்துர் ரஹ்மான் அவர்களை 0117-490490 / 0776-206862 எனும் தொலை பேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளவும்.

விஷேட கற்கை நெறியில் இணைந்து கொள்வதற்கான நிபந்தனைகள்

1. அங்கீகரிக்கப்பட்ட மத்ரஸாவில் படித்து பட்டம் பெற்ற வராயிருத்தல் வேண்டும்.
2. 40 வயதுக்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.
3. வகுப்புக்கள் வார இறுதி நாட்களில் ஜம்இய்யாவின் தலைமையகத்தில் நடைபெறும்.
4. தங்குமிட வசதியும் உணவும் இலவசமாக வழங்கப்படும்.
5. மொழிப் புலமையுள்ள மத்ரஸா ஆசிரியர்களுக்கும் தஃவாக் களத்தில் உள்ளோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
6. அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் அங்கத்துவம் பெற்றிருத்தல் வேண்டும்.

கண்டி மாவட்ட முஸ்லிம் அமைப்புகளை ஒருங்கிணைக்கும் முன்னெடுப்பு.

-சிராஜ் மஷ்ஹூர்

கண்டி முஸ்லிம்கள் சகவாழ்வுக்குப் பேர்போனவர்கள். Dr. Lorna Dewaraja வின் 'Muslims of Sri Lanka: One thousand years of ethnic harmony - 900 to 1915' என்ற பிரபல்யமான நூல் இதற்குச் சான்றாக உள்ளது. கண்டி ராச்சிய மன்னர்களுக்கும் மக்க ளுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே பரஸ்பர புரிந்துணர்வும் நல்லிணக்கமும் நிலவியதன் வரலாற்றுப் பதிவு அது. எம்.சி. [illegible] முஸ்லிம் [illegible] மலர்ச்சியின் முன்னோடிகளை ஈன்றெடுத்த பிரதேசம் இது. முஸ்லிம்கள் அதிக [illegible] மாவட்டமான இங்கு நூற்றுக்கும் அதிகமான சிறிய முஸ்லிம் கிராமங்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய இறைவரிச் சட்டமும் குழறுபடிகளும்

தற்போதைய இலங்கை அரசானது, வரி செலுத்துகையில் எளிமைத் தன்மையைக் கொண்டுவருவதற்கும், வரி செலுத்தாமல் இருப்போரை அடையாளம் காண்பதற்கும் புதிய இறைவரிச் சட்டமொன்றை விரைவில் அறிமுகப் படுத்தவுள்ளதாக அறிவித்திருந்தது. ஆயினும், தற்போது உள்ள இக்கட்டான சூழ்நிலையில் இலங்கைக்கு உதவி வரும் சர்வதேச நாணய நிதியத்தின் விற்பன்னர்களின் பரிந்துரையின் பேரில் அல்லது கட்டாயத்தின் பேரில்தான் இந்தச் சட்டமானது அமுலுக்கு வரவிருக் கிறது என்பது பலரும் அறிந்திராத உண்மையாக இருக்கிறது.

இலங்கைக்கு நிபந்தனையுடன் கூடிய கடன் உதவிகளை வழங்கிவரும் சர்வதேச நாணய நிதியமானது புதிய இறைவரிச்சட்டத்தின் அமுலாக்கத்தை வலியுறுத்தியிருந்ததுடன் அதன் அமுலாக்கலின் பின்பே உறுதிமொழி வழங்கப் பட்ட மிகுதிக் கடன்தொகை வழங்கப் படக்கூடும் என்கிறவகையில் அறிவிப் புக்களையும் வெளியிட்டு வந்தது. எனவே, சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்த வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில் நிதியத்தின் விற்பன்னர் கள் உள்ளனர்.

நிதியத்தில் அங்கத்துவமாகவுள்ள நாடான கானா நாட்டின் மீது தம்மால் அமுலாக்கப்பட்ட இறைவரி சட்டங் களுக்கு ஒப்பான ஒன்றை இலங்கைக்கு பரிந்துரையும் செய்ய அதனையே, தற் போது இலங்கை அரசு நடைமுறைக்கு கொண்டுவர பெரும் பிரயத்தனம் மேற் கொண்டு வருகிறது. அவ்வாறு புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்துவதும், நிதியத்தை திருப்திப்படுத்தி நமக்கான நிதியை பெறுவதும் தவறில்லை. ஆனால், அவ்வாறு அறிமுகம் செய் கின்ற வரிச் சட்டங்களானது எவ்வளவு தூரம் நமது நாட்டுக்கு பொருத்தமான தாக இருக்கும்? தற்போதுள்ள சட் டத்தை விட வினைத்திறனானதா என எல்லாவற்றையும் கவனத்தில் கொள் வதும் அவசியமாகிறது.

ஆனால், கணக்காளர்கள் மத்தியிலும், அக்கறையுடைய தரப்பினர் மத்தியிலும் இலங்கை அரசு ஒரு புறக்கணிப்பு தன் மையுடன் இந்தச் சட்டத்தை அமுலாக்க

விளைவது விவாதப் பொருளாக மாறி யிருக்கிறது.

தற்சமயம் நடைமுறையில் உள்ள இலங்கையின் இறைவரிச் சட்டம் கூட காலத்துக்குக் காலம் மெருகேற்றப்பட்டு தான் இந்த நிலையை அடைந்திருக்கி றது. தற்போது நடைமுறையில் உள்ள வருமான வரி நடைமுறையானது 1932 ஆம் ஆண்டிலேயே அறிமுகம் செய்யப் பட்டது. இந்த வரியினை நிர்வகிக்க குறித்த ஆண்டிலேயே இலங்கையில் வருமான வரித் திணைக்களம் உருவாக் கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. அதற்கு பின்னதாக ஆதனவரி, முத்திரை வரி என பல்வேறு வரிகளும் தொடர்ச்சியாக அறிமுகம் செய்யப்பட்டு வந்ததுடன், அவற்றினை எல்லாம் நிர்வகிக்கும் ஒரு அலகாக வருமானவரித் திணைக்கள மானது இறைவரித் திணைக்களமென பெயர் மாற்றம் பெற்றது.

அதற்கு பின்னதாக, 1958 ஆம் ஆண்டு கல்டோர் ஆணைக்குழுவின் முன்மொழி வுகள் பிரகாரம், மேலதிக வரிகள் சட் டத்தில் உள்வாங்கப்பட்டதுடன் இறை வரித் திணைக்களம் உள்நாட்டு இறை வரித் திணைக்களம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மீண்டும் 1974 இல் இறைவரித் திணைக்களச் செயற்பாடு கள் மற்றும் வரிச் சேவைகள் மீள மைக்கப்பட்டதுடன், அதன் பின்னதாக தேவை ஏற்படுகின்ற போதிலும், வரவு-செலவு திட்டத்திலும் வரிமுறைமை யில் மாற்றங்கள் செய்யப்பட்டே வரு கின்றன.

அண்மையில்தான் RAMIS என்கிற முறைமையினூடாக வரிமுறை நவீன மயப்படுத்தப்பட்டிருந்தது. இந்தநிலை யில், முழுமையாக புதியவொரு இறைவரிச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வருவது என்பது நடைமுறைச் சிக்கலானதும், சர்ச்சைக்குரியதாகவும் மாறியிருக்கிறது.

புதிய இறைவரிச் சட்டத்தின் உள்ள டக்கங்கள் இலங்கையின் தற்போதைய இறைவரிச் சட்டத்தை மேலும் வினைத் திறன் வாய்ந்ததாக மாற்றும் திட்டங் களையும், வரி செலுத்தாதோரை கண்ட றியக்கூடிய முறைமைகளையும் கொண் டுள்ளபோதிலும், இன்னமும் வினைத் திறன் வாய்ந்ததாக மாற்றப்படவேண் டிய விவாதத்துக்குரிய அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது. அவை என்னவென்றும் அனைவரும் அறிந்தி ருக்க வேண்டியது அவசியமே.

காரணம், நாளை இந்தச் சட்டம் அமுலாக்கப்பட்டால் நீங்களோ உங்கள் குடும்பத்தில் ஒருவரோ இதனால் பாதிக் கப்படும்போது, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நீங்களும் பாதிக்கப் படக்கூடும்.

புதிய இறைவரிச் சட்டத்தில் தெளி வற்ற தன்மையைக் கொண்டுள்ள சில விடயங்கள் வருமாறு -

- நடைமுறையில் உள்ள இறை வரிச் சட்டத்தின் பிரகாரம், வரி செலுத் துகையில் ஏதேனும் தவறுகள் இருப் பின், இறைவரி திணைக்களம் தனிநப ரையோ அல்லது நிறுவனத்தின் அதிகாரி களையோ மதிப்பீடு செய்வதற்கு தகுந்த காரணங்களை வழங்கி அழைக்க முடி யும் அல்லது வழக்குகளை தொடர முடியும் எனவுள்ளது. ஆனால், புதிதாக வரவுள்ள சட்டத்தில் தகுந்த காரணங் களை வழங்காமலே முறைப்பாட்டை யோ அல்லது தண்டப்பணத்தினையோ விதிக்கக் கூடியதாக உள்ளது. இது, மேன்முறையீடு செய்ய விரும்புபவர்கள் உட்பட அனைவருக்குமே எத்தகைய காரணத்துக்காக இது மேற்கொள்ளப் படுகிறது என்பது தெரியாமலே போகக் கூடிய வாய்ப்புக்கள் ஏற்படும். குறிப் பாக, காரணமின்றி இறைவரி திணைக் களத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக மேன்முறையீடு உட்பட வழக்குகளை தொடுக்க முடியாத நிலை உள்ளதால், இது வரி செலுத்துவோர் பக்கத்தின் பாதகமாக பார்க்கப்படுகிறது.

- தற்போதைய இறைவரிச் சட்டத் தின் பிரகாரம் வருமானவரி தொடர் பிலான மதிப்பீட்டுக்கான கால அளவு சமர்ப்பிக்கப்பட்ட காலத்திலிருந்து 18 மாதங்களாக உள்ளது. ஆனால், இது புதிய சட்டத்தின் பிரகாரம் 4 வருடங் களாக மாற்றப்பட்டுள்ளது. இறைவரித் திணைக்கள செயற்பாடுகளை நவீன மயப்படுத்துவதில் தற்போதைய அரசு மும்முரம் காட்டி வருகிறது. இதன் பிர காரம், தற்போது நடைமுறையில் உள்ள 18 மாதகால அளவீடுகளை குறைக்க வேண்டுமே தவிர, இவ்வாறு 4 வருடங் களுக்கு அதிகரிப்பது என்பது கேலிக் குரியதாக இருக்கிறது.

- தற்போதுள்ள இறைவரிச் சட் டம் கூட மிகவும் இறுக்கமான கட்டுப் பாடுகளை தன்னகத்தே கொண்டுள்ளது. இதன் பிரகாரம், பெரும்பாலான நிறு வனங்களும், தனிநபர்களும் விதிக்கப் பட்ட கால எல்லைக்குள் வரிசார்ந்த விடயங்களை சமர்ப்பிக்கிறார்கள். கால எல்லையை அதிகரிப்பது என்பது, தவறு களுக்கு அதிக இடம்கொடுப்பதுடன், கால அளவை அதிகரித்துச் செல்லும் போது பழைய தரவுகளை விசாரிப்ப தென்பதும் கடினமாகிக் கொண்டே செல் லும். நம்மைவிட பெரிய நாடான இந்தியா கூட மதிப்பீட்டுக்கான கால எல்லையாக ஒரு வருடத்தையே கொண்டுள்ள நிலையில், நாம் நான்கு வருடங்களை நோக்கிச் செல்வது வேடிக்கையானதே!

- நடைமுறையில் உள்ள இறை வரிச் சட்டத்தின் பிரகாரம், தனிநபர் ஒருவர் வழங்கப்பட்ட கால எல்லைக் குள் மேன்முறையீட்டை செய்யாத போதிலும், மதிப்பீட்டுக்கு (Assessment) எதிராக ஆட்சேபனை மனுவை தாக்கல் செய்ய முடியும். ஆனால், இது புதிய சட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. இதனால் சிறிய வரி செலுத்துவோரும் பாதிப்படையக்கூடும்.

- புதிய இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் நிறுவனங்களுக்கு அல்லது தனிநபர்களுக்காக ஆண்டு வருமானங் களை தயாரித்து சமர்ப்பிக்கும்போது, அதற்குப் பொறுப்பான கணக்கிட்டாளர் விபரமும், கையொப்பமும் உள்ளடக் கப்பட வேண்டும் என குறிப்பிடப் பட்டுள்ளது.

(பக்.14)

Diploma In
HOTEL MANAGEMENT & Hospitality
★ Front Office
★ Food & Beverages
★ International Cookery
★ Language - French & English
★ IT (Information Technology
★ House Keeping
★ Pastry & Bakery
Duration 4 Months
பாடநெறி ஆரம்பம் Batch 14 Sep - 11
உயர்தரமான நட்சத்திர ஹோட்டல்களில் கொடுப்பனவுகளுடன் கூடிய ஆறுமாத தொழில் பயிற்சி வழங்கப்படும்

Diploma in
ENGLISH+IT
with Skills Training
குறகிய காலத்தில் ஆங்கிலத்தில் கதைக்க வைக்கும் ஒரே பாடநெறி
கணனி பயிற்சியுடன் கூடிய ஆங்கிலப் பாடநெறி
02 Months
முழுநேர வதிவிட / வதிவிடமற்ற
தினமும் 03 மணித்தியாலத்துக்கு அதிகமான பேச்சுப் பயிற்சி
IT: MS-OFFICE HARDWARE COMP-ACCOUNTING
பாடநெறி ஆரம்பம் 66th Batch Sep - 06
- WITH GRAMMAR - Reading Writing Listening Speaking
Weekly 06 Days 9:00 to 4:00
பாடநெறி முடிவில் சர்வதேச ISO தரச் சான்றிதழ் உட்பட 03 Diploma சான்றிதழ்கள் வழங்கப்படும்

DIPLOMA IN
COMPUTERIZED ACCOUNTING
Contents
LEARN 08 PACKAGES
Petty cash& Day book
General ledger, journal
Bank reconciliation statement
Debtors and creditors ledger
Sales and purchase registers
Fixed asset registers
Inventory
Profit and loss accounts
Balance sheets
Payroll
MS Excel
MS Access
MYOB
Quick Books
ACCPAC
SAGE-50
Peachtree
Tally
Duration: 1-3 Months Full Time/Part Time (Weekdays/Weekends)
Free Study Pack with Software CD
Individual Classes

DIPLOMA IN
AIRLINE TICKETING
Course Contents
★Airline Ticketing
★Air Fare Calculation
★Airline Geography
★Operation of a Travel Agency
★Airline & Travel Terminology
★Reservation Procedures
★IATA International Regulations
★Basics of GDS & Cargo
Individual classes also available
Duration: 1-3 Months Full Time/Part Time

Teacher Training
Program in Kandy
Well qualified panel of Lecturers with American Qualification
● DIPLOMA IN MONTESSORI TEACHER TRAINING -(AMI)
● DIPLOMA IN CHILD PSYCHOLOGY
● DIPLOMA IN PRE SCHOOL TEACHER TRAINING
● PROFESIONAL ENGLISH
6 மாதம் Weekends
பாடநெறி முடிவில் 2 சர்வதேச சான்றிதழ்கள் உட்பட 5 சான்றிதழ்கள் வழங்கப்படும்.
With TVEC, UK & Indian Accreditation
பாடநெறி ஆரம்பம் Batch 14 Sep - 10
TOEIC City&Guilds EDFOCUS

DIPLOMA IN
AIR CONDITIONING & REFRIGERATION
100% செயல்முறைகளுடன்
● A/C Repairing
● Refrigeration repairing
● House wiring
Start Sep - 11
01 Month (Full Time) - Weekly 05 Days

AUTO CAD
Full Time / Part Time
G.C.E. O/L, A/L
Diploma in AUTO CAD
MEP in AUTO CAD
Advanced Diploma in AUTO CAD
★ ★ ★ INDUSTRIAL TRAINING CAN BE PROVIDED ★ ★ ★

ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான தங்குமிட வசதிகள் உண்டு
GOLDEN COLLEGE
548, Peradeniya Road, Kandy.
No:138/C, Kandy Road, Thihariya
Kandy 0777 222 529
THIHARIYA 0777 222 528

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியாகத்தை வேண்டி நிற்கும் தியாகத் திருநாள்

நபி இப்ராஹீமுடைய தியாகத்தை நினைவுபடுத்தும் ஹஜ்ஜுப் பெருநாள் முஸ்லிம்களால் கொண்டாடப்படுகிறது. தனக்கு வழிகாட்டல் வழங்கிய இறைவனின் கட்டளை எதுவானாலும் அதனை சிரமேற்கொண்டு நிறைவேற்றுகின்ற அர்ப்பணிப்பையும் விசுவாசத்தையும் இந்தத் தியாகத் திருநாள் எடுத்தோம்புகின்றது.

தனது சமூகத்தை தனக்கு வழிகாட்டிய இறைவனின் பால் அழைப்பதில் நபி இப்ராஹீம் அடைந்த துன்பங்கள் ஏராளம். பலஸ்தீன், எகிப்து, மக்கா எனப் பல பிரதேசங்களுக்கும் இவர் அலைக்கழிக்கப்படுகிறார். காடுகளால் இருளாகிப் போன வனாந்தரத்தில் இவர் வசிக்க நேரிடுகிறது. யாருமற்ற காட்டுக்குள் தனது குடும்பத்தை அனாதரவாக விட்டு விட்டுச் செல்ல நேரிடுகிறது. சத்தியத்தை மக்கள் முன் எடுத்துரைத்ததால் சத்தியத்தை மறுத்த மக்களால் இவர் எரியும் நெருப்பில் வீசி எறியப்படுகிறார். இத்தனையையும் தாண்டி வந்ததால்தான் சத்தியத்தை நோக்கிய அவரது அழைப்பு வெற்றி பெறுகிறது.

இந்தப் பெருநாளைக் கொண்டாடும் இலங்கை முஸ்லிம்களும் நபி இப்ராஹீம் எதிர்நோக்கிய சோதனைகளால் சூழப்பட்டுள்ளனர். முஸ்லிம்களுடைய இருப்பிடங்களில் இருந்து அவர்கள் பெயர்க்கப்பட்டு புகுந்த இடத்திலும் வாழ முடியாமல், இருந்த இடத்திலும் குடியேற முடியாமல் அலைக்கழிக்கப்படுகின்றனர். இரவோடிரவாக தமது நிலங்கள் பறிபோவதை அவர்கள் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்புறமும் இனவாதத் தீ பரவி இருக்கும் சூழலில் அச்சத்துடன் பலர் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கண் முன்னாலேயே தமது நிலங்கள் பறிக்கப்பட்ட போதும் செய்வதறியாது முடங்கிப் போயிருக்கிறார்கள். சமூகத்துக்குள்ளாலும் வெளியிலும் இருந்து தம்மை ஏய்த்துக் கொண்டிருக்கும் நும்ரூதுகளுக்கு எதிராக எதுவுமே செய்வதற்கு வக்கற்று வலுவிழந்து போயிருக்கிறார்கள்.

இந்த மக்களை நோக்கி சமூகம் இந்தத் தியாகத் திருநாளில் தனது தியாகத்தை வெளிப்படுத்த வேண்டியிருக்கிறது. மறிச்சுக்கட்டியிலும், மாணிக்கமடுவிலும் நீலாக்கேணியிலும் காணிகள் பிடுங்கி எடுக்கப்பட்டு அநாதரவாக்கப்பட்ட மக்களின் காணிகளை மீட்டெடுப்பதற்கு முஸ்லிம் சமூகம் உழைக்க வேண்டியிருக்கிறது. தொல்பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் சுவீகரிக்கப்படுகின்ற திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் இருப்பிடங்களைப் பாதுகாப்பதில் சமூகம் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும். தமது சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு முடியாமல் தடைகள் விதிக்கும் சக்திகளுக்கு எதிராகச் செயற்பட முடியாமல் நாதியற்றிருக்கும் மக்களுக்காக உழைக்கின்ற தியாக உணர்வு சமூகத்திடம் வர வேண்டும்.

இவ்வளவு தியாகங்களையும் நோக்கி சமூகத்தை அறைகூவல் விடுக்க வேண்டிய தலைமைகள் ஏட்டிக்குப் போட்டியாக குர்பான் வழிகாட்டல்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற நிலைமையிலிருந்து சமூகத்தின் கவனத்தை திசை திருப்ப வேண்டும். முன்வைக்கப்படவுள்ள மாகாண சபைகள் தேர்தலில் முப்பது வீதம் பெண்களை வேட்பாளராக நிறுத்துவதில் முஸ்லிம் பெண்களுக்கு வழங்க வேண்டிய வழிகாட்டல்கள், உத்தேச இறைவரிச் சட்டத்தினால் இலங்கையின் வியாபாரச் சமூகத்துக்கு வரக் கூடிய பாதிப்புக்கள், உள்ளூராட்சித் தேர்தல்களை புதிய தேர்தல் முறையில் நடத்தினால் முஸ்லிம் பிரதிநிதித்துவம் குறையாமல் பாதுகாப்பதற்கான வழிகாட்டல்கள் என தனது உரிமை சம்பந்தமான பல்வேறு வழிகாட்டல்களை முஸ்லிம் சமூகம் தனது தலைமைகளிடம் இருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் இப்ராஹீம் நபி தனது அனைத்து விருப்பு வெறுப்புக்களையும் விட்டு விட்டு, தனது இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்குச் செய்த தியாகங்களையே முஸ்லிம் சமூகம் தனது தலைமைகளிடம் எதிர்பார்க்கிறது. இந்தத் தியாகங்களையெல்லாம் முஸ்லிம் தலைமைகளும் முஸ்லிம் சமூகமும் செய்தால்தான் தியாகத் திருநாள் அர்த்தமுள்ளதாக மாறும்.

வாசகர்கள் அனைவருக்கும் இனிய தியாகத் திருநாள் வாழ்த்துக்கள். ஈத் முபாரக்!

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையினதும் கருமமாற்றலும் தம்மை அர்ப்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சனைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිෂන් සභාව
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011 5353635
பெக்ஸ் : 011 5335500
மெயில் : srockwood@pcci.lk
இணையத்தளம் : www.pcci.lk

மத்திய வங்கி பிணைமுறி கொள்வனவு மோசடி:

நிதியமைச்சர் சிக்கியது எப்படி?

• ஹெட்டி ரம்ஸி

கடந்த வாரங்களிலிருந்து இலங்கையின் பேசுபொருளாக மாறியிருப்பது ரவி கருணாநாயக்க அவர்களின் பதவி விலகலும், அது சார்ந்த முறி தொடர்பான ஊழல் வழக்குமே ஆகும். அர்ஜுன மகேந்திரன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநராக இருந்தவேளையில், மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட முறிகளின் பரிவர்த்தனையில் மோசடி அல்லது ஊழல் இடம்பெற்று இருக்கலாம் என்கிற சந்தேகத்தின் தொடர்ச்சியாக இடம்பெற்ற நிகழ்வுகளின் உச்ச கட்டமாக முன்னாள் நிதியமைச்சர் விசாரணைக்காக அழைக்கப்பட்டதும், அவரது பதவி விலகலும் பார்க்கப்படுகிறது.

உண்மையில் ரவி கருணாநாயக்கா அவர்கள் விசாரணைக்கு அழைக்கப்படும் வரையில், குறித்த மோசடியை விசாரணை செய்யவென நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் செயல்பாடுகளும், அதன் அறிக்கைகளும் தொடர்ச்சியாக விமர்சிக்கப்பட்டு வந்தவொன்றாகவே இருந்தது. அதற்குபின், நிகழ்ந்தவை எல்லாம் ஒரு சிறிய அரசியல் படம் போன்று வெகுவிரைவாகவே காட்சிகள் நகர்த்தப்பட்டு, விசாரணையின் வீரியத்தையும், அதன் தாக்கத்தையும் வேறு திசை நோக்கித் திருப்புவதாக அமைந்திருந்ததோ என்று சாமானியர்களைக் கூட சந்தேகம் கொள்ளத்தக்க வகையில் அமைந்திருந்தது என்பதனை மறைப்பதற்கில்லை.

சர்ச்சைக்குரிய ஊழல் என்ன?

அர்ஜுன மகேந்திரன் இலங்கையின் மத்திய வங்கி ஆளுநராகவிருந்த 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிதியினை திரட்டிக் கொள்ளும் முகமாக 30 வருட முதிர்வு காலத்தைக் கொண்ட அரச முறியினை இலங்கை வங்கி விற்பனைக்கு அனுமதித்திருந்தது. இதன்போது, அதற்கான வட்டி விகிதம் 12.5% என நிர்ணயிக்கப்பட்டதாக சொல்லப்பட்டாலும், பல்வேறு இடங்களிலும் 9.5% என காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. இதன்போது, முதலீட்டாளர்கள் பலரும் அரச முறிகளை வாங்க ஆர்வம் காட்டியிருந்தார்கள். இவர்களில் பெரும்பாலானோர் அரச முறிகளை 9.5% - 10.5% சதவீத வட்டியில் பெற விரும்பியிருந்தாலும், அர்ஜுன மகேந்திரன் அவர்களது தொடர்பைக் கொண்ட (அர்ஜுன மகேந்திரனின் மருமகன் அலோசியஸ் அவர்களால் வழிநடாத்தப்படும் நிறுவனம்) Perpetual Treasuries Limited உட்பட சில முதலீட்டாளர் மாத்திரம் 11% - 12% சதவீத அளவில் மட்டும் பெற விருப்பத்தை தெரிவித்திருந்தார்கள்.

இறுதியில், மத்திய வங்கியானது 10 பில்லியன் பெறுமதியான முறியை (அறிவித்தலிலும் பார்க்க பத்து மடங்கு அதிகமாக) 9.5% - 12.5% விகித அடிப்படையில் விநியோகிப்பதாக அறிவித்திருந்தது. இதன்போது, மகேந்திரனின் தொடர்புடைய Perpetual Treasuries Limited நிறுவனத்துக்கு 5 பில்லியன் பெறுமதியான 12.5% அதிக வட்டி பெறுமதியில் முறிகள் விற்பனை செய்யப்பட்டிருந்தது. இது குறைவான வட்டி விகிதத்தில் பெற விருப்பம் தெரிவித்த முதலீட்டாளர்களை தவிர்த்து விநியோகிக்கப்பட்டதாக உள்ளது. இதன் விளைவாக, ஒட்டுமொத்தமாக அரசுக்கு சுமார் 1.6 பில்லியன் மேலதிக நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவேதான், குறித்த கொடுக்கல் வாங்கல் மகேந்திரனின் அழுத்தத்தின் பேரில் இடம்பெற்ற ஊழலாக கணக்கில் கொள்ளப்பட்டு ஜனாதிபதியின் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டு இந்த ஊழலை விசாரணை செய்யும் பொறுப்பு விசேட ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டது.

நிதியமைச்சர் சிக்கிக்கொண்டது எப்படி?

அர்ஜுன மகேந்திரன் மற்றும் அவரது மருமகனான அலோசியஸ் ஆகியோர் தமது முதலீடுகளின் அடிப்படையில் பல்வேறு வணிக நிறுவனங்களை இலங்கையில் கூட்டமைத்து வணிகத்தினை நடாத்தி வரும் தொழில் பிரமுகர்களாக இருக்கிறார்கள். ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் ஆணைக்குழு விசாரணைகளை கையிலெடுத்துக் கொண்டபின், அர்ஜுன மகேந்திரன் மற்றும் அவரது மருமகன் ஆகியோர் தொடர்புபட்ட Perpetual Treasuries Limited உட்பட அனைத்து வணிகங்களினதும் கொடுக்கல், வாங்கல்கள் மற்றும் பரிவர்த்தனை அடிப்படையில் தமது விசாரணைகளை ஆரம்பித்திருந்தார்கள்.

இதன்போது, அலோசியஸ் நிறுவனத் தலைவராக உள்ள Walt and Row நிறுவனத்தின் ஊடாக, முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க அவர்களது வசிப்பிடத்திற்கு வாடகை வழங்கப்பட்டு வந்தமை கண்டறியப்பட்டது. இதனை உறுதி செய்துகொள்ள குறித்த வீட்டின் முன்னாள் உரிமையாளரான (குறித்த வீடு ரவி கருணாநாயக்க குடும்பத்தால் தற்போது கொள்வனவு செய்யப்பட்டு விட்டது) அனிக்கா விஜயசூரிய அவர்களிடம் விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பின்னரே, நிதியமைச்சர் இந்த வழக்கில் உள்வாங்கப்பட்டார்.

காரணம், அனிக்கா அவர்களை விசாரணைக்கு அழைத்த வேளையில், அலோசியஸ் அனிக்காவை தொடர்பு கொண்டு குறித்த வீட்டுக்கான மேற்கொள்ளப்பட்ட வாடகை ஒப்பந்தத்தை அழித்துவிடுமாறு கோரிக்கை விடுத்ததையும் ஆணைக்குழு முன்பாக அவரே தெரிவித்திருந்தார். இதன் விளைவாகவே, நிதியமைச்சர் குறித்த வழக்கில் உள்வாங்கப்பட்டார்.

வாடகை வீடு முதல் சொந்த வீடாகியது வரை

அனிக்கா விஜயசூரியவின் கூற்றுப்படி, அவரது ஆடம்பர வீடானது அலோசியஸ் அவர்களினால் ரவி கருணாநாயக்க அவர்களது குடும்பத்துக்கு 6 மாத காலத்துக்கு வாடகைக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த கால அனுபவங்களின் பிரகாரம் அனிக்கா நேரடியாக எந்த அரசியல் பிரமுகருக்கும் தனது வீட்டை வாடகைக்கு வழங்க விரும்பாமை காரணமாக, அலோசியஸ் அவர்கள் அனிக்காவுடன் பேரம் பேசி, குறித்த வீட்டை ஆறுமாத காலங்களுக்கு 11.6 மில்லியன் அடிப்படையில் ஒப்பந்தம் செய்துள்ளார். இதன்போதே, வீட்டை தனது நிறுவனத்தின் பெயரில் வாடகைக்கு எடுக்கின்ற போதும், குறித்த வீட்டில் அமைச்சரும் அவரது குடும்பமுமே வசிப்பார்கள் எனத் தெரிவித்துள்ளார்.

இதன்பின், அனிக்காவுடன் நேரடியாக தொடர்புகொண்ட ரவி கருணாநாயக்க அவர்களின் பாரியார் குறித்த வீட்டை பார்வையிட்டு ஒப்பந்தத்துக்கு சம்மதம் தெரிவித்துள்ளார். எனினும், குறித்த ஒப்பந்தத்துக்கு அலோசியஸ் சார்பாக பரிந்துரைக்கப்பட்ட நிறுவனத்தில் அவர் இயக்குனராக இன்மையால், அமைச்சரின் பாரியார் ஆரம்பத்தில் தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தார். பின்பு, அலோசியஸ் தான் உரிமையாளராகவுள்ள Walt and Row நிறுவனம் மூலமாக ஒப்பந்தம் போடப்பட்டு, அமைச்சரின் குடும்பத்துக்கு வழங்கப்பட்டது. இதன்போது, அனிக்காவுக்கு 1.45 மில்லியன் பணமாகவும், 10.2 மில்லியன் காசோலையாகவும் வழங்கப்பட்டது.

இந்த ஒப்பந்தத்துக்கான பணம் Walt and Row நிறுவனத்துக்கு Perpetual Treasuries Limited நிறுவனத்திலிருந்தே பரிமாற்றம் செய்யப்பட்டது என்பது கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் கண்டறியப்பட்டது. இதுவே, தற்போதைய பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்துள்ளது. காரணம், குறித்த பணம் முறி மோசடி மூலம் ஈட்டப்பட்ட இலாபமாக இருக்கக்கூடும் என நம்பப்படுகிறது.

குறித்த வீட்டில் ஒப்பந்த அடிப்படையில் 6 மாத காலம் அமைச்சரும், அவரது குடும்பமும் வசித்த பின்னர், மேலும் இரண்டு மாதகால நீடிப்புடன் குறித்த வீட்டை கொள்வனவு செய்ய விருப்பம் தெரிவித்ததாக அனிக்கா ஆணைக்குழுவிடம் தெரிவித்து உள்ளார். மேலும், குறித்த வீட்டுக்காக தான்கோரிய 165 மில்லியன் ரூபாவை ரவி கருணாநாயக்க அவர்களது பாரியார் வழங்க சம்மதித்ததன் அடிப்படையில், குறித்த வீடு விற்பனை செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். குறித்த விற்பனையும் கருணாநாயக்கவின் குடும்ப உறுப்பினர்களின் உரித்தாகவுள்ள Global Transport and Logistics நிறுவனத்தின் பெயரில்தான் இடம்பெற்று இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நம் முன்னால் தொக்கி நிற்கும் கேள்விகள்

• ரவி கருணாநாயக்க ஆணைக்குழுவினரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டபோது, எந்தவொரு கேள்விக்குமே சரியான பதிலை அளிக்கவில்லை. பெரும்பாலான கேள்விகளுக்கு, தனது குடும்பமே கொடுக்கல், வாங்கல் செயல்பாடுகளில் ஈடுபட்டதால் தனக்கு அது தொடர்பில் தெரிந்திருக்கவில்லை என தெரிவித்தும் இருந்தார்.

• ஒரு நாட்டின் மிக முக்கியமான நிதியமைச்சர் பொறுப்பிலிருந்த ஒருவர் சுமார் 6 மாத காலம் வாடகை எதுவுமே செலுத்தாமல் இலவசமாக ஒரு வீட்டில் குடியிருந்தமை தொடர்பில் தனது பாரியார் மற்றும் குடும்பத்தினரிடம் எந்தவொரு கேள்வியும் கேட்காமல் அல்லது அறிந்து கொள்ளாமல் இருந்தமை ஆச்சரியத்துக்குரியது. அப்படியாயின், அவரினால் நடாத்தப்பட்ட நிதி நிர்வாக செயல்பாடுகளும் எப்படி திறம்பட நடந்திருக்க முடியும் என சந்தேகம் சாதாரணமாகவே வரச் செய்யும் அல்லவா?

• குறிப்பாக, வழக்கு விசாரணையில் வீட்டை வாடகைக்கு எடுத்தது தொடர்பிலும், வீட்டை கொள்வனவு செய்வதற்காக ரவி கருணாநாயக்க அவர்களது பாரியாரினால் Global Transport and Logistics நிறுவனத்தினால் பணம் வழங்கப்பட்டது தொடர்பிலும் கூட தனக்குத் தெரியாது என குறிப்பிட்டிருந்தார். பரிமாற்றப்பட்ட பணங்கள் மில்லியனில் உள்ளபோது, வீட்டில் உள்ள ஒருவருக்கு தெரியாமலே இவையெல்லாம் நடந்திருப்பது விசித்திரமானதாக இல்லையா?

• அதுபோல, Perpetual Treasuries Limited, Perpetual Capital Holdings and Walt and Row ஆகியன ஒன்றுக்கு ஒன்று தொடர்புடையதாக உள்ளதுடன், Perpetual Treasuries Limited 2015 இன் ஆரம்பத்திலேயே ஊழல் மோசடி விடயங்களில் தொடர்புடையதாக கண்டறியப்பட்டுள்ள நிலையிலும், குறித்த நிறுவனத்துடன் தனது குடும்பம் கொண்டிருந்த உறவுகள் தொடர்பில், குறித்த காலத்தில் நிதியமைச்சராக இருந்த ஒருவர் அறிந்திருக்கவில்லை என்பது வேடிக்கையானதாக இல்லையா?

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றவூப் ஸெய்ன்

நல்லாட்சி அரசியல்

தமிழ் - முஸ்லிம் நல்லுறவு

கலந்துரையாடலுக்கான சில முற்குறிப்புகள்

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் அரசியல் கலாசாரம் இந்நாட்டின் மக்களை பிளவுபடுத்தியமை மிகவும் துயரம் நிறைந்தது. ஐரோப்பிய காலனித்துவத்திலிருந்து அரசியல் சுதந்திரம் பெற்ற நாடுகளில் பாராளுமன்ற ஜனநாயகம் என்பது பெரும்பான்மை மக்களின் ஜனநாயகமாகவே கருதப்பட்டது. ஐரோப்பியர்களும் கணித ரீதியில் பெரும்பான்மையாக இருந்த மக்களிடமே சுதந்திரத்தைக் கையளித்தனர். இலங்கை போன்று ஆசியாவின் பல்வேறு நாடுகளுக்கும் இந்த உதாரணம் பொருந்துகிறது.

அரசியலில் பங்குபற்றுதலுக்கு வாய்ப்பளிக்கப்படாத சிறுபான்மைச் சமூகங்கள் தம்மை ஒரு தேசமாக முன்னிறுத்த வேண்டிய கட்டாயத்தை சுதந்திரத்திற்குப் பிந்திய பெரும்பான்மை அரசியல் உருவாக்கியது. விளைவாக இனம், மொழி, கலாசாரம், மதம், பிராந்தியம் ஆகிய தேச வரண்முறைக்கான அளவுகோல்களை முன்னிறுத்தும் அவசரத்தில் ஒவ்வொரு இனங்களும் தனித்துச் செயல்பட ஆரம்பித்தன. தனக்குரியதையும் தனக்கானதையும் அரசியல் தளத்தில் தேடும் தேசிய இனங்களின் முயற்சிகள் இறுதியில் பாரிய சமூகப் பிளவுகளையும் பிரிவுகளையும் உருவாக்கி விட்டன.

1960களுக்குப் பின்னர் இன ரீதியான சிந்தனை எல்லாத் தளங்களிலும் வேகமாகப் பரவியது. கல்வி, பொருளாதாரம், அரசியல், நிருவாகம் என அது எதனையும் விட்டு வைக்கவில்லை. இனப் பாடசாலைகள் தோன்றியது போல இனரீதியான அரசியல் கட்சிகளும் களத்திற்கு வந்தன. 70 களுக்குப் பின்னர் பேரினவாத அரசாங்கங்கள் பின்பற்றிய சிறுபான்மை மக்களுக்கு எதிரான அணுகுமுறைகள் -குறிப்பாக தமிழ் சமூகத்தை விரக்தியடையச் செய்தது. பல்கலைக்கழக வெட்டுப் புள்ளி தரப்படுத்தல், யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் எதிர்கொண்ட இராணுவக் கெடுபிடிகள் போன்றன தமிழ் இளைஞர்களை கொதிப்படையச் செய்தது.

1980 களில் அது ஓர் ஆயுதப் போராக வெடித்து, 30 ஆண்டு காலம் போரில் விரயமாகியது. இலங்கையின் இனப் போர் அடிப்படையில் சிங்கள - தமிழ் சமூகங்களுக்கிடையிலானதே. தமிழ் ஆயுதக் குழுக்களுக்கும் சிங்கள அரசின் படைகளுக்கும் இடையில் வெடித்த ஆயுதப் போர், துரதிஷ்டவசமாக முஸ்லிம்களையும் அதனுள் இழுத்துக் கொண்டது. பாரிய இழப்பும் வலிகளும் வருத்தங்களும் முஸ்லிம்கள் மீது திணிக்கப்பட்டது.

தமிழ் ஆயுதக் குழுக்களின் தோற்றம், சுதந்திரத்திற்கு முன்னர் தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் நிலவி வந்த சகவாழ்வை அச்சுறுத்தியது. தமிழ் - முஸ்லிம் நல்லுறவை கிடப்பில் போட்டது. இப்போது மீளவும் நாம் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு பற்றிய கலந்துரையாடலைத் தொடங்க வேண்டியுள்ளது. அது வெறுமனே அரசியல் திருகுதாளங்களுக்கோ குறுகிய இலாபங்களுக்கோ அல்ல.

வடக்குக் கிழக்கில் பிட்டும் தேய்காய்ப் பூவும் போல ஒற்றுமையாய் வாழ்ந்த இரு சமூகங்களுக்கிடையில் தொடர்ந்தும் காழ்ப்பும் பகைமையும் வேரூன்றியிருப்பது ஆரோக்கியமானதல்ல. திறந்த கலந்துரையாடல்கள் மூலம் இரு சமூகங்களின் மனக் குமுறல்களையும் பிரச்சினைகளையும் வெளிக் கொண்டு வருவதன் ஊடாக இரண்டு சமூகங்களும் இணைந்தும் இணக்கப்பாட்டுடனும் வாழ முடியும் என்பதை மீண்டும் நாம் நிரூபிக்க வேண்டியுள்ளது.

இன்றைய கொதிப்பான அரசியல் சூழமைவில் இந்த நகர்வு முக்கியமானது. இரு சமூகங்களைச் சேர்ந்த ஒரு சில அரசியல்வாதிகளும் நிருவாக அதிகாரிகளும் தேர்தல் இலாபங்களுக்காகவும் தமது சொந்த அரசியல் பிழைப்புவாதத்திற்காகவும் மென்மேலும் சமூகங்களைக் கூறுபோட எத்தனிக்கின்ற இந்தத் தருணத்தில் தமிழ் - முஸ்லிம் நல்லுறவு பற்றிய இந்த விவாதம் ஆரோக்கியமாக முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் தமிழ் - முஸ்லிம் உறவில் சில கசப்பான பக்கங்கள் இருக்கின்ற போதும் சில இனிப்பான பக்கங்களும் இருந்ததை நாம் நினைவு கூர வேண்டும். வரலாற்றை நேர்ப்படியாக நோக்குவதும் நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் அதற்கேற்ற வகையில் உருவாக்கிக் கொள்வதுமே நமக்கு முன்னாலுள்ள பணியாகும். சுதந்திரத்திற்கு முன்னரும் அதற்குப் பிந்திய சில தசாப்தங்களிலும் தென்னிலங்கையில் காணப்பட்ட முஸ்லிம் பாடசாலைகளில் யாழ்ப்பாணத் தமிழர்கள் ஆசிரியர்களாகக் கடமையாற்றியுள்ளனர். முஸ்லிம் பாடசாலைகளின் அதிபர்களாகவும் அவர்கள் இருந்துள்ளனர்.

இன்னொரு புறம் தமிழ் ஆசிரியர்கள் கடமை யாற்றிய பாடசாலைகளில் அவர்களது உறவினர்கள் என்ற வகையில் குறிப்பிடத்தக்களவு தமிழ் மாணவர்கள் முஸ்லிம்களிடம் கல்வி பயின்றுள்ளனர். பாடசாலைக் கல்வியில் இரு சமூகங்களும் இவ்வாறு இணைந்து செயற்பட்டுள்ளனர். பேரா. எஸ். சந்திரசேகரன், பேரா. கா. சிவத்தம்பி போன்றவர் கள் கொழும்பு ஸாஹிராவின் பழைய மாணவர்கள் என்பதை இந்த இடத்தில் நினைவுகூர வேண்டும்.

வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் இன்று பரவியிருக்கும் பல்வேறு இந்துக் கலாசாரக் கூறுகள், தமிழ் - முஸ்லிம் நெருக்கத்தின் விளைவுகள் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். தாலி, கூறை, சீதனம், குரவை, ஆலாத்தி, மருதோன்டி போன்ற சம்பிரதாயங்கள் இஸ்லாமிய நிலைக்களனில் சரியா பிழையா என்ற விவாதம் ஒருபுறமிருக்க, இக்கலாசார ஊடுருவலின் பின்புறம் தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் நெருக்கம் என்பது தெளிவானது.

இன்றளவிலும் கல்முனைக் கடற்கரை பள்ளிவாயல் கொடியேற்ற நிகழ்வுகளில் தமிழர்கள் கலந்துகொள்வதாகவும் பாண்டிருப்பு திரவ்பதி அம்மன் கோயில் தீ மிதிக்கும் விழாவில் முஸ்லிம்களும் பார்வையாளர்களாகக் கலந்துகொள்கிறார்கள் என்று றமீஸ் அப்துல்லாஹ் குறிப்பிடுவது இங்கு கவனிக்கத்தக்கது.

தமிழ் வரலாற்றாசிரியர் சிற்றம்பலம் கூறுவது போல கிழக்கில் மட்டக்களப்பு பிராந்தியத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் மிக அந்நியோன்யமாக வாழ்ந்து வந்துள்ளனர். கிழக்கின் வரலாற்றை எடுத்தியம்பும் மட்டக்களப்பு மாண்மியம் எனும் நூல், இந்த உறவுகளின் சுவாரஸ்யமான பக்கங்களை எடுத்துரைக்கின்றது.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பிட்ட ஒரு தமிழ் கிராமத்தில் தமிழர்களுக்கு உதவி ஒத்தாசை வழங்கிய முஸ்லிம்களுக்கு நன்றியுரைக்கும் அடையாளமாக தொப்பி அணிந்த சிலையொன்றை வடித்து வைத்துள்ளனர் என சிற்றம்பலம் கூறுகின்றார்.

தெற்கில் -குறிப்பாக மலைநாட்டில் இரண்டாம் ராஜசிங்கன் போர்த்துக்கேயரை எதிர்த்து போராடுவதற்கு இந்திய முஸ்லிம் மன்னன் சொமரினிடமிருந்து ஒட்டகப் படையொன்றை உதவிக்கு வரவழைத்துத் தருமாறு இலங்கை முஸ்லிம்களை வேண்டிக் கொண்டான். முஸ்லிம்களும் இப்படை உதவியைப் பெற்றுக் [illegible] நினைவுகூரும் விதமாக [illegible] விகாரைக்கு இரண்டாம் ராஜசிங்கன் அன்பளிப்புச் செய்த காணிக்கை சிலையில் முஸ்லிம்களின் ஒட்டகப் படையை அவன் வரைவதற்கு ஏற்பாடு செய்தான். இன்றும் அது ஹங்குரங்கெத்த விகாரையில் உள்ளதாக வி. வாமதேவன் என்ற வரலாற்றாசிரியர் கூறுகின்றார்.

முஸ்லிம்கள் தெற்கிலும் வடகிழக்கிலும் சிங்களவர்களோடும் தமிழர்களோடும் நல்லுறவு பாராட்டியுள்ளனர் என்பதற்கு இவ்விரு சம்பவங்களும் தெளிவான உதாரணங்களாகும். இறுதிக் கட்டப் போரில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த இலட்சக் கணக்கான தமிழ் அகதிகளுக்கு காத்தான்குடி பள்ளிவாயல்கள் சம்மேளனம் அம்பாறை மாவட்ட பள்ளிவாயல்கள் சம்மேளனம் என்பவை மில்லியன் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருட்களையும் வழங்கி, மனிதாபிமான உதவிகளைச் செய்தனர்.

1983 ஜூலைக் கலவரத்தின் போது ஆயிரக்கணக்கான தமிழர்களை தலைநகர் உள்ளிட்டு நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்த முஸ்லிம்கள் தமது வீடுகளில் வரவேற்று, அடைக்கலம் வழங்கி, சில நாட்களுக்கு விருந்தளித்துப் பாதுகாத்தனர். தமிழர்களுக்கு தொப்பி அணிவித்து முஸ்லிம்களாகக் காட்டிய சம்பவங்கள் வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இப்படி இனிப்பான பக்கங்களுக்கு ஏராளமான உதாரணங்களை அடுக்கிச் செல்லலாம். துரதிஷ்டமாக ஆயுத இயக்கங்களின் தோற்றத்திற்குப் பின்னர் புலிகளும் ஏனைய தமிழ் ஆயுதக் குழுக்களும் முஸ்லிம்களை தூய சைவ வேளாள தாயகத்தின் எதிரிகளாகப் பார்க்கத் தொடங்கினர். 1990 களில் பொலன்னறுவை மாவட்டத்தில் அழிஞ்சிப்பொத்தானையில் புலிகள் அப்பாவி முஸ்லிம்களை சுட்டுக் கொன்றனர். காத்தான்குடியில் பள்ளியில் தொழுதுகொண்டிருந்த நூற்றுக்கு மேற்பட்ட முஸ்லிம்களை புலிகளின் இயந்திரத் துப்பாக்கிகள் வேட்டையாடியன. ஏறாவூர் படுகொலைகள், சம்மாந்துறை படுகொலைகள் என கொலைக் கலாச்சாரம் கட்டவிழ்க்கப்பட்டது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்திற்குப் பின்னரும் கூட முஸ்லிம்களின் மீதான தமிழ் ஆயுதக் குழுக்களின் வன்கொடுமைகள் நிறுத்தப்படவில்லை. எல்லாவற்றுக்கும் உச்சமாக 1990 ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு லட்சம் முஸ்லிம்கள் உடுத்த உடையுடன் விரட்டியடிக்கப்பட்டனர். ஆண்டாண்டு காலமாக தமிழர்களோடு ஒட்டி உறவாடி வந்த வடக்கு முஸ்லிம்கள் வெறுங் கையோடு வெளியேறுவதற்கு வழங்கப்பட்ட [illegible] நீதியாலங்கள் என்பதை [illegible] மாதம் 27 ஆம் ஆண்டாகவும் பட்டதன் விளைவாக ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டது. தமிழ் முஸ்லிம் நல்லுறவை வளர்ப்பதற்கான ஒரு செயலணியை உருவாக்க வேண்டும் என்பதில் உடன்பாடு எட்டப்பட்டது.

பரஸ்பர முன்னேற்றத்தில் இரண்டு சமூகங்களும் பங்களிக்க வேண்டியுள்ளது என்பதும் ஏற்கப்பட்டது. ஆறாத காயங்கள், தீராத வருத்தங்கள் இரண்டு சமூகங்களுக்கு மத்தியிலும் இன்னும் நீடிக்கின்றது என்பது துரதிஷ்டமானதே. எனினும், எதிர்காலத் தலைமுறைகளையேனும் - இனவாதச் சிந்தனையிலிருந்து பாதுகாக்க வேண்டும் என்பதில் அங்கு கருத்தொருமைப்பாடு ஏற்பட்டது.

வடக்கு கிழக்கின் அரசியல் சூழமைவு தொடர்ந்தும் இனத் தேசியத்தை அடிப்படையாகக் கொண் டால் தமிழ் முஸ்லிம் நல்லுறவு சாத்தியமில்லை என்பது ஒரு பொதுவான புரிதலாகும். அரசியல் நிருவாகத் தலைமைகள் தமது சில வெளிப்படையான நடவடிக்கைகள் மூலம் தத்தமது சமூக வாக்குகளைத் தக்க வைப்பதற்கு முயல்கின்றனர். அது இன விரிசல்களையும் பகை முரண்பாடுகளையும் வளர்க்கின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கருணா அம்மான் விடுத்த அறிக்கையொன்று பத்திரிகைகளில் வெளிவந்தது. கிழக்கில் முஸ்லிம் ஆதிக்கத்தை இல்லாதொழிப்பதற்கு அனைத்துத் தமிழ் தரப்புகளும் ஒன்றுபட வேண்டும் என கருணா அறைகூவல் விடுத்திருந்தார். இத்தகைய உணர்ச்சி பூர்வமான கோசங்கள் தமிழ் - முஸ்லிம் நல்லுற வைக் கெடுப்பதற்கே எண்ணெய் ஊற்றும் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.

இன்று நாம் வலியுறுத்தும் தமிழ் - முஸ்லிம் உறவு அரசியல் தேவைகளுக்கு அப்பால் இரண்டு சமூகங்களினதும் உடனடியான சமூகவியல் தேவை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் - முஸ்லிம் நல்லுறவு பற்றிய கருத்தாடலை இரு சமூகங்களையும் சேர்ந்த புத்திஜீவிகளும் செல்வாக்குள்ள சமூகத் தலைமைகளுமே முன்னெடுக்க வேண்டும். அரசியல்வாதிகள் இதை செய்யப் போவதில்லை. அரசியல் ரீதியில் ஏராளமான சிக்கல்கள் இரண்டு சமூகங்களுக்கு மத்தியிலும் உள்ளன. அவற்றை இரு தரப்பு நலன்களின் அடிப்படையில் தாண்டிச் செல்ல வேண்டிய கட்டாயம் இன்றுள்ளது.

இந்த அடிப்படை உண்மைகளை கவனத்திற் கொண்டு தமிழ் முஸ்லிம் நல்லுறவை ஊக்குவிப்பதற்கான செயலணி ஒன்றை உருவாக்குவது இன்றைய உடனடித் தேவையாகும். இது குறித்து நாம் சிந்திப்போமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவோம்

மன்னராட்சிக் காலப்பகுதியில் எமது சமூகம் தொழில் அடிப்படையில் குலமாகப் பிரிந்து காணப்பட்டது. மீன்பிடிப்பவர்களது குலம், மரம் ஏறுபவர்களின் குலம், நகை செய்பவர்களது குலம் என தொழில்கள் அடிப்படையில் குலங்களாகப் பிரிந்திருந்தார்கள். ஆங்கிலேயரின் வருகையைத் தொடர்ந்து அவர்களுக்கு தேவையான வகையில் மாறியவர்கள்- அவர்களுக்குச் சார்பாக இருந்தவர்களை, மதம் மாறியவர்களை - உயர்ந்தவர்களாக வைத்தார்கள்.

இதற்கு முகம்கொடுக்கும் வகையில், பௌத்த தலைவர்கள் ஆனந்த போன்ற கல்லூரிகளையும், முஸ்லிம் மதத் தலைவர்கள் ஸ்ஹிரா போன்ற கல்லூரிகளையும் தமிழ் தலைவர்கள் இந்துக் கல்லூரிகளையும் அமைத்தார்கள். அவற்றுக்கூடாக தங்களது சுயத்தை பாதுகாத்து நவீன கல்வியை பெற முயற்சித்தார்கள்.

சுதந்திரத்திற்கு பின் இலவசக் கல்வி வழங்கப் பட்டது. இதனால் குலமுறை, தொழில்சார் வகுப்பு முறைகள் அடியோடு இல்லாமல் போனது. திறமையாளர்கள் மேழெல ஆரம்பித்தார்கள். ஒரு கட்டத்தில் நாட்டில் பல வெற்றிடங்களை திறமையுள்ளவர்கள் நிரப்பினார்கள். இலவசக் கல்வி முறையில் ஆடைகளும் புத்தகங்களும் இலவசமாகவே வழங்கப்பட்டது. மஹபொல புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. பணம் செலுத்தாமல் கல்வியை பெறுவதற்கான வாய்ப்பு உருவானது.

இவ்வனைத்து வசதிகளும் காணப்பட்டும் இன்று நாம் கற்காதவர்களாக இருந்தால் நாம் பிரயோசனம் பெறாவிட்டால் அது யாருடைய தவறு? கல்வியால் பிரயோசனம் பெற்று தலை நிமிர்ந்து வாழ முயற்சிக்க வேண்டும். மேற்கு நாடுகளில் 14 வயது மாணவர்கள் கூட பகுதி நேர தொழில்களைச் செய்து பாடசாலைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். பல்கலைக்கழக கல்வியிலும் அப்படித்தான். ஆனால் நமக்கு அவ்வாறான நிலைகள் இல்லை.

எல்லா வசதிகளும் எமக்குள்ளன. அதனால் பிரயோசனம் பெற்று முன்னகர்வதே எமது குறிக்கோளாகக் காணப்பட வேண்டும். அதுவல்லாமல், திடீரென வாழ்க்கையில் முன்னேற நினைத்து முச்சக்கரவண்டிச் சாரதிகளாகவும், தொழிற்சாலை ஊழியர்களாகவும் செல்லக்கூடாது.

இன்று உலகின் பெரும்பாலான நாடுகள் வேலைவாய்ப்பின்மை தொடர்பான பிரச்சினையை கதைத்து வருகின்றன. எமது நாட்டிலும் அது இல்லாமலில்லை. தமைமைகளுக்கு ஏற்ப தொழில்களில்லாதது ஒரு பாரிய பிரச்சினையாக விஸ்வரூபமெடுத்துள்ளது. எமது சமூகத்தில் அதிகமான இளைஞர்கள் முச்சக்கர வண்டியோட்டுகிறார்கள். அல்லது வெளிநாடு செல்கிறார்கள்.

இந்நிலை மாற வேண்டும். தமது திறமைகளை இனங்கண்டு அதற்கேற்ற உயர் கல்வியைப் பெற வேண்டும். அதுவல்லாமல் நாம் எமது சமூகத்திற்கு சுமையாக இருக்கக் கூடாது. எமது சமூகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால் கல்வி மிக முக்கியமானதொரு விடயமாக காணப்படுகின்றது. எனவே கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி கல்விக்கான சூழலொன்றை சமூகத்தில் தோற்றுவிக்கும் பணிக்கு எல்லோரும் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும். அதனால் பல பிரச்சினைகளுக்கு தீர்வு பெறலாம்.

இன்று எமது சமூகத்தின் மிக முக்கிய பொறுப்புக்களில் தலைமை வகிக்க வேண்டிய இளைஞர்கள் இன்று அதிகமான சந்தர்ப்பங்களில் பின்வாங்கி வருகிறார்கள். கற்காதவர்கள் பள்ளி நிர்வாக சபைகளில் நியமிக்கப்படுகிறார்கள். இதுமாத்திரமல்லாமல், அரச பதவிகளில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே உள்ளார்கள். இளம் தலைமுறையினர் அவ்விடைவெளியை நிரப்புவதற்கான கல்விமுறையை தொடர வேண்டும். கல்வியின் மூலம் சமூகத்தின் ஒவ்வொரு இடைவெளியும் நிரப்பப்பட வேண்டியுள்ளது.

சமூகத் தலைமைகள் கல்வியின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வூட்ட வேண்டும். குத்பாப் பிரசங்களில் கல்வியின் முக்கியத்துவம் குறித்த சிந்தனைகளை வழங்க வேண்டும். எனவே இளைஞர்கள் சமூகத்தின் தேவையை அறிந்து துறைவாரியான கல்வியை முன்னெடுக்க வேண்டும்.

சுதந்திரப் போராட்டம் இலங்கையில் எந்தவிதக் கருத்தியல் மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை

மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கும் நோக்கத்துடன் கணிசமான தொகையினர் தமது பயணத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். விதைத்த வித்து முளைவிடத் தொடங்கியிருப்பதையே இது காட்டுகிறது. இதனைக் கவனமாக வளர்த்தெடுத்தால் அதனால் முழு நாட்டுக்கும் நிழல் பரப்ப முடியும்.

சமூக மாற்ற இயக்கம் தனிநபரின் சாதனையல்ல. அது சமூகத்தின் கூட்டு ஒத்துழைப்புடனேயே உருவாக்கப்பட வேண்டும். இந்த இயக்கத்தின் முன்னோடிகள் காண்கின்ற கனவு முன்னோர்கள் கண்ட கனவிலும் மாறுபட்டது. அது அரச அதிகாரத்தை எதிர்பார்க்கவில்லை. அரசை பாதுகாக்கவோ மாற்றவோ அது முயற்சிக்கவில்லை. சாக்கடை அரசியலில் இருந்து மக்களை மீட்டெடுத்து மக்களை ஒழுங்கமைப்பதும் எழுப்பிவிடுவதுமே இதன் நோக்கம். மாற்று சமூக அரசியலுக்கான அத்திவாரத்தை இடுவதும் அதன் மீது சமூகத்தைக் கட்டியெழுப்புவதும்தான் இதன் செயற்பாடுகள். இந்தச் செயற்பாடுகளின் மூலமாக சிறந்த மனிதர்களை உருவாக்குவதன் மூலம்தான் சிறந்த சிந்தனையுடைய சிறந்த பொருளாதார பலமுடைய மனிதனை உருவாக்குவது சாத்தியமாகும்.

முதலில் நாம் செய்ய வேண்டியது இது தொடர்பான அறிவை மக்களுக்கு விளக்கி இந்தக் கருத்தில் ஒன்றுபட முடியுமானவர்களை ஒன்றுதிரட்டுவது. பின்னர் இவர்களை அறிவுபூர்வமான வேலைத்திட்டங்களுக்கு உட்படுத்தி, அவர்களை நவீனமயப்படுத்துவது. இதனூடாக அவர்களின் உள்ளார்ந்த காயங்களை குணப்படுத்த முடியும். இனம், மதம், குலம் பேதங்களற்ற, தர்க்கரீதியாகச் சிந்திக்கின்ற, ஒரு முன்னேறிய, செயலூக்கம் உள்ள மனிதனை கட்டியெழுப்புவது இதன் மூலமாக சாத்தியமாகும். சமூகச் சூழல் வளமடைந்து மாற்றுக் கலாச்சாரமொன்றை உருவாக்குவதற்கும் இது வழிவகுக்கும். இவை அனைத்தும் அறிவுபூர்வமான ஒரு குழுமம் ஒன்றை ஒன்றுதிரட்டுவதன் ஊடாகவன்றி சாத்தியமாகப் போவதில்லை.

இலங்கை தொடர்பான அடிப்படைப் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதற்கு நவீனயுகத்துக்கு முன்னரான இலங்கை பற்றிய ஆழமான அறிவு தேவை. இலங்கையின் மக்கள் குடியேற்றங்கள், இன, மதங்களின் தோற்றம், மொழியின் பிரவாகம், அரசியலமைப்பு, காணியுரிமை, குல அமைப்பு, உள்நாட்டு வெளிநாட்டு யுத்தங்கள் பற்றியெல்லாம் தெளிவு இருக்க வேண்டும்.

அதை அடுத்து நவீனயுகத்தில் இலங்கையின் பிரவேசம் தொடர்பில் ஆழமான அறிவு வேண்டும். பிரித்தானியர் மலைநாட்டு ராஜதானியைக் கைப்பற்றி, கோல்புரூக் சீர்திருத்தத்தையும் உருவாக்கி பெருந்தோட்ட வணிகத்திலும் ஈடுபட்டதிலிருந்தே இலங்கை நவீன உலகில் காலடி வைக்கிறது. இதன்பிறகு தான் எல்லை நிர்ணயங்கள் வகுக்கப்பட்டு மத்திய அரசின் நிர்வாகம் ஒன்றின் கீழ் இலங்கையில் புதிய சமூகமொன்று உருவாகிறது. காலனித்துவ ஆட்சி பொருத்தமற்றதாக இருந்தாலும், மானிய முறையின் வீழ்ச்சிக்கு இது தான் காரணமாகியது. இலங்கை மக்களது எதிர்ப்பினால் மானியமுறை வீழ்ச்சி அடையவில்லை என்பதனால் தான் அது தொடர்பில் எம்மிடம் இன்றும் எதிர்வாதங்கள் பிறப்பதில்லை.

தர்மபாலவும் நாவலரும்

இதற்கடுத்து சுதந்திரத்துக்கு முந்திய இலங்கையில் தோற்றம் பெற்ற சமய விழிப்புணர்வு தொடர்பாகவும், அதன்பின் தோற்றம் பெற்ற சுதந்திரப் போராட்டம் தொடர்பாகவும் ஆழமான அறிவு பெற்றிருக்க வேண்டும். பெரும்பாலான காலனித்துவ நாடுகளில் சமயவிழிப்புணர்வின் பின்னரே சுதந்திரப் போராட்டங்கள் துவங்கியிருக்கின்றன. இலங்கையின் பௌத்த இந்து சமயங்களின் எழுச்சியின் நாயகர்களாக அநகாரிக தர்மபாலவும், ஆறுமுக நாவலரும் திகழ்கிறார்கள். இந்திய சமய எழுச்சித் தலைவர்களைப் போல மக்களை ஒன்றுபடுத்துவதற்குப் பதிலாக இவர்கள் மக்கள் பிரிவுகளுக்கிடையே பிளவுகளையே தோற்றுவித்தார்கள். குல அமைப்பின் பாதுகாவலராக விளங்கி நாட்டில் குலபேதத்தையும் விதைத்தார்கள்.

இந்திய தேசிய சிந்தனையைக் கட்டியெழுப்புவதில் சமய எழுச்சி இயக்கத்தை விட சுதந்திரப் போராட்ட இயக்கமே அதிக தாக்கம் செலுத்தியது. இந்திய சுதந்திரப் போராட்டம் குல பேதத்தை குறைத்து, இன மதங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை வளர்ப்பதாக அமைந்தது. அவ்வாறானதொரு போராட்டம் இலங்கையில் நிகழவில்லை. சுதந்திரப் போராட்டம் இலங்கையில் எந்தவிதக் கருத்தியல் மாற்றங்களையும் ஏற்படுத்தவில்லை.

சுதந்திரம் அடையும் போது இலங்கை ஆசியாவின் வளர்ச்சியடைந்த நாடாக இருந்தது. தலா வருமானத்தில் இலங்கைக்கு ஜப்பான் மட்டுமே சவாலாக இருந்தது. சுதந்திரத்தின் பின்னர் இந்த வளர்ச்சியை முன்கொண்டு செல்ல நம்மால் முடியவில்லை. வெகு சீக்கிரத்திலேயே இரத்தக் களரி பெருக்கெடுக்கும் நாடாக இலங்கை மாறியது. நாட்டில் ஒற்றுமையைப் பேணக்கூடியளவு தலைவர்களுக்கு தூரதிருஷ்டியிருக்கவில்லை. அவ்வாறானதொரு ஒற்றுமையை கட்டியெழுப்பும் சூழமைவு மக்களிடமும் இருக்கவில்லை. முரண்பாடுகளுக்கு வித்திட்ட இன, மத வேறுபாடுகள், சமூகத்தையும் அரச இயந்திரத்தையும் அழுக்காக்கிவிட்டன.

மார்க்ஸிஸம்

தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கு மேலதிகமாக புனர்நிர்மாணம் செய்யப்பட வேண்டிய பகுதிகள் தொடர்பில் விடை தேடும்போது, இலங்கை முதலாளித்துவவாதத்தை தொடருவதா என்ற கேள்வியும் கூடவே பிறக்கிறது. இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பின்னரும் இந்தக் கேள்வி எழுந்தது. உற்பத்தியாளர்களுக்கும் உற்பத்திகளுக்கும் இடையில் இருந்த உறவு முறிந்ததனால் ஏற்பட்ட வெடிப்பு தான் மானிய முறையில் இருந்து முதலாளித்துவத்துக்கு எங்களை தள்ளியது.

முதலாண்மை வாதத்துக்கு 300 வருடங்களே ஆனபோதும், இலங்கையின் மானிய முறை அரசாங்கத்துக்கு 2000 வருட வரலாறு உண்டு. மார்க்ஸ் இறந்து 133 வருடங்களே ஆகின்றன. முதலாளித்துவம் அதனது குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிடும் என மார்க்ஸ் கூறிய எதிர்வு கூறல் இன்று பலிக்கவில்லை. ஒரு சமூகத்தில் நிலவுகின்ற உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு அந்தச் சமூகத்தில் இடம் இருக்கும் வரை அந்தச் சமூக அமைப்பு சிதையப் போவதில்லை என மார்க்ஸ் தெரிவித்தார். உற்பத்திச் சக்திகளுக்கு சமூகத்தில் தற்போது இருக்கின்ற அதீத வரவேற்பைப் பார்க்கின்ற பொழுது, இன்னும் பல்லாண்டுகள் முதலாளித்துவம் வாழும் என்றே தெரிகிறது.

சமவுடைமை

முதலாளித்துவத்துக்குப் பகரமாக மனித மூளையில் உதித்த புதியதொரு சிந்தனையை முன்வைத்தது தான் மார்க்ஸ் இடறிய அடுத்த படிக்கல். ஒரு காலத்தில் பலத்த வரவேற்பைப் பெற்ற மார்க்ஸின் சிந்தனைகள், அதனைப் பின்பற்றிய ரஷ்யா போன்ற நாடுகளின் கமியூனிஸச் சிந்தனைக்கான பாதையின் இடைத்தங்கல் முகாமாகத் திகழ்ந்தது. மார்க்ஸை பின்தொடர்ந்தவர்களால் பலவந்தமாகப் பரீட்சித்துப் பார்க்கப்பட்ட இந்த முறை பல்வேறு பரிசீலனைகளின் பின் தோல்வியடைந்தது.

இது தொடர்பில் எழுதிய பேர்ட்ரன் ரஸல், அக்கிரகத்திற்குள் வசிக் கும் மனிதனுக்கும் மட்டுப்படுகின்றது. மனிதன் தனக்கு முன்னர் பொறுப்பேற்றிருந்த உலகளாவிய முக்கியத்துவம் அவருக்கு சொந்தமில்லையென கொபர்னிகஸ்ஸின் காலம் முதல் உறுதிப்படுத்திப்படுத்தப்பட்டிருந்தது. இவ்விடயத்தை புரிந்துகொள்ள இயலாத எவருக்கும் சுய சிந்தனை விஞ்ஞானமாகும் எனக் குறிப்பிடுவதற்கு உரிமையில்லை.

சமவுடைமை நாடுகள் சிதைவடைந்து போன பின்னரும், அது நடைமுறைப்படுத்தலில் வந்த தோல்வியேயன்றி மார்க்ஸிஸ சிந்தனையின் பிழையல்ல என விவாதிக்கின்ற நவ மார்க்ஸ்வாதிகளும் இன்று இருக்கின்றார்கள். இவர்களாலும் முதலாளித்துவத்துக்கு மாற்றீடான சாத்தியமான கொள்கையொன்றை முன்வைக்க முடியவில்லை. எதிர்காலத்தில் முன்வைப்பார்கள் என்று கருதவும் முடியாது.

விரும்பாவிட்டாலும் முதலாளித்துவம் நீண்ட காலம் நிலைத்திருக்கப் போவதாக நாம் கருதினால், அதனால் வரக் கூடிய தீமைகளைக் குறைத்துக் கொள்ளும் விதமாகச் செயற்படுவதே உசிதமானது. ஜேர்மனியிலும் ஸ்கன்டினேவியாவிலும் நடைமுறையிலுள்ள முதலாளித்துவம், ஏனைய முதலாளித்துவ நாடுகளை விட மாற்றமானது. முதலாளித்துவத்தின் பாதிப்புக்களைக் குறைத்து மக்களைப் பாதுகாக்கின்ற முறை அங்குள்ளது. தனது சொத்தை அடகுவைத்து வங்கியில் பணம் எடுத்த ஒருவர் அதனைச் செலுத்த முடியாத நிலை வருகின்ற பொழுது, அவருக்குத் தொழில் கிடைக்கும் வரை அந்தக் கடன் தவணையை நீடிக்கின்ற முறை அங்குள்ளது.

செல்வந்தர்கள் தமது செல்வமீட்டுவதற்கு ஓர் எல்லை வகுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேல் உழைப்பவர்கள் செலுத்த வேண்டிய வரித்தொகை அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஏழைக்கும் பணக்காரனுக்கும் இடையிலான இடைவெளி இவ்வகையான முதலாளித்துவ நாடுகளில் குறை வாகவே இருக்கிறது. நடைமுறைச் சாத்தியமில் லாத விடயங்களில் காலத்தைக் கடத்தாமல் இலங்கையும் இதுபோன்றதொரு முறைக்கு வரவேண்டியிருக்கிறது.

தாராளவாதம்

பிற்போக்குத்தனமாக மார்க்ஸியவாதத்தில் சிக்கியவர்கள் தாராளவாதத்தையும் பிற்போக்கானதாகவே பார்க்கின்றார்கள். மனிதனை நியாயமாக, அறிவுபூர்வமாக சிந்திக்க வைத்தது தாராளவாதமே. உலகின் பயணப் போக்கை மாற்றிய அமெரிக்கப் புரட்சி, ஆங்கிலப் புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி என்பவற்றுக்கு வித்திட்டது தாராளவாதம் தான். இது ஏகாதிபத்திய அரசுக்குப் பதிலாக மக்கள் மைய அரசை கொண்டு வந்தது. நவீன அரசுகளுக்கான பிரதான கொள்கைகள் அனைத்தையும் தாராளவாதமே அமைத்துக் கொடுத்தது. மக்களைப் பாதுகாக்கும் அரசியலமைப்பு, ஜனநாயக அரசு, ஜனநாயகத்தின் தூண்கள் அனைத்துமே தாராளவாதம் வகுத்தவைதான்.

நாங்கள் மார்க்ஸ்வாதிகளாக முன்னர் தாராளவாதிகளாக இருந்திருந்தால் இந்தளவு மோசமான நிலைக்குச் சென்றிருக்க மாட்டோம். சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தவர்கள் தாராளவாதிகளல்லாமல் இருந்திருக்க முடியாது. ஆனால் அவர்களுக்கு தாராளவாதம் தெரிந்திருக்கவில்லை. அவர்கள் டை கோட் அணிந்திருந்தாலும் அவர்களது உள்ளங்களில் மானிய முறையே நிலவியது. தேசம், தேசிய அரசுக் கொள்கைகள் பற்றி இவர்கள் எதனையும் அறிந்திருக்கவில்லை.

நவீன உலகில் பிரவேசித்ததன் பின்னர் தாராளவாதத்தை முன்னெடுப்பவர்களாக பறங்கியர்கள் விளங்கினர். இவர்களில் ரிச்சாட் மோகன் (1821-76), சார்ள்ஸ் லோரன்ஸ் (1829-71) ஆகிய இருவரும் தான் இலங்கைத் தேசத்தவர் அல்லது இலங்கையர் என்ற கருத்தை முதலில் முன்வைத்தனர். இவர்கள் நாட்டை விட்டுச் சென்றிருக்காவிட்டால் சுதந்திரப் பிரகடனத்திலேயே தாராளவாதம் உள்வாங்கப்படுவதற்கான வாய்ப்பு கிடைத்திருக்கும்.

மாற்றமாக மானிய முறையில் நிலவிய குல, இன, மத பேதங்களே தற்போதைய சுதந்திரத்தின் கூறுகளாக இருக்கின்றன. அப்போதைய தலைவர்களுக்கு மனித உரிமை தொடர்பிலான அறிவு கூட இருக்கவில்லை. சோல்பரி யாப்பில் மனித உரிமைகள் தொடர்பில் குறிப்பிடப்படாமைக்கு இது தான் காரணம். 1931 இல் இந்தியா தனக்கென மனித உரிமைகள் சாசனத்தை வரைந்த போதும், 70 களிலேயே இலங்கை அதனை உள்வாங்கியது. இதுவே எமத தலைவர்களின் பின்னடைவைக் காட்டப் போதுமானது.

நவீன உலகில் தாராளவாதம் மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்த போதும் அதுபற்றிய எமது தலைவர்களின் அறியாமையினாலேயே மார்க்ஸிஸம் எமது சிந்தனையில் நுழைந்தது. சோவியத் ரஷ்யாவிலும் சீனாவிலும் பதிப்பிக்கப்பட்ட புத்தகங்களே இங்கு தாராளமாகக் கிடைக்கக் கூடியவையாக இருந்தன. பிரெஞ்சுப் புரட்சியை தெரியாத இலங்கை மக்களுக்கெல்லாம் சோவியத் புரட்சியைப் பற்றி நன்கு தெரிந்திருந்தது.

இலங்கையில் தேசம் ஒன்றைக் கட்டியெழுப்ப முடியாமல் போனமைக்கு மார்க்ஸிய சிந்தனையை இலங்கை வரிந்து கட்டிக் கொண்டதும் முக்கிய காரணமாகும். தேசத்தைக் கட்டியெழுப்புவதில் இடதுசாரித் தலைவர்களுக்கு உறுதியான கருத்து இருந்திருந்தால் அவர்களுக்கு அன்றிருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி இதனைச் செய்திருக்க முடியும். ஆனால் தேசத்தைக் கட்டியெழுப்புவதை விட வகுப்புவாதத்தை வளர்ப்பதே அவர்களுக்கு முக்கியமாகவிருந்தது. இதிலிருந்து தேசத்தைக் கட்டியெழுப்புவதில் மார்க்ஸிய வாதிகளுக்கு அக்கறை இருக்கவில்லை என்பது தெரிகிறது. நாட்டில் இரத்த ஆறு ஓடிய பின்னரே அவர்கள் இதனைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா – இஸ்ரேல் – இந்தியக் கூட்டு ஒரு ஆபத்தான அறிகுறி

பேராசிரியர் அ. மார்க்ஸ்



அ.மார்க்ஸ் பிரபல எழுத்தாளரும், இயற்பியல் பேராசிரியரும் ஆவார். மனித உரிமைப் பணிகளுக்காக களப்பணி ஆற்றிவரும் இவர், இலக்கியம், சமயம், அரச நிறுவனம், தேசியம் என ஒவ்வொன்றுக்குப் பின்னாலுள்ள அரசியலை தனது எழுத்துக்களின் மூலம் தொடர்ந்து கவனப்படுத்தி வருபவர். பேராசிரியர் அ. மார்க்ஸ் மீன்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல் இங்கு தரப்படுகின்றது.

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

- **இந்திய அரசியலின் இன்றை நிலையை எப்படி நோக்குகிறீர்கள்? அதன் எதிர்காலம் எவ்வகையில் அமையும் என கருதுகிறீர்கள்?**

இன்றைய நிலை கவலைக்குரியதாகத்தான் உள்ளது. அமெரிக்கா - இஸ்ரேல் - இந்தியா என்பதாக ஒரு கூட்டணி உருவாகியுள்ளது மிகவும் ஆபத்தான ஒரு போக்கு. 'ஷங்காய் கார்ப்பரேஷன்', அணிசேரா நாடுகள் (NAM) அமைப்பு போன்ற வளர்ச்சி அடையும் நாடுகளின் கூட்டமைப்பு முயற்சிகள் இன்று அர்த்தமற்றவையாகிவிட்டன. அப்படி ஆனதில் இந்தியாவின் பங்கு முக்கியமானது.

காங்கிரஸ் ஆட்சி போய் பா.ஜ.க. ஆட்சி வந்தால் ஈழத் தமிழர்களுக்கு அது ஆதரவாக இருக்கும் எனத் தமிழகத்தில் பேசி பா.ஜ.க.வை மறைமுகமாக ஆதரித்த தமிழ்த் தேசியர்கள் இன்று தலை கவிழ்ந்து கிடக்கின்றனர். இதர அண்டை நாடுகளுடனான -குறிப்பாக நேபாளம், சீனா, பாகிஸ்தான் ஆகியவற்றுடனான உறவும் சீர்கெட்டுள்ளது. உள்நாட்டில் மோடி அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் அனைத்தும் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தியுள்ளன.

காஷ்மீரில் பா.ஜ.க. ஆட்சி ஏற்பட்டபின் நிலைமை பல மடங்கு மோசமாகியுள்ளது. மாநில உரிமைகள் பறிக்கப்படுவது, எருகூ வரி விதிப்பு முறை ஆகியவற்றின் பாதிப்புகள் மக்கள் மத்தி யில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன. பண மதிப்பு நீக்க நடவடிக்கை மக்களுக்குச் சொல் லொணா துன்பத்தை விளைவித்ததோடு அத னால் தேசிய அளவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது எனும் உண்மை இன்று மக்கள் மத்தியில் அம்பலமாகியுள்ளது.

ஆனாலும் இந்த வெறுப்புகளைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள எதிர்க்கட்சிகள் போதிய திறமை யுடனும் வலுவுடனும் இல்லை. காங்கிரஸ் மட்டுமல்ல, இடது சாரிகளும் மாநிலக் கட்சிகளும் கூடப் பலமிழந்து கிடக்கின்றன. பெரும் பான்மை இந்துக்கள் மத்தியில் முஸ்லிம் வெறுப்பை ஊட்டி அதன் மூலம் அரசைத் தக்கவைத்துக் கொள்ள பா.ஜ.க செய்யும் தீவிர முயற்சிகளும் அவற்றின் விளைவான வன்முறைகள் அதிகரிப்பதும் மிக்க கவலை அளிப்பதாக உள்ளன.

- **இந்தியாவில் அண்மைக்காலமாக இந்துத்துவ வாதிகளின் செல்வாக்கு அதிகரித்து வருகின்றது. இது குறித்து.**

இதில் இரண்டு அம்சங்கள் கவனத்துக்குரியன. ஒன்று சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பின் உலகளவில் இப்படியான நவ தாராளவாத, நவ பாசிச சக்திகள் மேலுக்கு வந்துள்ள ஒரு உலகளாவிய போக்கின் ஓரங்கமாகவும் இதை நாம் காண வேண்டு. செப்டம்பர் 11 (9/11) இற்குப் பின் உலகளவில் மேற்கொள்ளப்படுகிற 'பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம்', முஸ்லிம் வெறுப்பு முதலியன பா.ஜ.க. வளர்வதற்கு மிகவும் சாதகமான சூழ்நிலையாக உள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின் உருவான ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்கான வேட்கைகள், பொருளாதாரத்திலும் சிந்தனையிலும் ஓர் இடது சாய்வு, பஞ்ச சீலம்' அணிசேரா நாடுகள் முதலான அறம் சார்ந்த அரசியல் கோட்பாடுகள், அணிசேர்க்கை முயற்சிகள் எல்லாம் இன்று அழிந்துள்ளன. இந்த உலகளாவிய பின்னணியில் இந்தியாவில் ஏற்பட்டுள்ள இந்த மாற்றத்தையும் நாம் காண வேண்டும்.

இரண்டாவதாக, இதில் புரிந்துகொள்ள வேண்டிய அம்சம், பா.ஜ.க எனும் அரசியல் கட்சிக்குப் பின்னுள்ள ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் மிக மிக வலுவான கட்டமைப்பும் வலைப்பின்னலும். மதத்தின் பெயரால் அவர்கள் கட்டமைத்துள்ள எண்ணற்ற அமைப்புகள், அர்ப்பணிப்பு மிக்க தீவிரவாத சக்திகள், காந்தி கொலைக்குப் பின் அவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட காலத்திலும் கூடத் தம்மை அவர்கள் அமைப்பு ரீதியாகத் தொடர்ந்து வலுப்படுத்தி வளர்ந்த முறை ஆகியன அவர்களின் இன்றைய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிறது.

அவர்களின் இந்தத் தீவிரப் பணிக்கு இணையாக இங்கு எந்த அரசியல் கட்சியும் இயக்கமும் இன்று வேலை செய்யவில்லை. பல்லாயிரக் கணக்கான கல்வி நிலையங்கள், 'சாகா'க்கள் எனப்படும் இராணுவப் பயிற்சிகள், 'கர்வாபசி' எனப்படும் மத மாற்றங்கள் என இயங்கும் அவர்களின் தீவிரப் பணிகளை எதிர் கொள்ள இங்கு யாருக்கும் மன உறுதியும் இல்லை.

அத்தோடு இன்று வெளிநாடுகளில் பணி செய்யும் உயர்சாதி இந்தியர்கள் மத்தியில் உருவாகிவரும் ஒருவகைத் தொலைதூரத் தேசியம் (Long Distance Nationalism) பெரிய அளவில் இவர்களுக்கு நிதி சேகரிக்கவும் உலக அளவில் ஆதரவு திரட்டவும் பயன்படுகிறது. இது குறித்து நான் மிக விரிவாக எழுதி வரும் கட்டுரைத் தொடரை (இந்துத்துவமும் சியோனிசமும்) என் முகநூல் பக்கத்தில் காணலாம்.

- **முத்தலாக் தீர்ப்பையும் அதற்கு பின்னாலுள்ள அரசியலையும் எப்படி பார்க்கிறீர்கள்?**

முத்தலாக் முறை இங்கு முஸ்லிம் சமூகத்தில் பல நேரங்களில் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்பது உண்மை. இதற்கு எதிராக முஸ்லிம் பெண்கள் அமைப்புகள் போராடி வருகின்றன. இவர்கள் முஸ்லிம்களின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கு எதிரானவர்கள் அல்ல. குர்ஆனிய நெறிமுறைகளுக்கு மாறாக ஒரே நேரத்தில் முத்தலாக் சொல்லிக் கைவிடப்படும் முஸ்லிம் பெண்களின் நியாயங்களைத்தான் இவர்கள் பேசி வருகின்றனர்.

ஆனால், இங்கொன்றை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். மிகவும் கட்டுப் பெட்டித் தனமான 'அகில இந்திய முஸ்லிம் சட்ட வாரியம்' உட்பட முஸ்லிம் உலமாக்களும் கூட யாரும் இப்படித் தொலைபேசி மூலம், தபால் மூலம் முத்தலாக் சொல்வதை எல்லாம் ஏற்பதில்லை. இருந்தாலும் ஆங்காங்கு இது ஒரு சிறிய அளவில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பது உண்மை. எனவே இதற்கு முடிவு கட்ட வேண்டும் என்பது ஒரு நியாயமான கோரிக்கை.

கூடுதலாக நீங்கள் இதில் புரிந்துகொள்ள வேண்டிய இன்னொரு அம்சம் என்னவெனில், இந்திய நீதிமன்றங்கள் பல காலமாகவே இந்த ஒரே நேர முத்தலாக்கைச் (Instant triple Talaq) சட்டபூர்வமானது என ஏற்பதில்லை. நீதிநெறி முறை ஊடாக உருவாக்கப்படும் கோட்பாடாக (Judicially Evolved Principle) இன்று இது செயல்பட்டு வருகிறது. ஆயிரக் கணக்கான முஸ்லிம் பெண்கள் இதன் மூலம் உரிய நீதி வழங்கப்பட்டுள்ளனர்.

அதேபோல முத்தலாக் சொல்லப்படும் பெண்ணுக்கு உரிய இழப்பீடு வழங்குவது என்பதையும் இந்திய நீதிமன்றங்கள் உறுதியாகக் கடைபிடித்து வந்துள்ளன. குடும்பத்திற்குள் பெண்கள் மீதான வன்முறை என்பதைப் பொறுத்தமட்டில் எல்லோருக்கும் பொதுவான 'குடும்ப வன்முறைத் தடுப்புச் சட்டத்தின்' மூலம் முஸ்லிம் பெண்களும் நீதி பெற முடியும்.

இம்மாதிரியான பல வழக்குகளையும் தீர்ப்புகளையும் நான் எனது நூலிலும் கட்டுரைகளிலும் சுட்டிக் காட்டியுள்ளேன். [illegible] வெளில், கல்வியறி[illegible] வும் குறைந்த முஸ்லிம் சமூகத்திற்குள் இப்படியான உரிமைகள் நடைமுறையில் இருப்பதை எல்லாம் முஸ்லிம் ஜமாஅத்கள், அரசியல் அமைப்புகள், மொத்தத்தில் முஸ்லிம் ஆண்களால் கீழே, குறிப்பாக முஸ்லிம் பெண்கள் மத்தியில் கொண்டு செல்லப்படவில்லை. அதனால்தான் அங்கொன்றும், இங்கொன்றுமாக ஒரே நேர முத்தலாக்குகளும் இங்கே நடைமுறையில் இருந்தன. இதனால் சமூகத்தின் கீழ்த் தட்டில் உள்ள முஸ்லிம் பெண்கள் பாதிக்கப்படக் கூடிய நிலை இருந்தது.

முஸ்லிம் வெறுப்பு ஒன்றையே மூலதனமாக வைத்து இயங்கும் பா.ஜ.க.வின் ஒரு முக்கிய ஆயுதம் முஸ்லிம் தனி நபர் சட்டத்தை (Muslim Personal Law) ஒழித்துக் கட்டுவது. இங்கு சிவில் மற்றும் கிரிமினல் சட்டம், தண்டனைச் சட்டங்கள் எல்லாம் எல்லோருக்கும் ஒரே மாதிரியானதுதான். திருமணம், வாரிசு, வக்ப் சொத்துக்கள் முதலானவை மட்டும் தனி நபர்ச் சட்டத்திற்குள் வருகின்றன. அதையும் ஒழிப்பது என்பது முஸ்லிம்களின் அடிப்படை அடையாளத்தையே அழிப்பது என்கிற வகையில் இந்துத்துவத்தின் இந்த முயற்சியை முஸ்லிம்கள் மட்டுமல்லாமல் நடுநிலையாளர்கள், இடதுசாரிகள் எல்லோரும் எதிர்த்து வருகின்றனர்.

இந்தப் பின்னணியில்தான் இரண்டாண்டுகளுக்கு முன் ஒரு முஸ்லிம் பெண் தனக்கு அளிக்கப்பட்ட முத்தலாக்கிற்கு எதிராக ஒரு முஸ்லிம் பெண் ஒரு வழக்குரைஞரை அணுகினார். அவர் ஒரு பா.ஜ.க ஆதரவாளர். அவர் அந்தப் பெண்ணுக்கு உரிய நீதி பெற்றுத் தருவது என்பதற்கு அப்பால் தலாக்கிற்கே எதிராக அந்த வழக்கைத் தொடுத்தார். அவர் எதிர்பார்த்தபடி இதன் மூலம் அவர் இந்திய அளவில் பிரபலமானார். பா.ஜ.க. அரசும் இதற்கு ஆதரவாகக் களத்தில் புகுந்தது. இதில் வெற்றி அடைந்தால் இதன் மூலம் முஸ்லிம் தனிநபர்ச் சட்டத்தையே ஒழித்து விடலாம் என்பது அதன் கணக்கு.

ஐந்து நீதிபதிகள் கொண்ட ஒரு அரசியல் சட்ட அமர்வு அளித்துள்ள தீர்ப்பு இப்போது வந்துள்ளது. அதன் முக்கிய அம்சங்கள்: (அ) ஒரே நேர முத்தலாக் செல்லாது (ஆ) இந்தத் தீர்ப்பு முஸ்லிம் தனிநபர்ச் சட்டத்தின் மீது பிற விளைவுகள் எதையும் ஏற்படுத்தாது (incobsequential) (இ) தனிநபர்ச் சட்டம் முதலான மக்களின் அடிப்படை உரிமைகளில் தலையிடுவதோ மதம் தொடர்பான நடவடிக்கைகளில் நுழைந்து அவை சரி, தவறு எனச் சொல்வதோ நீதி மன்றத்தின் வேலை அல்ல - என்பன தீர்ப்பின் முக்கிய அம்சங்கள்.

ஆக இது உண்மையில் முஸ்லிம்களின் உரிமைகளை மதிக்கும் தீர்ப்புத்தான். இதன் மூலம் தனி நபர் சட்டங்கள் என்பன அடிப்படை உரிமைகள் (Fundamental Rights) என்கிற அளவிற்கு ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஒரே நேர முத்தலாக் செல்லாது என்பது ஏற்கனவே நடைமுறையில் உள்ளதுதான். எனவேதான் முஸ்லிம் சட்ட வாரியமே இந்தத் தீர்ப்பை ஆதரித்துள்ளது. மோடி அரசு இது ஏதோ தனக்கு வெற்றி எனச் சொல்லிக் கொள்வது தன் ஆதரவாளர்களை ஏமாற்றுவதற்குத்தான்.

- **இந்தியாவில் முஸ்லிம் எதிர்ப்புக்கள் அதிகரிப்பதற்கு பின்னாலுள்ள காரணங்கள் என்ன?**

நான் ஏற்கனவே சொன்னவைதான். இதை உலகளாவிய ஒருவகை அரசியல் அற வீழ்ச்சியின் விளைவாகவும், இந்தியாவின் முஸ்லிம் எதிர்ப்பு அரசியலின் பின்னணியிலும் பார்க்க வேண்டும். கூடுதலாக உலகமயச் செயற்பாடுகளின் ஊடாக மத்திய தர வர்க்கம் ஊதிப் பெருப்பதும் இதில் ஒரு பங்கு வகிக்கிறது. இவர்கள் மத்தியில் தேசப் பாதுகாப்பு / அதற்கு ஆபத்தாக பாகிஸ்தான் அருகமைந்திருப்பது / அது ஒரு முஸ்லிம் நாடாக இருப்பது / இந்திய முஸ்லிம்கள் அதற்கு விசுவாசமாக உள்ளனர் என்பன போன்ற அடிப்படைவாதக் கருத்துக்கள் எளிதில் செல்லுபடியாகின்றன.

- **அண்மையில் நரேந்திர மோடி இலங்கை வந்தார். இப்பின்னணியில் இலங்கையில் இந்திய அரசியலின் தாக்கம் எந்தளவு தூரம் இருக்கும்?**

போருக்குப் பிந்திய சூழலில் கட்டுமானப் பணிகள் உள்ளிட்ட செயல்பாடுகளில் இந்திய மூலதனத்தை விரிவாக்குவது, இலங்கை சீனாவுக்கு நெருக்கமாவதைக் கூடிய வரையில் தடுப்பது என்பனதான் மோடி அரசின் நோக்கம். [illegible] தலைமை முதன்மைப் [illegible] அனுகல் முறை அமைவதற்கு வாய்ப்பே இல்லை. (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுவாய், பயமிலை

அபூ ஷாமில்

மாட்டுச் சமன்பாடு

ஹஜ்ஜுப் பெருநாள் நோன்புப் பெருநாள் போலகளைகட்டாவிட்டாலும் இதனூடே நடைபெறுகின்ற வியாபாரங்களுக்கு மட்டும் இலங்கையின் வியாபாரச் சமூகத்தில் எந்தக் குறைச்சலுமில்லை. ஹஜ்ஜுக்கு அழைத்துச் செல்வதற்காக மக்களைத் திரட்டுவதில் முகவர்கள் மும்முரமாக இருந்தார்கள். குர்பானுக்காக மாடுகளை விற்பனை செய்வதில் மாட்டு வியாபாரிகள் களேபரமாக இருந்தார்கள். இந்த ஆரவாரங்களுக்கு மத்தியில் பள்ளிவாசலுக்கு ஏதாவது வருமானத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என நிர்வாக சபைகள் கூட்டுக் குர்பானை குத்பாக்க ளில் ஓதவைத்தார்கள். வழமையாக கலண்டர்களைத் தூக்கிக் கொண்டுவரும் மத்ரஸா மாணவர்கள் மாட்டுத் தோலை சேகரிப்பதற்காக காத்துக் கிடந்தார்கள்.

இப்படி இன்னோரன்ன ஆர்ப்பரிப்புக்கள் ஹஜ்ஜுப் பெருநாள் மாண்மியத்தில் அடங்குகின்றன. இவற்றுக்குப் பின்னால் நடக்கின்ற தில்லுமுல்லுகளையும் குத்து வெட்டுக்களையும் பார்க்கும் போது இப்ராஹீம் நபியின் கத்தி அறுபட்டிருந்தால் நல்லது போல இருக்கிறது என்று சமூகமே முணுமுணுப்பது கேட்கிறது. ஹஜ்ஜுக்கு முன்னரே மாடுகளை பதுக்கி வைத்து விலையேற்றும் கூட்டம் ஒருபுறம். வயிற்றிலே இருக்கின்ற கன்று மாட்டைப் பற்றி எதுவுமே பேசாமல் அறுப்பதற்காக தாரை வார்க்கின்ற வியாபாரிகள் ஒருபுறம். அறுப்பவர்கள் கூலி கேட்டு குர்பான் கொடுப்பவரை அறுப்பதுவும். அடுத்த அறுப்புக்காகச் செல்லும் அவசரத்தில் மாட்டின் மீது மனிதாபிமானம் காட்ட மறுப்பதுவும், நிறுவனத்தார் வரும் வரைக்கும் மாடுகளைக் கட்டிப் போட்டு வதைப்பதுவும் என பலியிட வேண்டிய பல பாவங்கள் இப்புனித நாட்களில் அரங்கேறுவதைப் பார்த்தால் இந்த ஆதங்கத்திலும் பிழை இல்லை போலத்தான் தெரிகிறது.

இதற்காக குர்பானியே தேவை இல்லை என்று நினைக்குமாற்போல கருத்துரைகள் வழங்குவதும் பொருத்தமானதல்ல. பலருக்கு சமூகத்தின் அவலங்களை ஒட்டுமொத்தமாகப் பார்க்கக் கிடைத்த பின்னர் தான் இது போன்ற யோசனைகள் உதிக்கின்றன. குர்பானிக்குச் செலவழிக்கும் பணத்தில் அனாதைகள், படிக்கின்ற மாணவர்கள் என எவ்வளவோ செய்ய வேண்டியிருப்பதாக சமூகக் களத்தில் வேலை செய்பவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் உழ்ஹிய்யாவின் தாத்பரியம் இறைச்சி மட்டும் அல்ல. இதனூடாக பல விடயங்களை படைத்தவன் நாடுகிறான் என்பதால் உழ்ஹிய்யாவை விட உழ்ஹிய்யாவின் பேரால் நடக்கின்ற அவலங்களை சமூகம் எதிர்க்கப் பழக வேண்டும்.

குர்பான் இந்தளவு போட்டியாக மாறுவதற்கு கடந்த ஒருமாதகாலமாக காதுகளை வந்தடைகின்ற பீரங்கிப் பிரச்சாரங்களுக்கு முக்கிய பங்கிருக்கிறது. மாட்டின் தேகாரோக்கியம், அதனுடைய பிறப்பு, அங்க அவயவங்கள் என மாடு தொடர்பான வியாக்கியானங்கள். பின்னர் மாட்டைக் குர்பான் கொடுப்பவர் நகம் வெட்டலாமா, பல் துலக்கலாமா, முடியென்றால் எந்தெந்த முடிகளை வெட்டக் கூடாது என பல்வேறு விளக்கங்கள். துல்ஹஜ் முதல் பத்தின் நன்மைகளை ஞாபகமூட்டினார்களோ இல்லையோ நகம் வெட்டக் கூடாத நாளை ஞாபகப்படுத்தும் விதமான வட்ஸ்அப் நினைவூட்டல்கள். இது போலத்தான் ஹஜ், உம்ரா என விளம்பரப்படுத்தும் உபன்னியாசங்களும் பயான்களும். கூடவே வானொலி முஸ்லிம் சேவையின் வங்குரோத்துத்தனமும்.

இவைகள் எதுவுமே கூடாது என்பதல்ல. ஆனால் இவை தான் மார்க்கம் என்று கருதிக் கொள்ளும் அளவுக்கு ஊதிப் பெருப்பிப்பதனால் சமூகத்தின் சமன்பாடு சீர்குலையக் கூடாது. சுன்னத்தான குர்பானி பேசப்பட வேண்டும். அதேபோல பறிபோகும் சமூகத்தின் உரிமைகளையும் பேச வேண்டும். பர்ளான ஹஜ்ஜைப் பற்றி உரை நிகழ்த்த வேண்டும். அதே போல சமூகத்திற்காக அல்லாஹ்வின் பெயரில் செலவழிக்க வேண்டிய ஏனைய பகுதிகளையும் பறைசாற்ற வேண்டும். பள்ளிவாசல் நிர்வாகம் சொல்கிறதே என்பதற்காக கூட்டுக் குர்பானை வலியுறுத்தும் மிம்பர்கள், அல்லாஹுதஆலா சொல்லுகின்ற கூட்டு ஸகாத்தையும் ஊக்குவிக்க வேண்டும்.

பணம் புரளுகின்ற, வருமானம் கிடைக்கின்ற விடயங்கள் தவிர்ந்த இன்னும் பல உரிமை சார்ந்த விடயங்கள் சமூகத்திலே பேசப்பட வேண்டியிருக்கின்றன. பல விடயங்கள் சமூகத்தின் கூட்டுச் செயற்பாட்டை வேண்டி நிற்கின்றன. சமூகத்தின் பொருளாதார ஏற்றத் தாழ்வு போலவே சமூகத்தின் அறிவுத் தரதரத்தின் இடைவெளியும் அதிகரித்து வருகிறது. இது குறித்தும் பேசப்பட வேண்டும்.

ரமழான் முழுக்க நோன்பையும், துல்கஃதாவிலே ஹஜ்ஜையும், துல்ஹஜ்ஜிலே இப்ராஹீம் நபியையும் குர்பானையும், ரபீஉல் அவ்வலிலே மீலாதையும் என வகுத்து வைத்துக் கொண்டு ஊதுகுழல்களை உயிர்ப்பிக்கத் தொடங்கினால் இவற்றைத் தாண்டியுள்ள விடயங்களில் சமூகம் மரத்துப் போகத் தான் செய்யும். பின்னர் இஸ்ராயீல் (அலை) ஊதுகுழல்தான் இந்தச் சமூகத்தை மீள எழுப்ப முடியும்.

மியன்மார் இராணுவம் பச்சிளம் குழந்தைகளையும் விட்டு வைக்கவில்லை

மியன்மார் இராணுவம் அந்நாட்டின் ரெக்கைன் மாகாணத்தில் வாழும் சிறுபான்மை ரோஹிங்யா முஸ்லிம்களை குறிவைத்து கொல்லத் தொடங்கியுள்ளது. கடந்த வாரம் இராணுவத்தினால் நிகழ்த்தப்பட்ட கூட்டுப் படுகொலைச் சம்பவங்கள் பல்வேறு இடங்களிலும் பதிவாகியுள்ளது. பெண்கள், வயோதிபர்கள், குழந்தைகள் என்று பாராமல் அனைவர் மீதும் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்துவும் இராணுவம் பால் குடி மறக்காத குழந்தைகளைக் கூட குரூரமாகக் கொன்று வருவதாக சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. இது குறித்த விரிவான கட்டுரையை பக்.09 இல் பார்க்க...

சர்வதேசப் பார்வை

சிரியாவில் மேலதிகமாக 1000 ஈரானியத் துருப்பினர்

அஸதுக்கு ஆதரவாக கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக சிரியாவில் ஏற்கனவே நிலைகொண்டுள்ள ஈரானியப் படைக்கு மேலதிகமாக இன்னும் 1000 துருப்பினரை அங்கு அனுப்புவதற்கு ரஷ்யா இணக்கம் தெரிவித்துள்ளது. பிராந்திய உளவு நிறுவனம் ஒன்று இச்செய்தியை உறுதி செய்துள்ளது.

சிரியாவில் இயங்கும் தாஇஷ் பயங்கரவாதிகளை முறியடிக்கவே இம்மேலதிக துருப்புக்கள் அனுப்பப்படவுள்ளதாக ரஷ்யா தெரிவிக்கின்றது. ஆனால், சுன்னி கிளர்ச்சியாளர்களின் முன்னேற்றத்தைக் கண்டு அஞ்சும் ஈரான், அவர்களை ஒடுக்கவே மேலதிக 1000 படையினரை அனுப்பத் தயாராகின்றது என அறபு இஸ்லாமிய ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

ஏற்கனவே லெபனானைத் தளமாகக் கொண்ட ஹிஸ்புல்லாஹ் ஆயுத இயக்கமும் ஈரானின் புரட்சிப் படையும் சுன்னி முஸ்லிம்களுக்கு எதிராக சிரியாவில் போராடி வருகின்றது. இந்நிலையில், ஈரானும் ரஷ்யாவும் எடுத்துள்ள இத்தீர்மானம் பிராந்தியத்தில் உள்ள அரசியல் கொந்தளிப்பை மென்மேலும் தீவிரப்படுத்தும் என்று ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

நைஜீரியாவின் எண்ணெய் வள அமைச்சரிடமிருந்து 21 மில்லியன் ஊழல் தொகையை அரசு மீட்டது

நைஜீரியாவின் முன்னாள் எண்ணெய் வள அமைச்சர் அலிசன் மதுகே என்பவரிடமிருந்து 21 மில்லியன் அமெரிக்க டொலர்களைக் கைப்பற்றியுள்ளதாக நைஜீரிய நீதிமன்றம் அறிவித்துள்ளது. பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருந்த நிலையில், அலிசன் மதுகேவின் வங்கிக் கணக்கிலிருந்து இத்தொகை மீட்கப்பட்டுள்ளது.

மாநில உயர் நீதிமன்ற நீதிபதி அப்துல் அஸீஸ் அன்கா, உள்நாட்டு வங்கியொன்றில் அலிசன் வைப்பிலிட்டுள்ள பணத்தை உடனடியாக மீளப் பெறுமாறு விடுத்த கட்டளையின் பெயரில் அரசு இப்பணத்தை மீட்டுள்ளது.

நிதி மோசடி மற்றும் பொருளாதார மோசடிக்கு எதிரான நைஜீரிய ஆணைக்குழு அலிசன் மதுகே மீது விசாரணைகளை நடத்தி வந்த நிலையிலேயே நீதிமன்றம் இந்த அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

சமீபகால நைஜீரியாவின் மிகப் பிரபலம் பெற்ற பெண் அரசியல் ஆளுமையாக மதுகே கருதப்படுகிறார். 2015 இல் பதவியிலிருந்து அலிசன் விலகியது முதல் ஊழல், நிதி மோசடி, பொது நிதியை தவறாகக் கையாண்டமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு அவர் உள்ளாக்கப்பட்டிருந்தார்.

யெமனில் சவூதி தலையீடு பாரிய மனிதாபிமான நெருக்கடியை கொண்டுவந்துள்ளது

சவூதி தலைமையிலான வான் படை யெமன் மீது கடந்த இரண்டு ஆண்டுகளாக மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கை மூலோபாய ரீதியில் தோல்வி கண்டுள்ளது. களத்தில் மனிதாபிமான நெருக்கடியைக் கூர்மைப்படுத்தியுள்ளது. எனினும், வெளியேறும் திட்டமின்றி அறபுக் கூட்டமைப்பு தடுமாறி நிற்கின்றது என போர்த் துறை மூலோபாய ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கடந்த வாரம் கசிந்த மின்னஞ்சல்கள் சவூதி அறேபியாவின் பட்டத்திற்குரிய இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான், யெமனில் தமது போரை முடிவுக்குக் கொண்டு வர விரும்புவதை எடுத்துக் காட்டியுள்ளது. அமெரிக்க அதிகாரிகளோடு முஹம்மத் பின் ஸல்மான் நடத்திய பேச்சுவார்த்தைகளின்போது இரண்டு வருட யுத்தங்களிலிருந்து தான் வெளியேறப் போவதாகக் கூறியுள்ளார்.

யெமன் அரசியல் ஆய்வாளர் ஆதம் பரூன், சவூதி அறேபியா தனது தலையீட்டை முற்றாக விலக்கிக் கொள்ள மாட்டாது. அதன் பாதுகாப்பு யெமனின் பாதுகாப்புடன் பெருமளவு தங்கியுள்ளது எனக் கூறியுள்ளார். வறிய நாடான யெமன் மீது சவூதி தலைமையிலான கூட்டணி நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை 15,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு 50,000 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

கடந்த மாதம் மாத்திரம் தலைநகர் சன்ஆவுக்கு அருகில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் 35 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான குழந்தைகள் பட்டினியால் இறக்கும் ஆபத்து நேர்ந்துள்ளது. இத்தகைய நெருக்கடிகள் நிறுத்தப்பட வேண்டுமாயின், அறபுக் கூட்டணியின் வான் தாக்குதல்கள் முடிவுக்கு வர வேண்டும் என ஆதம் மேலும் தெரிவித்துள்ளார்.

எகிப்தில் தொடர்ந்தும் மறுக்கப்படும் ஊடக சுதந்திரம்

எகிப்தில் தொடர்ந்தும் ஊடகவியலாளர்களின் சுதந்திரம் மறுக்கப்பட்டு வருவதற்கு பாரிய கண்டனம் எழுந்துள்ளது. ஊடகவியலாளர்களை கைதுசெய்தல், தடுப்புக் காவலில் வைத்தல், பயங்கரவாதக் குற்றச்சாட்டுக்களின் பெயரில் விசாரணைகள் மேற்கொள்ளல் என தொடர்ந்தும் கருத்துச் சுதந்திரம் எகிப்தின் இராணுவ அதிகாரக் கும்பலால் மறுக்கப்படுகின்றது.

நீண்ட நாட்களாக சிறையிடப்பட்டுள்ள கெய்ரோவின் அல் ஜஸீரா செய்தியாளர் மஹ்மூத் ஹுஸைன், தோரா சிறைச்சாலையில் மருத்துவ சிகிச்சை மறுக்கப்பட்டு வருகின்றார். அதேவேளை, அல்ஜீரியாவின் அல் ஜஸீரா செய்தியாளர் மர்யம் பலைலா தோரா சிறைச்சாலையிலுள்ள ஊடகவியலாளர்கள் குறித்து தனது டுவிட்டர் பக்கத்தில் அதிர்ச்சியூட்டக் கூடிய பல செய்திகளை வெளியிட்டுள்ளார். முஹம்மத் ஹுஸைன் மீதான கடும் சித்திரவதையினால் அவரது இடது கை உடனடியான அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட வேண்டியுள்ளது. எனினும், சிறைச்சாலை அதிகாரிகள் அவருக்குள்ள இந்த உரிமையை மறுத்து வருகின்றனர்.

சிரியாவிலும் லெபனானிலும் ஈரான் ஏவுகணை ஆலைகளை உருவாக்கி வருகின்றது

தனது செல்வாக்கின் கீழுள்ள சிரியாவிலும் லெபனானிலும் ஈரான் ஏவுகணை ஆலைகளை உருவாக்கி வருகின்றது என இஸ்ரேலியப் பிரதமர் நெடன்யாஹு கூறியுள்ளார். ஐ.நா. செயலாளர் அந்டோனியோவுடன் ஜெருசலத்தில் நெடன்யாஹு நடத்திய கூட்டத்தின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இஸ்ரேலை அழிப்பதற்கு தேவையான ஆயுதக் கிடங்காக சிரியாவை மாற்றி வருவதாக நெடன் யாஹு அங்கு குறிப்பிட்டார். சிரியாவில் பஷ்ஷார் அல் அஸதின் அரசாங்கத்தை ஆதரித்து வரும் ஈரான், லெபனானிலும் குறிப்பிட்ட செல்வாக்கைக் கொண்டுள்ளது. சிரியாவின் சிவில் யுத்தம் நீடிப்பதற்கும் சுன்னி பொதுமக்கள் இலட்சக்கணக்கில் கொல்லப்படுவதற்கும் ஈரான் வகை கூற வேண்டும் என்ற குற்றச்சாட்டுக்கள் பலமாக முன்வைக்கப்படும் [illegible] நெடன் யாஹுவின் இக்குற்[illegible] வெளிவந்துள்ளது.

ஈரானும் இஸ்ரேலும் ஒன்றுக்கு ஒன்று போட்டியுடன் பிராந்திய அதிகாரத்தைக் கைப்பற்ற முயல்கின்றன. சிரியாவில் வெற்றிபெற்றுள்ளதாக அறிவித்துள்ள ஈரான், யெமன் தலைநகரும் தங்களது செல்வாக்கின் கீழ் வந்துள்ளது என்று அறிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி புட்டினை சந்தித்த நெடன் யாஹு, ஈரானின் இராணுவ விஸ்தரிப்பை தடுப்பதற்கு இஸ்ரேல் போதுமான நடவடிக்கைகளை எடுக்கத் தயங்காது எனத் தெரிவித்துள்ளார். ரஷ்யா, சிரியாவினதும் ஈரானினதும் நட்பு நாடு என்பது குறிப்பிடத்தக்கது.

[illegible] தாக்குதல்களில் ரஷ்யா மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றது.

கட்டார் கீழ்க்கட்டுமானங்கள் மீதான செலவைக் குறைக்கின்றது

வளைகுடா கூட்டுறவு நாடுகள் கட்டார் மீது விதித்துள்ள பொருளாதாரத் தடையை கருத்திற் கொண்டு கீழ்க்கட்டுமாணங்கள் மற்றும் பொருளாதார கருத்திட்டங்கள் மீதான அரச செலவீனங்களைக் குறைத்துக் கொள்ள அரசு தீர்மானித்துள்ளது. பொருளாதாரத் தடையின் தாக்கங்கள் தீவிரமடையும் பட்சத்தில் இத்தகைதொரு முடிவு கீரியலாக நடைமுறைப்படுத்தப்படும் என்று கட்டார் அரசு அறிவித்துள்ளது. அறபு நாடுகள் ராஜதந்திர உறவுகளைத் துண்டித் துக் கொள்வற்கு முன்னரேயே கட்டார் கீழ்க்கட்டுமான அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடுகளைக் குறைத்துக் கொண்டு வந்துள்ளது.

2014 - 2024 வரையான பத்தாண்டு கால அரச செலவீனங்கள் 180 பில் லியன் டொலர்களிலிருந்து 130 பில்லியன் டொலர்களாகக் குறைக்கப்பட்டுள்ளது. எண்ணெய் மற்றும் எரிவாயுவின் விலைகள் குறைவடைந்ததை அடுத்து கட்டார் ஏற்கனவே இந்த முடிவை எடுத்திருந்தது.

பொருளாதாரத் தடையின் தாக்கங்கள் கூர்மையடைந்து வருவதனால் மென்மேலும் அரச செலவீனகளைக் குறைக்கும் நிலைக்கு கட்டார் தள்ளப்பட்டுள்ளது. கட்டாரின் வெளிநாட்டுச் சொத்து மதிப்பீடு கடந்த ஆண்டில் 185% ஆகக் காணப்பட்டது. தற்போது அது 146% ஆகக் குறைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளவும் குதறப்படும் ரோஹிங்யா முஸ்லிம்கள்

• றவூப் ஸெய்ன்

மியன்மாரில் மீண்டும் இராணுவம் சட்டவிரோதப் படுகொலைகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்படுகின்றது. கடந்த 4 ஆண்டுகளாகக் கொந்தளித்து வரும் ரெக்கைன் மாகாணத்தில் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது மீண்டும் மியன்மார் இராணுவம் தனது இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது.

ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி மியன்மார் இராணுவம் எவ்விதப் பாகுபாடுமின்றி வயோதிபர்கள், பெண்கள், குழந்தைகள் மீது நடத்திய துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் 150 பேர் வரை ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். தொடர்ந்தும் ரெக்கைன் மாகாணத்தில் பதற்றம் நீடிக்கின்றது. அரசாங்கம் இராணுவ ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்திய நிலையில், குடிசைகளிலும் மண் வீடுகளிலும் வாழும் மக்கள் மீது இராணுவம் நேரடியாக தாக்குதல்களை நடத்தி கொத்துக் கொத்தாக மக்களை கொன்று குவிக்கின்றது.

1990 களில் கிழக்கு ஐரோப்பாவின் போல்கன் பிராந்தியத்தில் பொஸ்னிய முஸ்லிம்களுக்கு எதிராக சேர்பிய இராணுவத்தினர் மேற்கொண்ட அதே பாணியிலான இனச் சுத்திகரிப்பு தற்போது மியன்மாரில் இடம்பெறுகின்றது. இத்தனையும் பயங்கரவாதம் மீதான போர் என்ற போர்வையில்தான் நடைபெறுகின்றது.

உண்பதற்கு வழியில்லாது தட்டுத் தடுமாறி நிற்கும் வறிய முஸ்லிம்கள் மீது போலியான பயங்கரவாதக் குற்றச்சாட்டை சுமத்தி, அவர்களை இராணுவம் வேட்டையாடி வருகின்றது. ஒரு வாரத்திற்குள் 800 முஸ்லிம்கள் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்டு இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளனர் என்று அல் ஜஸீராவின் களச் செய்தியாளர் உறுதி செய்துள்ளார்.

ஏற்கனவே முஸ்லிம்களைப் பயமூட்டி, அயல் நாடுகளான பங்களாதேஷ், இந்தியா, மலேசியாவுக்கு இலட்சக் கணக்கான முஸ்லிம்கள் அகதிகளாய் இடம்பெயர்ந்துள்ளனர். ரெக்கைனில் எஞ்சியுள்ள முஸ்லிம்களை மொத்தமாகவே கொன்றொழிக்கும் ஒரு திட்டமிட்ட இனச் சுத்திகரிப்புத் தாக்குதலில் இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

ரெக்கைன் மாகாணத்திலுள்ள முண்டோல் கிராமவாசியான அஸீஸ்கான், தனது கிராம மக்களுக்கு நடந்ததை பின்வருமாறு வர்ணிக்கிறார்.

''மியன்மார் அரச படையினரும் எல்லைப் பாதுகாப்புப் பொலிஸாரும் எமது கிராமத்தை அடைந்தவுடன் சரமாரியாக மக்கள் மீது சுடத் தொடங்கினர். அந்த இடத்திலேயே 11 பேர் சுட்டுச் சாய்க்கப்பட்டனர். மாதக் கணக்கிலான சில குழந்தைகளும் அவர்களது துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தனர்.''

கடந்த வாரத் தாக்குதலில் 10,000 முஸ்லிம்கள் அவர்களின் வீடுகளிலிருந்து இராணுவத்தினரால் வெளியேற்றப்பட்டனர். மத்ரஸாக்கள், பள்ளிவாயல்கள் இராணுவத்தினரால் தீ மூட்டி எரிக்கப்பட்டன. அரசாங்கம் திட்டமிட்டு இவ்வாறான படுகொலைகளை நிகழ்த்தி வருகின்றது. ரெக்கைனை விட்டு வெளியேறாத முஸ்லிம்களை கொன்று குவிப்பதே இனச் சுத்திகரிப்புக்கான ஒரே வழியென அரசும் இராணுவமும் எண்ணுகின்றது.

சமீபத்திய மியன்மார் படுகொலைகள் தொடர்பான வீடியோக்கள் வட்ஸப் பினூடாக பரவி வருகின்றன. அதில் அப்பாவிப் பெண்கள், இளம் பிஞ்சுகள் சுட்டுக் கொல்லப்படுகின்ற காட்சி மனதை உருக்குகின்றது. 2017 ஆம் ஆண்டில் இப்படியொரு காட்சி உலகில் எங்கேனும் இடம்பெறுமா என்ற சந்தேகம் கூட எழுகின்றது.

''இங்குள்ள மக்கள் தமது வீட்டை விட்டு வெளியேறுவதற்குத் தயாரில்லை. பள்ளிகளுக்கோ சந்தைகளுக்கோ வெளியேறிச் செல்ல முடியாது. மக்கள் வீடுகளுக்குள் முடக்கப்படுகின்றனர். முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளை நோக்கி இராணுவம் கண்மூடித் தனமான ஷெல் தாக்குதல்களை நடத்துகின்றது. தமக்கு வேண்டாத, வெறுப்புக்குரிய மக்களாகவே மியன்மார் முஸ்லிம்கள் கருதப்படுகின்றனர். அந்த மனோநிலையோடுதான் அரசும் இராணுவமும் செயல்படுகின்றன. இது இலகுவாகப் புரிந்துகொள்ளக் கூடிய உண்மை'' என்கிறார் அஸீஸ்கான்.

அரசாங்கம் வகைதொகையற்ற இராணுவத்தை ரெக்கைன் மாகாணத்தில் குவித்து வருகின்றது. காஷ்மீரில் இந்திய இராணுவம் குவிக்கப்படுவது போன்று ரெக்கைனில் மியன்மார் இராணுவம் குவிக்கப்படுகின்றது. பெண்கள் தமது உறவினர்களுக்கு முன்னாலேயே பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாக்கப்படுகின்றனர். மிருகங்களை வதைப்பது போன்று மக்கள் வதைக்கப்படுகின்றனர்.

கடந்த 4 ஆண்டுகளாகத் தொடரும் இந்த கொடூரங்கள் குறித்து ஐ.நா. கூட உருப்படியாக எதுவும் செய்யவில்லை. ரெக்கைன் மாகாணத்திற்குள் என்ன நடக்கிறது என்பதை கண்டறியும் உண்மை காணும் குழுவொன்றை அது அனுப்பத் தயாராகியது. ஆனால், மியன்மார் அரசு அதனை மறுத்து வருகின்றது.

ரெக்கைனில் தற்போது நிகழும் இராணுவக் கெடுபிடிகள் அனைத்தும் அங்கு ஒரு திட்டமிட்ட இனச் சுத்திகரிப்பு நடைபெற்று வருகின்றது என்பதை மிகத் தெளிவாகவே உறுதி செய்துவிட்டது. எஞ்சியுள்ள மக்களின் உயிருக்கும் எந்த உத்தரவாதமும் இல்லை.

இந்நிலையில் அறபு முஸ்லிம் நாடுகள் உள்ளிட்டு உலகின் அனைத்து ஜன நாயக அரசுகளும் மியன்மார் அரசின் மீது எந்த அழுத்தமும் பிரயோகிக்காமல் அமைதியாக இருக்கின்றது. இந்தியா மியன்மார் முஸ்லிம் அகதிகளை திருப்பியனுப்பும் திட்டம் குறித்து விவாதித்து வருகின்றது.

பங்களாதேஷின் ஹஸீனா அரசாங்கம் அங்குள்ள மியன்மார் அகதிகளை புறக்கணித்து வருகின்றது. மியன்மாரில் ரெக்கைன் மாநிலத்தில் 11 இலட்சம் ரோஹிங்ய முஸ்லிம்கள் வாழ்கின்றனர். கடந்த பல ஆண்டுகளாக பௌத்த பெரும்பான்மையினரால் அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டு இனச் சுத்திகரிப்புக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். உலகில் நிலமற்ற, நாடற்ற அகதிகளாய் எல்லா முனைகளிலும் அலைக்கழிக்கப்படும் அபலைகளாய் மாறியுள்ள ரோஹிங்யா மக்கள் ரெக்கைன் என்ற திறந்த வெளிச் சிறைச்சாலையில் கொத்துக் கொத்தாகக் கொல்லப்படுகின்றனர்.

நாகரிகமடைந்த உலகமோ இவற்றையெல்லாம் வேடிக்கை பார்த்து மௌனம் காத்து நிற்கின்றது.

இஸ்ரேலின் உள்ளே வாழும் பலஸ்தீனர்களை வெளியேற்றும் திட்டம்

இன்றைய இஸ்ரேலியப் பிரதமர் பென்ஜமின் நெடன் யாஹூ, பலஸ்தீனர்களின் சனத்தொகைக் கட்டமைப்பை மாற்றுவதன் மூலம் இஸ்ரேலின் வரைபடத்தை நிரந்தரமாக்குவதற்கு முயற்சிக்கின்றார். பலஸ்தீன அறபுகள் செறிவாக வாழும் சில கிராமங்களை பலஸ்தீன் அதிகார சபையின் கீழ் கொண்டு வருவதன் மூலம் யூத குடியேற்றத் திட்டங்களுக்கிடையில் ஓர் இணைப்பை உருவாக்க நெடன்யாஹூ திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளார். மனித உரிமைக் குழுக்கள் இஸ்ரேலின் இத்திட்டத்தை வன்மையாகக் கண்டித்துள்ளன.

கடந்த வாரம் இஸ்ரேல் தொலைக்காட்சியில் நெடன் யாஹூவின் இப்புதிய திட்டம் குறித்து அறிவிக்கப்பட்டது. வொஷிங்டன் இதற்கு ஆதரவளிப்பதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குக்கரையிலுள்ள இஸ்ரேலின் சட்டவிரோதக் குடியேற்றத் திட்டங்கள் அனைத்தையும் இணைப்பதன் மூலம் மேற்குக்கரையின் பெரும்பாலான பிராந்தியங்கள் இஸ்ரேலுக்குரியன என்ற விம்பம் கட்டமைக்கப்படும். அதேவேளை, பலஸ்தீன் அதிகார சபையின் ஆட்சிப் பிராந்தியம் சற்று விஸ்தரிக்கப்பட்டுள்ளது என்ற மாயையும் உருவாகி விடும். இந்த உள்நோக்கத்தோடு நெடன்யாஹூ புதிய திட்டத்தை அறிவித்துள்ளார்.

இஸ்ரேலின் தினசரியான ஹாரட்ஸ் பத்திரிகை செய்தியின்படி, பலஸ்தீன் அதிகார சபையுடனான பேச்சுவார்த்தைகளில் நெடன்யாஹூ இத்திட்டத்தை முன்வைக்கவுள்ளார். நெசட் எனப்படும் இஸ்ரேலியப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் யூஸுப் ஜபரின் இது குறித்து கருத்து வெளியிடுகையில், மக்களை வற்புறுத்தி இடம் மாற்றுவதும் யூதக் குடியேற்றத் திட்டங்களை நிலத் தொடர்புள்ள வகையில் இணைப்பதும் சர்வதேச சட்டத்தின் கீழ் சட்டவிரோதமாகும். அது போர்க் குற்றம் என்றே கருதப்படுகின்றது.

இஸ்ரேலின் தயவு தாட்சண்யத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனில் -ஆதாவது இஸ்ரேலில் வாழும்- அறபுப் பிரஜைகளுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படவில்லை. மாறாக, அறேபியர்கள் தமது வரலாற்றுத் தாயக பூமியில் வாழ்ந்து வருவதனாலேயே அவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்படத் தகுதியானவர்கள். மேற்குக்கரையில் குடியேறியுள்ள யூதர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் பலஸ்தீன அறேபியர்களுக்குச் சொந்தமான நிலங்களில் சட்டவிரோதமாகக் குடியேறியிருப்பவர்கள். இந்த இடத்தில் இஸ்ரேலினுள் வாழும் அறேபியர்களையும் மேற்குக்கரையில் வாழும் யூதக் குடியேற்றவாதிகளையும் வேறுபடுத்திப் பார்க்க வேண்டும்.

இஸ்ரேலினுள்ளே இஸ்ரேலிய பிரஜாவுரிமையைக் கொண்டு வாழும் பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 1.7 மில்லியன் ஆகும். அவர்கள் பல்வேறு

நகரங்களிலும் மாநகரங்களிலும் கிராமங்களிலும் வாழ்கின்றனர். அவர்களது அரசியல் சுதந்திரத்தை மட்டுப்படுத்தவும் அரச வளங்களைப் பயன்படுத்துவதைக் குறைக்கவும் அவ்வப்போது இஸ்ரேல் பாராளுமன்றம் கடும் சட்டங்களைப் பிரயோகிக்கின்றது.

ஹைபாவை தளமாகக் கொண்ட அறப் சிறுபான்மை உரிமைகளுக்கான அதாலா சட்ட நிலையம், இஸ்ரேலின் இந்த நகர்வை மிகவும் காரசாரமாக விமர்சித்துள்ளது. நெடன்யாஹூவின் புதிய பிரேரணை யூத இனவாதத்தையும் அடக்குமுறையையும் பிரதிபலிப்பதாக அல் ஜஸீராவுக்கு ஹைபா சட்ட நிலையம் அனுப்பி வைத்துள்ள மின்னஞ்சலில் தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தினால் நேரடியாகப் பாதிக்கப் போகின்ற பலஸ்தீன் அறேபியர்களின் சம்மதம் இல்லாமல் இது குறித்து நெடன்யாஹூவுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பாரதூரமான அரசியல் தவறாகும். அது அறபுகளின் தாழ்வு மனப்பான்மையையும் அதிகாரத்திற்கு அடிபணியும் போக்கையுமே பிரதிபலிக்கும் என அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிலுள்ள அறபுகளை மேற்குக்கரைக்கு இடம் மாற்றும் இந்த நயவஞ்சகமான திட்டம் முன்னைய இஸ்ரேலிய அதிகாரிகளாலும் முன்வைக்கப்பட்டு வந்ததுதான். சர்வதேச நெருக்கடிக் குழுவின் இஸ்ரேல் பலஸ்தீன் ஆய்வாளர் சார்ள்ஸ் பெக், ''கிழக்கு ஜெரூசலத்திலும் மேற்குக்கரையிலும் யூத குடியேற்றவாதிகளிடமிருந்து நெடன் யாஹூ எதிர்கொண்டுள்ள அழுத்தமே இத்திட்டத்தின் பின்னணி என்று தெரிவிக்கின்றார். ஆனால் இதற்கு இஸ்ரேலின் உள்ளே வாழ்கின்ற பலஸ்தீன அறேபியர்கள் கடும் எதிர்ப்பைக் காட்டுவார்கள் எனவும் அவர் கூறுகின்றார். நெடன் யாஹூவுடன் டொனால்ட் ட்ரம்பும் இத்திட்டத்தை முன்னெடுக்கின்றார்'' எனவும் சார்ள்ஸ் பெக் கூறுகிறார்.

கடந்த ஆண்டில் இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சரும் தீவிரவாதியுமான லீபெமன், இஸ்ரேலில் வாழும் பலஸ்தீன சிறுபான்மையினர் வெளியேற்றப்பட வேண்டும் என பகிரங்கமாகவே பிரகடனம் [illegible] கூறத் தக்கது. தற்போதைய [illegible] இஸ்ரேலுக்கும் இடையிலான எல்லைக் கோட்டில் செறிவாக வாழும் பலஸ்தீனர்கள் வெளியேற்றப் பட வேண்டும் என்பது லீபெமனின் கோரிக்கை. கடந்த வாரம் நெடன் யாஹூ தனது திட்டத்தை அறிவித்தவுடன் லீபெமன் தனது டுவிட்டர் பக்கத்தில் அதற்கு உடனடி ஆதரவு வழங்குவதாகத் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஸிபி லிவ்னியும் (இவர் ஒரு மத்திய சியோனிஸ தீவிரவாதக் கழகத்தின் முன்னணி உறுப்பினர்) பலஸ்தீன் அதிகார சபைக்கு உட்பட்ட பகுதிகளுக்கு இஸ்ரேலிய அறபுப் பிரஜைகளை இடம்மாற்றும் திட்டத்திற்கு ஆதரவளித்துள்ளார்.

பலஸ்தீன் கொள்கை வலைப்பின்னல் (Palastine Policy Network) என அறியப்படும் அஷ்ஷபகாவின் ஆலோசகரும் PLO வின் முன்னாள் பேச்சுவார்த்தையாளருமான தயானா பட்டு ''இன்றைய இஸ்ரேலிலிருந்து பலஸ்தீனர்களை இடம் மாற்றும் யோசனைதான் முழு இஸ்ரேலிய அரசியல் அரங்கையும் ஆக்கிரமித்துள்ளது. இஸ்ரேல் சட்டத்திற்கு அப்பாற்பட்ட நாடு என்றே நெடன் யாஹூ சிந்திக்கின்றார். உலகம் எதிர்வினையாற்றாமல் இருப்பதனால் தனது நிலைப்பாடு சரியென்றே அவர் கருதுகின்றார்'' என்கிறார்.

ஆனால், அவரது திட்டம் அனைத்து வகையான சர்வதேச சட்டங்களையும் மீறுகின்றது. இஸ்ரேலை தூய யூத நாடாக மாற்றுவதற்கும் அறேபியர்களை அங்கிருந்து வெளியேற்றுவதன் மூலம் கிடைக்கும் மேலதிக நிலத்தில் யூதர்களை மென்மேலும் குடியேற்றுவதற்கும் நெடன்யாஹூ திட்டமிடுகிறார். இஸ்ரேல் அறபுகளைப் பொறுத்தமட்டில் அவர்கள்தான் தூய யூத நாட்டிற்கு சவாலாக உள்ளவர்கள்.

இஸ்ரேலில் பலஸ்தீன் அறபு முஸ்லிம்கள் மட்டுமன்றி, துருஸ் மற்றும் கிறிஸ்த சிறுபான்மையினரும் வாழ்கின்றனர். கடந்த மாதம் இஸ்ரேல் பாராளுமன்றத்தில் இஸ்ரேல் ஒரு யூத தேச அரசு (Jewish Nation State) என்பதை பிரகடனம் செய்வது பற்றிய விவாதம் மேற்கிளம்பியது. இஸ்ரேலின் உள்ளே வாழும் பலஸ்தீன கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இடையில் பிளவை உருவாக்கும் சதித் திட்டத்திலும் இஸ்ரேல் ஈடுபட்டு வருகின்றது. (பக்.14)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குழியை நிரப்ப பலியாகும் புத்தளம் மக்கள்

• ஷெட்டி ரம்ஸி
உதவி: முஜாஸ் அலி,
நஷ்பான் கபூர்

-சம்பிக்க ரணவக்க-

''கடந்த காலத்தில் நாட்டில் கழிவுகள் சேகரிக்கப்பட்ட சகல இடங்களிலும் ஏற்பட்ட குறைபாடுகளை கருத்தில் கொண்டு அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாகவே இந்தத் திட்டம் முறையாக நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. குறித்த திட்டத்தால் சுற்றாடலுக்கோ, புராதன இடங்களுக்கோ எவ்விதப் பாதிப்புக்களும் ஏற்படாது. இது எதிர்காலத்துக்கான நிரந்தர தீர்வாக அமையும்.''

பாராளுமன்ற உறுப்பினர் நவவி

''ஹோல்சிம் கம்பனி அநேகமான குழிகளை நிரப்பி வேம்பு மரங்களை நட்டியிருந்தது. தற்போது இவ்வாறு நட்டிய மரங்கள் கனிசமான அளவு வளர்ந்திருப்பதன் காரணமாக 10 வருடம் அல்லது அதற்கு மேலான கால எல்லைக்குள் நாளொன்றுக்கு 1200 மெட்ரிக் டொன் வீதம் குப்பை கழிவுகளை கொட்டுவதற்கு பிரேரித்திருக்கும் இத்திட்டத்திற்கு போதிய ஆழமான குழிகள் இங்கு இல்லை.''

கிராம சேவகர் மின்ஹாஸ்-
எலுவன்குளம் பிரிவு

''தொம்பேயில் அமுல்படுத்தப்பட்ட திட்டத்திற்கமையவே இத்திட்டமும் அமுலாகவுள்ளது. கிட்டத்தட்ட ஒரு வருட காலமாவது எடுக்கும். ஒரு முறைப்படுத்தப்பட்ட அமைப்பிலேயே குப்பைகள் கொட்டப்படவுள்ளது. அதனால் பெரியளவிலான பாதிப்புக்கள் இல்லையென்றே கருதுகிறேன். மக்களுக்கு போதிய தெளிவூட்டல்கள் வழங்கப்படவில்லை என்பதே எதிர்ப்புக்களுக்கு காரணமாக உள்ளது.''

மெல்கம் ஜோசப்- சேரக்குளிய
மீன்பிடிச் சங்கத் தலைவர்

பல வருடங்களாக புலிப்பிரச்சினைக்கு முகங்கொடுத்தோம். அதனைத் தொடர்ந்து சீமெந்து காபரேஷனின் பாதிப்புக்களுக்கு உட்பட்டு வருகின்றோம். அனல் மின்சார நிலையம் தாபிக்கப்பட்டமையினால் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வந்த இளைஞர்கள் கொழும்பில் வேலைக்கு சென்றுள்ளார்கள். சீமெந்து காபரேஷனுக்கான சுண்ணக்கல் அகழ்விற்கு டயனமைட் இட்டு கற்களை வெடிக்கச் செய்யும் போது சிறு கற்துண்டுகள் கலந்த தூசுப்படலம் எமது வீடுகளை மூடிக்கொள்ளும். வெடிப்பின் அதிர்வில் எமது வீடுகளிலும் வெடிப் பேற்பட்டுள்ளது. தற்போது கொழும்பு குப்பைகளை இங்கு எமது குடியிறுப்புக்களுக்கு அண்டிய பகுதியில் கொட்டப் பார்க்கிறார்கள். முன்பு கரத்தீவு, சேரக் குளிய பகுதிகளுக்குச் சொந்தமான 350 படகுகள் காணப்பட்டன. தற்பொழுது 5 படகுகளாவது மீன்பிடிக்கச் செல்வதில்லை.''

எச்.எச். நபீல்-
கணித ஆசிரியர், கரத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயம்.

வில்பத்து சரணாலயத்தை அண்டிய பகுதியில் குப்பைகளை போடுவதற்கே ஏலவே தீர்மானித்திருந்தார்கள். தற்பொழுது வில்பத்துவிற்கு 3 கிலோமீற்றர் முன்னே உள்ள அறுவைக்காட்டில் கொட்டுவதற்கு முடிவெடுத்துள்ளார்கள். மிருகங்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலேயே அறுவைக்காட்டில் குப்பை கொட்டுவதாக கூறுகிறார்கள். அறுவைக்காட்டைச் சூழவுள்ள நாம் மிருகங்களை விடக் கேவலமானவர்களா? என நான் கேற்கிறேன்.

பள்ளிகளில் மக்களது எதிர்ப்புக்களை எழுதுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது. கடந்த வாரம் கச்சேரியில் கிராம சேவகர்களுக்கு நடாதப்பட்ட கூட்டத்தில் அறுவைக்காட்டில் குப்பை கொண்டுவருவதால் எவ்வாறான அபிவிருத்தி பணிகள் தேவைகள் என எழுதித் தருமாறு கேட்டுள்ளார்கள். நாம் எதிர்ப்பை எழுதத் தேவையில்லை. அபிவிருத்தியை எழுதிக் கொடுத்தாலேயே நாம் அதை அங்கீகரிக்கின்றோம் என்பது அர்த்தம்.

சனோஸ் முஹம்மத்
புவியியல் ஆசிரியர், கரத்தீவு முஸ்லிம் மகா வித்தியாலயம்.

''மயோசின் கால சுண்ணக்கல் பாறையே உடைத்தெடுக்கப்படுகிறது. இது உருமாறிய பாறை. அடியில் உடைத்தெடுக்கப்படுவதனால் கரையும் தன்மையையும் ஊடுகடத்தக் கூடிய தன்மையையும் கொண்டுள்ளது. சுண்ணக்கல்லை உடைத்துவிட்டு அந்தக்குழியில் குப்பைகளை போட்டு மூடும் போது அதிலுள்ள நச்சு வாயுக்கள் ஊடுகடத்தப்பட்டு அதோடு உள்ள நிலப் பரப்புடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இதற்கு கசித்துளி படிவுகள் எனக் கூறப்படுகிறது. கசிந்து போகும் தன்மையுடையது. சுண்ணக்கல் படிவுடன் நீர் உள்ளது. சுண்ணக்கல்லிருந்தே தண்ணீர் கிடைக்கிறது. எனவே இப்படிவு பாதிக்கப்படுமாக இருந்தால் எதிர்காலத்தில் பெறும் நீரும் பாதிக்கப்படுகின்றது.''

அப்துல் அஸீஸ்-
ஓய்வுபெற்ற ஆசிரியர்

இங்குள்ள மக்கள் தொடர்பில் எந்தவொரு ஆட்சியாளருக்கும் கவலையில்லை. நாங்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் என்றே அவர்கள் கருதுகிறார்கள். கொழும்பு குப்பையை பௌத்தர்கள் வாழும் இடத்தில் ஏன் போடுகிறார்களில்லை? சீமெந்து தொழிற்சாலையை ஏன் அங்கு அமைக்க முடியாது? எமது சமூகத்தில் தட்டிக் கேட்க ஒருவரும் இல்லையே. குப்பை போடுவதால் ஆபத்தில்லை என அரசாங்கம் உள்ளிட்ட ஒரு சாராரும் குப்பை போடுவதால் ஆபத்துக்கள் வரும் என இன்னொரு சாராரும் கூறுகிறார்கள்.

ஆபத்தில்லை என்பது உண்மையென்றால் வில்பத்து சரணாலயத்திற்கு உட்பட்ட பொம்பரிப்பு வெளி, மூலக்கண்ண வெளி, மல்கன் வெளி போன்ற பிரமாண்ட வெளிகளில் குப்பைகளை கொட்டலாமே. ஏன் அங்கு கொட்டாமல் மக்கள் குடியிருப்புக்கு அருகில் கொண்டு வந்து போடுகிறார்கள்.

பின்னணி

கழிவுப் பிரச்சினை தேசிய ரீதியிலான பாரியதொரு சிக்கலாக தலை தூக்கியுள்ளது. சாதாரணமாக இலங்கையில் தினமும் 8000 மெட்ரிக் டொன் திண்மக் கழிவு உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதில் மேல் மாகாணத்தில் மட்டும் நாளாந்தம் 3200 மெட்ரிக் டொன் உருவாக்கப்படுகின்றது. அதிலும் கொழும்பு நகர சபை எல்லைக்குள் மாத்திரம் தினமும் 1000 மெட்ரிக் டொன் திண்மக் கழிவுகள் தோற்றுவிக்கப்படுவதுடன் அவற்றுள் 750 மெட்ரிக் டொன் கழிவு மாத்திரமே ஒரு நாளைக்குள் சேகரிக்கப்படுகின்றது.

இதில் முக்கியமான விடயம் இலங்கையின் எந்தவொரு உள்ளூராட்சி சபையும் தமது எல்லைப் பிரதேசத்தினுள் தோற்றுவிக்கப்படும் திண்மக் கழிவுகளை முழுமையாக அகற்றுவதில்லை என்பதாகும். கழிவுகளை முறையற்ற விதமாக திறந்த இடங்களில் கொட்டுவதே பாரிய சுற்றாடல் பிரச்சினையாக உள்ளது.

இதன் காரணமாக அண்டிய பிரதேசங்களில் மண், நீர், நிலத்தடி நீர் நிலைகள் விரைவில் மாசடைந்து காணப்படுகிறது. 2017 ஏப்ரல் 14 ஆம் திகதி மீதொட்டமுள்ளை குப்பை மேடு சரிந்து பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டதை அடுத்து கழிவகற்றலுக்கான மாற்றுப் பிரதேசமொன்றின் தேவை உணரப்பட்டது. இந்நிலையில் கொழும்பு மாநகர சபை தற்காலிகமாக முத்துராஜவலை பகுதிக்கு அண்மையிலுள்ள ஒரு சதுப்பு நிலத்தில் குப்பைகளை கொட்டி வருகிறது. தற்பொழுது இதற்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டிருப்பதனால் இதுவும் சட்டப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது.

இப்பின்னணியில் மாநாகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு ''மெட்ரோ கொழும்பு திண்மக் கழிவு முகாமைத்துவ செயற்திட்டம்'' எனும் பெயரில் கொழும்பின் திண்மக் கழிவுகளை புத்தளம், அறுவைக் காட்டில் சுண்ணக்கல் அகழ்வு நில அகழியில் நிரப்புவதற்கான திட்டத்தை பரிந்துரை செய்துள்ளது. இத்திட்டத்திற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

செயற்திட்டம்

திண்மக் கழிவுகளை ஏற்றுவதற்குகளனி பிரதேசத்தில் 18 ஹெக்டயரில் ஒரு பரிமாற்று நிலையம் அமைக்கப்படும். முதலில் 1200 மெட்ரிக் டொன் நிறைகொண்ட முற்றிலும் மூடப்பட்ட தாங்கிகள் விஷேட ரயில் மூலம் ஏற்கனவே உள்ள ரயில் பாதையினூடாக களனி முதல் புத்தளம் ஊடாக அறுவைக் காட்டுக்குக் கொண்டு சென்று 1.3 ஹெக்டயரில் அமைக்கப்பட்டுள்ள அறுவைக் காட்டு பரிமாற்று நிலையத்தில் இறக்கி, அங்கிருந்து 47 ஹெக்டயர்கள் கொண்ட அறுவைக் காடு நில அகழி நிரப்பல் மையத்துக்குக் கொண்டு செல்லப்படும்.

அறுவைக்காடு

முன்னோர் சுவைத்த
அருமைக்காடு
என்னோர் கண்ட அறுவைக்காடு
பின்னோர் காண அது சுடுகாடு

புத்தளத்தையும் முல்லைத் தீவையும் இணைக்கின்ற கோட்டிற்கு வடக்கே அடையற் சுண்ணாம்புக்கல் காணப்படுகின்றது. இது மயோசீன் காலத்தில் கடலிலிருந்து மேல் உயர்த்தப்பட்ட சேதனவுறுப்பு அடையற் பாறையாகும். அறுவைக்காடு சுண்ணக்கல் அகழ்வுப் பகுதி 5141 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டுள்ளது. புத்தளம், வனாத்தவில்லுவ பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட இப்பிரதேசம், நாட்டின் மிகப்பெரிய சுண்ணக்கல் அகழ்வுப் பகுதியாக உள்ளது.

இங்குள்ள சுண்ணக்கல் அகழ்வு குவாரியிலிருந்து 41 கி.மீ தூரத்திலுள்ள புத்தளம் INSEE சீமெந்து சியம் சிட்டி சீமெந்து (லங்கா) நிறுவனத்திற்கு ரயில் மூலம் சுண்ணக்கல் கொண்டு செல்லப்படுகின்றது. சுண்ணக்கல் குவாரியில் 300-400 பேர் கூலி வேலை செய்கிறார்கள்.

பாதிப்புக்கள்

வனாத்தவில்லுவ பிரதேச செயலகத்தில் 17 கிராம சேவகர் பிரிவுகள் காணப்படுகின்றன. அவற்றுள் 5 கிராம சேவகர் பிரிவுகள் அறுவைக்காட்டுக்கு மிக அண்மையில் (2-3 கி.மீ. ஆரைக்குள்) அமைந்துள்ளன. கரைத்தீவு வடக்கு, கரைத்தீவு தெற்கு, மங்களபுர, சேரக்குளிய மற்றும் ரல்மடுவ ஆகிய பகுதிகளே அவை. அறுவைக்காடு குவாரி நிலத்தின் மேற்கு எல்லை சேரக்குளிய மீன்பிடி பிரதேசத்தினால் எல்லைப் படுத்தப்பட்டுள்ளது. சேரக்குளிய கிராம சேவகர் பிரிவில் 389 வீடுகளில் 1723 பேர் வசிக்கிறார்கள்.

இங்கு சிங்கள மொழி பேசும் கிறிஸ்தவர்களே அதிகளவில் உள்ளனர். இங்குள்ள பெரும்பாலானவர்கள் மீன்பிடித் தொழிலை நம்பியுள்ளனர். சீமெந்து கல்குவாரி வெடிச் சத்தத்தின் அதிர்வில் பெரும்பாலான வீடுகளின் யன்னல்கள் உள்ளிட்ட சுவர்கள் வெடிப்புக்குள்ளாகியிருப்பதை காண முடிந்தது. குவாரியில் இருந்து வெளியாகும் தூசுக் கற்துண்டுகள் தமது வீடுகளை மூடிவிடுவதாகவும் அம்மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுண்ணக்கல் குவாரியுள்ள அகழிகளில் திண்மக் கழிவுகளை கொட்டுவதனால் அதிலுள்ள நச்சுவாயுக்கள் கடலில் கலந்து மீன்வளம் பாதிப்படையும் என அம்மக்கள் தெரிவிக்கிறார்கள். ஏனைய பிரதேசங்கள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் அதிகமான மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வந்த சேரக்குளிய கடற்பகுதியில் இன்று விரல் விட்டெண்ணக் கூடிய சிலரே மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்.

உயர் பெறுமதிமிக்க நண்டு போன்ற மீன்கள் இப்குதியில் காணப்படுகின்றன. அனல் மின்சார நிலையத்தின் உருவாக்கத்தைத் தொடர்ந்து அதிகளவான மீனவர்கள் கொழும்பில் பணியாற்றி வருவதாகவும் அம்மக்கள் தெரிவித்தார்கள்.

கரைத்தீவு வடக்கு கிராம சேவகர் பிரிவில் 2793 பேர் உள்ளார்கள். இங்கு 99 வீதமானவர்கள் முஸ்லிம்கள். அறுவைக் காட்டுக்கு ஒன்றரை கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள இப்பிரதேசத்தில் மக்கள் மீன்பிடித் தொழிலையும் உப்புப் பயிர்ச் [illegible] கிராம சேவகர் பிரிவில் 1213 பேர் வசிக்கிறார்கள். 99 வீதமானவர்கள் சிங்களவர்கள். ரல்மடுவ பிரிவில் 953 பேர் உள்ளார்கள். இம்மக்களுள் பெரும்பாலானவர்கள் மீன்பிடித் தொழிலிலும், இறால் வளர்ப்பிலும், உப்பு உற்பத்தியிலும் ஈடுபட்டு வருகிறார்கள்.

மழை காலத்தில் குப்பை மேட்டிலிருந்து கழிவுகள் களப்பை நோக்கி அடித்து வரப்படும். புத்தளம் களப்பு மாசடைவது என்பது மேற்கூறப்பட்ட உற்பத்திகளை முற்றாக அழியச் செய்வதோடு இறால் ஏற்றுமதியால் பெறப்படும் அந்நியச் செலாவணியிலும் அது பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

குப்பை கொட்டுமிடம் அமைந்திருப்பது வில்பத்து பூங்காவின் உயர் பாதுகாப்பு வலயத்திலாகும். இந்த வலயம் அமைந்திருப்பது வில்பத்து பூங்காவிற்கு மிக அண்மிய பிரதேசத்திலாகும். இயல்பாகவே யானைகளுக்கு மோப்ப சக்தி அதிகம். எனவே வழமையாக வரக்கூடிய யானைகளையும் விட அதிகளவிலான யானைகள் குப்பை மேட்டின் பால் மோகங் கொண்டு கங்கைவாடி, முரண்டாவளி, பழைய எலுவன்குளம், அச்சமூலை, இறால்மடு, மங்களபுரம், புதிய எலுவன்குளம் ஆகிய கிராமங்களை நாசம் செய்து கொண்டு அப்பகுதிகளிலுள்ள இராணுவ வீரர்களின் முகாம் மற்றும் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களின் விடுதிகளை தாக்கிக் கொண்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் குப்பை மேட்டுப் பகுதிகளுக்கு யானைகள் வருவதை தடுக்க முடியாமல் போகும். யானை வராமல் மின்சார வேலியமைப்பதாகக் கூறுவது எந்தளவு தூரத்திற்கு சாத்தியமாகும் என்பதைச் சொல்ல முடியாது.

கொழும்பிலிருந்து அறுவைக்காட்டுக்கு எடுத்து வரும் குப்பைக் கழிவுகளைக் கொட்டுவதாக அடையாளப் படுத்தப்பட்டுள்ள 'வெடிஹிட்டிய' என்னும் இடத்தில் 25 ஆண்டுகளுக்கு முன்னரான மயோசீன் யுகத்திற்குச் சொந்தமான சுவடுகள் கட்டுபிடிக்கப்பட்டுள்ளது. விஜயன் வந்திரங்கிய குவேனியின் இராச்சியமும் தம்பபண்ணி எனச் சொல்லப்படும் இப்பகுதியிலேயே அமைந்துள்ளது.

கலாநிதி பரணவிதான வரலாற்றுக்கு முற்பகுதியில் முள்ளந் தண்டுகளை கொண்ட முள்ளந் தண்டுகள் இல்லாத கடல்வாழ் உயிரினங்களான திமிங்கிலம் மற்றும் டொல்பின் போன்ற 40 வகையான இனங்களை ஆவணப்படுத்தியுள்ளார். எனவே இங்கு குப்பைகளைக் கொட்டி மயோசீன் யுகத்திற்குச் சொந்தமான விலைமதிக்க முடியாத சான்றுகளை அழிப்பது பெறுமதியான செயலெனக் கருத முடியுமா? ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய இடத்தில் குப்பைகளைக் கொட்டுவது எவ்வளவு மடமைத்தனமான செயல்?

கழிவுகள் நிரப்பப்படும் இடம் அமைந்திருப்பது, வில்பத்து தேசிய பூங்காவில் அமைந்துள்ள கலாஓயாவின் கிளை ஆறான லுணு ஓயாவிலிருந்து 100 தொடக்கம் 150 மீற்றர் தூரத்திலாகும். ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களிலேயே புத்தளம் பிரதேசம் அதிகூடிய மழை வீழ்ச்சியை பெறுகிறது. அதிகமான வெள்ளப் பெருக்கு ஏற்படுவது நவம்பர் மாத கடைசிப் பகுதி மற்றும் டிசம்பர் மாதங்களிலாகும்.

1957 ஆம் ஆண்டு ஏற்படட்ட வெள்ளப் பெருக்கினால் பழைய எலுவன்குளம் நீரில் மூழ்கியது. லுணு ஓயாவினூடாகவே கழிவுகள் அடித்துச் செல்லப்பட்டு களப்பினுள் கலக்கிறது. கடல் மின்சாரத்தின் காரணமாக களப்பிலும் நீர் அசைவுகள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நச்சுக் கழிவுகள் கடலில் கலப்பதன் மூலம் பெறுமதியான மீன்வளங்கள் பாதிக்கப்படுவதை நிறுத்த முடியாமல் போகும். அத்துடன் மக்கள் உயிரிழப்புக்களையும் தடுக்க முடியாமல் போகும்.

அத்துடன் அறுவைக் காட்டில் குப்பை கொட்டும் திட்டத்தில் பின் வரும் செலவுகளையும் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. குப்பைகளை சேகரிப்பது, கொட்டும் இடத்திற்கு எடுத்துச் செல்லல், குப்பைகளை நறுக்கும் பொறிக்கான கிரயம், பொதி செய்யும் பொருட்களுக்கான கிரயம், கிரேன் கொஸ்ட், கழிவுநீர் சிகிச்சையளித்தல், பொறிகளுக்கான கிரயம் மற்றும் குப்பை கொட்டும் தளமான அறுவைக்காட்டில் நடாத்தப்படும் சிகிச்சைக்கான கிரயம், வெற்று அடைப்பான்களை கழுவுவதற்கான கிரயம், குப்பை கொட்டும் தளத்திற்கு செல்வதற்கான ரயில் கடவைகளை விரிவுபடுத்துவதற்கான கிரயம், அறுவைக்காடுக்கான ரயில் பயணத்திற்காக ஒரு நாளைக்கு செல்லும் செலவு - 45 கி.கிராம் நிறையினை கொண்ட பெட்டிக்கான 1 கி.மீ தூரத்திற்கான கிரயம் ரூபா 925 ஆகும்.

925 x 27 பெட்டிகள் x 170 km = 191,058,750/- ஆகும். அத்தோடு உட்கட்டமைப்பு வசதிகளுக்கான செலவு, யானையால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டும், காயமடையும் நபர்களுக்கான சேதமுறும் சொத்துக்களுக்கான நட்டஈடும் கிரயமும், சூழல் மாசடைவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான செலவு, மீன் உற்பத்திக்கு ஏற்படும் ஈடுசெய்ய முடியாத இழப்பு.

எனவே இவ்வாறான இழப்புக்களை தரும் செயற்திட்டம் எவ்வகையில் நிலைபேறான அபிவிருத்தித் திட்டமாக அமைய முடியும்? மாநாகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரே இது உங்களின் கவனத்திற்கு...

திருத்தம்

கடந்த இதழில் 'மர்ஹூம் ரியாழ் ஹஸரத்தின் ஞாபகார்த்தமாக பெண்களுக்கான தொழுகை அறை' எனும் தலைப்பில் வெளியான கட்டுரையில் கம்பஹா மாவட்டத்தில் உள்ள உடுகொடை தவறுதலாக கண்டி மாவட்டத்தில் என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதனை திருத்தி வாசிக்குமாறு வேண்டிக்கொள்வதோடு தவறுக்காக மன்னிப்புக் கோறுகிறோம். (ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு நாடுகளின் சர்வதேசவிருதுகளுடன் இலங்கையில் தரையிறங்கிய யூனுஸ்கான்!

• அனஸ் அப்பாஸ்

மீரா மொய்தீன் - ஆமினா தம்பதியரின் செல்வப் புதல்வன் யூனுஸ்கான். வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலையில் உயர்தரம் கற்கின்றார்.

இவர் நெல் விதைக்கும், உரம், எண்ணெய் விசுறும் செயற்பாடுகளைக் கொண்ட இயந்திரமொன்றை உருவாக்கி சாதனை புரிந்திருந்தார். குறித்த தானியக்க கருவி வயல் வரப்புகளில் இருந்து கொண்டே சிரமமின்றி இயக்கும் திறனைக் கொண்டமைந்துள்ளது. இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்ட இளம் கண்டுபிடிப்பாளர் போட்டியில் வெற்றி பெற்ற செல்வன் எம்.எம். யூனுஸ்கான், இம் மாதம் (ஆகஸ்ட்) தென் கொரியாவில் நடைபெற்ற சர்வதேச கண்காட்சியில் தனது கண்டுபிடிப்பினை காட்சிப்படுத்தும் வாய்ப்பினைப் பெற்றார். ஒகஸ்ட் மாதம் 08 ஆம் திகதி இவர் தென் கொரியா சென்றிருந்தார்.

இளவயதில் இச்சாதனையினை நிலைநாட்டிய குறித்த மாணவனுக்கு பாடசாலையின் அதிபர் ஏ.எம்.எம். தாஹிர் மற்றும் பாடசாலை நிருவாகத்தினர், ஊர்ப் பிரமுகர்கள் எனப் பலரும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளனர்.

குறித்த இயந்திரம் நவீன முறையில் வடிவமைக்கப்பட்டு சந்தைக்கு வருமிடத்து விவசாயச் செய்கையில் பாரிய மாற்றத்தைக் கொண்டு வருதோடு, பணச் செலவீனத்தையும் குறைக்குமென்பது நிச்சயம். அதேநேரம், விவசாயத்தை நம்பியிருக்கும் வாழைச்சேனை பிரதேச விவசாயிகளுக்கும் ஒரு வரப்பிரசாதமாக குறித்த இயந்திரம் அமையுமென எதிர்பார்ப்பதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

சவூதி அரேபியாவில் உள்ள தாயிப் பல்கலைக்கழகத்தில் ஒரு மின் பொறியியலாளராக பணியாற்றும் இவரது

தந்தையின் வழிகாட்டலும், உயிர்ப்பான பரம்பரை அலகுமே தான் இந்நிலையை அடையக் காரணம் என்கின்றார் எம். எம். யூனுஸ்கான்.

இலங்கையின் தோமஸ் அல்வா எடிசனாக தான் மிளிர வேண்டும் என்பதும், அதி நவீனமுறையில் தனது கண்டுபிடிப்புக்களை சந்தைப்படுத்துவதுமே இலக்கு என்கிறார் இந்த இளம் கண்டுபிடிப்பாளர்.

இந்த சமுதாயத்துக்கு தொழில்வாய்ப்புகளை வழங்கும் ஒரு காரணியாக தொழிற்பட இன்றே உறுதிபூண்டுள்ள இவர், இலங்கையின் தலைசிறந்த கண்டுபிடிப்பாளர் வரிசையில் இடம் பிடிப்பதுடன், ஏக காலத்தில் எதிர்கால சிக்கல்களை, சவால்களை எளிமையாக முறியடிக்க சிறந்த சட்ட வல்லுனராக வர வேண்டும் என்பது தனது மனதில் தற்போது உதித்துள்ள புதிய இலக்கு என்பதாக எடுத்தியம்பினார்.

அல்ஹம்துலில்லாஹ்! தனது பெற்றோர், சகோதரர்கள், போட்டிகளின் போது ஊக்கியாக இருந்து உதவிய ஆசிரியர் சப்ராஸ் அஹமத், ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாணவர் இயக்கம், தேசிய மாணவர் படையணி, பாடசாலை, சமூகம் என்பன இன்றுபோல் என்றும் தனக்கு பக்க பலமாக இருப்பதை அவர் விரும்புகின்றார்.

தென் கொரியா அனுபவம் இவருள் பாய்ச்சிய தாக்கத்தை இவரது புதிய சொற்கள் அழகாக வர்ணித்தன. இலங்கையிலிருந்து வழிகாட்டியாக 3 பேர் தேசிய ரீதியில் வென்ற இவர்கள் 12 பேரை தென் கொரியாவுக்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

வாழைச்சேனை அந்நூர் தேசியக் கல்லூரி வரலாற்றில் சர்வதேச சுற்றுலாவுக்காக ஒருவர் மாலைதீவுக்கும், இன்னொருவர் ஸ்விட்சர்லாந்திற்கும், தரம்-5 இல் ஒரு சிறுமி ஜப்பான் சுற்றுலாவும் சென்று வந்திருந்தாலும், சர்வதேச போட்டியொன்றுக்குத் தெரிவான முதல் சந்தர்ப்பமாக தனது தென்கொரியா அனுபவத்தை அடையாளப்படுத்தினார்.

உயர்தர தொழில்நுட்பப் பிரிவின் முதல் வருட மாணவரான எம்.எம். யூனுஸ்கான், தற்போது ஆங்கில பாடநெறி ஒன்றுடன் Robotics பாடநெறியையும் ஆர்வத்துடன் கற்று வருகின்றார்.

பேராதெனிய பல்கலைக்கழகத்தில் Nano tech துறையில் கற்றுவரும் வாழைச்சேனையைச் சேர்ந்த சகோதரர் ஹசீம்தீனை அடுத்து கண்டுபிடிப்பாளராக இவரே ஊரளவில் பேசப்படுகின்றார். புற்றுநோய்க்கான மருந்து ஒன்றை

ஹசீம்தீன் கண்டுபிடித்ததாக இவர் சொல்வதுடன், அவருடன் இணைந்து எதிர்காலத்தில் பணியாற்ற தனக்குப் பெரிதும் விருப்பம் என்கின்றார்.

புத்தக வாசிப்பு, செய்தித்தாள் உறவு என்பன மிகவும் குறைவு என்றாலும், அவற்றை நிவர்த்திக்க வலைதளங்கள் மூலமான செய்தி சேகரிப்பைச் செய்வதாகக் குறிப்பிட்டார்.

முஸ்லிம் அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய தேடலில் அதிக ஆர்வத்துடன் தேடலில் உள்ள யூனுஸ்கான், முஸ்லிம் சமூகத்துக்கும், கற்ற பாடசாலைக்கும், மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளமை பாராட்டுக்குரியதே.

''கண்டுபிடிப்புகளை எவ்வாறு இன்னும் திறன் பட செய்வது தொடர்பாக சில அறிவுறுத்தலும், எங்களுக்கான சந்தை வாய்ப்புகளை எவ்வாறு ஏற்படுத்துவது தொடர்பாக சில வழிமுறைகளும் எமது தென் கொரியா பயணத்தில் வழங்கப்பட்டது. மற்றும் உலகில் முன்னணி வாகன உற்பத்தியான ''KIA'' நிறுவனத்தின் பிரதான உற்பத்திசாலைக்கு அழைத்து சென்று எவ்வாறு car உற்பத்தி செய்யப்படுகிறது என்று நேரில் காட்டப்பட்டது'' என்றார். அடுத்த மாதமும் ஒரு போட்டிக்குத் தயாராகிறார் யூனுஸ்கான்.

தென்கொரியா பயணத்தில் தன்னை செம்மைப்படுத்தி, புதிய தெம்புடன் இலங்கை வந்துள்ள செல்வன் யூனுஸ்கான் வெறுமையாக வரவில்லை. தனது கண்டுபிடிப்புகளுக்காக ஈரான், கொரியா ஆகிய இரண்டு நாடுகளின் சர்வதேச விஷேட இரு விருதுகளுடன்தான் தரையிறங்கியுள்ளார்.

எங்களைக்... (01ம் பக்கத் தொடர்)

2012 ஆம் ஆண்டு அரசத் தலைவர் தெய்ன் செய்ன் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக வெளியிட்ட ''முஸ்லிம்களை மூன்றாம் நாடொன்றுக்கு அனுப்பும் திட்டம்'' காரணமாக அங்கு முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட இன வன்முறையினைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான ரோஹிங்யா மக்கள் தற்காலிக அகதி முகாம்களில் வசித்து வருகின்றனர். இந்த நிலையிலேயே ஐ.நா.வால் நியமிக்கப்பட்ட உண்மைகளை கண்டறியும் குழுவின் இறுதி அறிக்கையினை மியன்மார் அரசுக்கு கோபி அனான் ஒப்படைத்த இரண்டு நாட்களில் இந்த படுகொலைகள் புதிதாக ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது.

ரோஹிங்யா முஸ்லிம்கள் மீது கடந்த காலங்களில் கட்டவிழ்த்து விடப்பட்ட காட்டுமிராண்டித் தனத்தை பௌத்த மதகுரு அசின் விராதுவின் தலைமையிலான 969 அமைப்பே முன்னெடுத்த போதும் இம்முறை சமாதானத்துக்கான நோபல்பரிசு கொடுக்கப்பட்ட ஆட்சித் தலைவரின் இராணுவமே முன்னெடுத்து வருகிறது.

முஸ்லிம்களின் புனிதத் தலமான மஸ்ஜிதுல் அக்ஸாவை ஆக்கிரமித்திருப்பதற்கு எதிராகப் போராடி வரும் அமைப்புக்களைப் பயங்கரவாதிகள் என வர்ணிக்கும் அரபு நாடுகள், முஸ்லிம்கள் மீது பயங்கரவாதத்தை கட்டவிழ்த்துள்ள நாடுகளின் விடயத்தில் மௌனம் காத்து வருகின்றன. அரபு நாடுகளால் தடைசெய்யுமாறு கோரப்பட்ட அல் ஜஸீரா மாத்திரமே இது தொடர்பான செய்திகளை உலகுக்குச் சொல்லி வருகின்றது. எங்களைக் காப்பாற்றுங்கள் என்ற அவலக் குரலாவது வெளியே வராத வண்ணம் உலக ஊடகங்கள் அனைத்தும் அடக்கி வாசிக்கின்றன.

ஆப்கானிஸ்தானில் பாஹியான் சிலை உடைக்கப்பட்டபோது எதிர்க்குரல் கொடுத்த எந்த அமைப்புக்களும் ஊடகங்களும் இலங்கையில் இதற்கெதிராக வாய்திறக்க மறுத்து வருகின்றன. இலங்கை இறுதி யுத்தத்தில் தமிழர்கள் பாதிக்கப்பட்டார்கள் என்று தமிழர்களுக்காக குரல் கொடுத்தவர்கள் தற்போது உயிருக்குப் போராடி வரும் மியன்மார் முஸ்லிம்களுக்காகவும் குரல் கொடுக்காமல் இருப்பது அவர்களின் மனிதாபனம் தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்தப் படுகொலைகளை முன்னெடுத்துச் செல்லும் 969 இயக்கத்துடன் பொதுபலசேனா பல்வேறு ஒப்பந்தங்களையும் கடந்த காலங்களில் செய்திருக்கிறது. மியன்மாரையொத்த செயற்பாடுகளே இலங்கையிலும் நடைபெறுகின்றன என பத்தியாளர் ஜெகான் பெரேரா அண்மையில் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தோனேஷியாவின் இரண்டாவது பெரிய இஸ்லாமிய சங்கமான ஜம் இய்யா முஹம்மதியா அராக்கான் முஸ்

லிம்களுக்கு எதிரான படுகொலைகளை நிறுத்த செயற்படுமாறு ஆசியான் அமைப்பை கோரியுள்ளது.

இதேவேளை, இந்தோனேஷியாவின் பெரும் நிறுவனமான நஹ்ழத்துல் உலமா அமைப்பு இப்படுகொலைகளை கடுமையாக கண்டித்துள்ளதுடன் அங்குள்ளவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை தம்மால் இயன்றவரை செய்ய தயாராக உள்ளதாகவும் அறிவித்துள்ளது.

இலங்கையில் அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா, இந்த மிலேட்சத் தனமான தாக்குதல்களையும் அநியாயங்களையும் மிக வன்மையாக கண்டிப்பத்திருப்பதுடன், இதனை நிறுத்துவதற்கு உலக நாடுகள் பொதுவாகவும் முஸ்லிம் நாடுகள் குறிப்பாகவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருந்து வருவது குறித்து தனது கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது.

அத்துடன் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு உதவுவதற்காகவும் அவர்களது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுக் கொடுக்கவும் சகல உலக நாடுகளும் முன்வர வேண்டும் என அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கேட்டுக் கொண்டுள்ளது.

20 ஆவது திருத்தம்... (01ம் பக்கத் தொடர்)

பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி, மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் திஸ்ஸ காமினி அபேசிங்க ஜயவர்தன யாப்பா, மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும மற்றும் மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையம் ஆகிய தரப்பினர் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் அன்றைய தினம் உயர் நீதிமன்றினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

அடுத்த மாதம் 8-ம் திகதி கிழக்கு மாகாண சபையின் பதவிக்காலமும் 28-ம் திகதி சப்ரகமுவ மாகாண சபையின் பதவிக்காலமும், அக்டோபர் 1-ம் திகதி வட மத்திய மாகாண சபையின் பதவிக்காலமும் நிறைவடைகின்றது.

பதவிக்காலம் முடிவடையும் மூன்று மாகாண சபைகளுக்கும் தற்போதைய மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் அக்டோபர் மாதம் 2 ஆம் திகதி வேட்பு மனுக்களை தேர்தல்கள் திணைக்களம் கோர வேண்டிய நிலையல் 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் அதற்கான வாய்ப்பு இல்லாமல் போக இடமிருக்கிறது.

அமெரிக்காவுடனான... (01ம் பக்கத் தொடர்)

அமெரிக்காவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் அமுலில் இருந்த காலத்தில் நடந்த யுத்தத்தில் அத்துமீறல் நடந்ததாக இப்போது அவர்களே குற்றம் சாட்டுகின்றனர். இந்த ஒப்பந்தம் ஒத்துழைப்பு ஒப்பந்தமாக அப்போதைய அரசினால் சொல்லப்பட்டாலும், இந்த ஒப்பந்தத்தின் மூலம் அமெரிக்காவின் யுத்தச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க நாடு கடமைப்பட்டுள்ளது.

ACSA வகையிலான இந்த ஒப்பந்தம் பனிப்போர் காலத்தில் நாடுகளை அடிமைப்படுத்த நேடோவினால் உருவாக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் ஈடுபட்ட நாடுகள் அழிக்கப்பட்டனவேயன்றி அமெரிக்காவினால் பாதுகாக்கப்பட வில்லை.

இந்த ஒப்பந்தம் மூலம் யுத்த மொன்றின் போது எமது நிலத்தை அமெரிக்கா பயன்படுத்துவதற்கு வாய்ப் பேற்படுகிறது. இதன் மூலம் ஐஎஸ் போன்ற அமைப்புக்கள் இலங்கைக்குள் நுழைவ தற்கும் இதனூடாக நாடு யுத்தகளமா வதற்கும் வாய்ப்பேற்படுகிறது. எனவே இந்த ஒப்பந்தத்தினால் நாட்டுக்கு அழிவேயன்றி எந்த நன்மையும் ஏற்படப் போவதில்லை. இதனை அரசாங்கம் முன் கொண்டு செல்லக் கூடாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மீதான... (01ம் பக்கத் தொடர்)

பிரேசில், கொலம்பியா, பெரு, சிலி, அர்ஜென்டினா மற்றும் சூரினாம் போன்ற தென் அமெரிக்க நாடுகளுக்கான இலங்கை தூதரான ஜகத் ஜெயசூர்ய, இலங்கையின் வட கிழக்கு பகுதியில் இருந்த துருப்புகளுக்கு தலைமையேற்றிருந்தார். அவரின் தலைமையில் இருந்த படையினர் மீது மருத்துவமனைகளை தாக்கியதாகவும், ஆயிரக்கணக்கான குடிமக்களை கடத்தி கொடுமைப்படுத்தியதாகவும், கொன்றதாகவும் குற்றச்சாட்டு கூறப்பட்டது.

தூதுவர்களுக்கு இருக்கின்ற பாதுகாப்பு மற்றும் விலக்களிப்புக்களையும் தாண்டி இவர் மீதான வழக்கை விசாரிப்பதற்கு சர்வதேச உண்மை மற்றும் நீதி திட்ட அமைப்பு (International Truth and Justice Project (ITJP) முயற்சித்து வருகிறது.

''2007 - 2009 வரையிலான முக்கிய காலகட்டத்தில் வன்னி பகுதியில் நடந்த சம்பவங்களுக்கு அவர்தான் உண்மையான பொறுப்பாளி'' என இந்த அமைப்பின் வழக்கறிஞரான யாஸ்மின் சூகா தெரிவித்துள்ளார். ஜகத் ஜெயசூர்ய மீது மேலும் பெரு, சில்லி மற்றும் ஆர்ஜென்டினா ஆகிய நாடுகளிலும் வழக்கு தாக்கல் செய்யப்படும் என்[illegible] குழு கூறியுள்ளது.

கருக்கலைப்பு... (01ம் பக்கத் தொடர்)

'குறிப்பிட்ட சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் கருவை கலைப்பதா? அல்லது சுமப்பதா? என்ற தீர்மானத்தை தாய் தான் எடுக்க வேண்டும். அரசு வைத்தியசாலையொன்றில் கருக் கலைப்புக்கான சிபாரிசுகளை உரிய இரு மருத்துவ நிபுணர்கள் செய்ய வேண்டும்' என்றும் டாக்டர் கபில ஜயரட்ன தெரிவித்தார்.

இதேவேளை, இரு காரணங்களுக்[illegible] கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு தனது எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளது.

காரணங்கள் என்னவாக இருந்தாலும் எப்படி இருந்தாலும் கருக்கலைப்புக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்குவதை எதிர்ப்பதாக இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் மாநாடு கூறுகின்றது. கருவொன்று உருவாகினால் அந்தக் கணத்திலேயே மனித உயிர் உருவாகின்றது. அது பரிசுத்தமானது. அதனை கலைக்கும் உரிமை யாருக்கும் இல்லை' எனத் தெரிவிக்கும் இவர்கள், ஒருவரின் உரிமைக்காக மற்றுமொருவரின் உரிமையை மீற முடியாது எனவும் தெரிவித்துள்ளனர்.

களனி பல்கலைக்கழகத்தினால் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 650 சட்ட விரோத கருக் கலைப்புகள் இடம்பெறுவதாகத் தெரிய வந்துள்ளது. இந்தச் சட்டம் தொடர்பில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா எந்த எதிர்ப்புக்களையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஸித் தேடல்கள் (2)

ஹஜ்ஜின் மகாஸிதுகள்

• ஷெய்க் அக்ரம் அப்துல் ஸமத்

ஹஜ்ஜின் மகாஸிதுகள் என்ற இந்தக் கட்டுரை வெளிவரும் பொழுது சில சமயம் இவ்வருட ஹஜ் நிறைவு பெற்றிருக்கவும் வாய்ப்பிருக்கிறது. ஏலவே ஹஜ்ஜாஜிகள் நாட்டை விட்டு வெளியேறிச் சென்று விட்டார்கள். எனவே, கட்டுரை காலம் கடந்து விட்டதாக அமைந்து விடப்போகிறது என்ற ஒரு எண்ணம், இந்தக் கட்டுரையை எழுதத் தொடங்கும் போது மனதில் வந்தது.

ஆனாலும் மற்றொரு புறத்திலிருந்து ஒரு தைரியம் பலமாய் எட்டிப் பார்த்தது. காரணம் நான் எழுதுவது மகாஸிதைப் பற்றி, அது காலம் கடந்ததல்ல, என்றும் நிலையானது. ஷரீஆவின் மூலம் இந்த உலகில் நிரந்தரமாக நிலைபெற வேண்டும் என்று அல்லாஹுதஆலா எதனை எதிர்பார்க்கின்றானோ அதனையே நாம் மகாஸித் என்போம். எனவே ஹஜ்ஜின் மகாஸிதுகள் ஹஜ் காலத்திற்கு மாத்திரம் உரியவை அல்ல. இந்த உலகில் என்றும் நிலைத்திருக்க வேண்டியவை. ஆகவே காலம் கடந்தேனும் எழுதப்படுவது யாவருக்கும் பயனளிக்கும்.

மாத்திரமன்றி இது ஒரு அறிவூட்டல் நடவடிக்கை, அறிவூட்டல் குறித்த சந்தர்ப்பத்துடன் இணையும் பொழுது விளைவு அதிகம்தான், ஆனாலும் சந்தர்ப்பம் மட்டும்தான் அறிவூட்டலுக்கான பொழுது அல்ல. இனி ஹஜ்ஜின் மகாஸிதுகளுக்குச் செல்வோம்.

ஹஜ்ஜின் மகாஸிதுகள் பல கோணங்களில் பல எண்ணிக்கையில் அணுகப்பட்டுள்ளன. ஓரளவுக்கு அவற்றின் சாரம் சமாய் நான் மூன்று மகாஸிதுகளை மாத்திரம் இங்கு பரிமாறலாம் என்றிருக்கிறேன்.

முதலாவது: மக்களை ஒன்றுதிரட்டுதல்

அதாவது உலக முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று திரட்டப்படல் வேண்டும் என்பது ஹஜ்ஜின் ஒரு மக்ஸத். அல்குர்ஆன் இதனை இவ்வாறு கூறுகிறது: ''ஹஜ்ஜுக்கு வருமாறு மக்களுக்கு பகிரங்க அழைப்பு விடுங்கள். அவர்கள் கால்நடையாகவும் உங்களிடம் வருவார்கள். மிகத் தொலைவான ஒவ்வொரு பாதை வழியாகவும் ஒவ்வொரு நலிந்த ஒட்டகங்கள் மீதும் வருவார்கள்.'' (ஹஜ்:28)

ஹஜ்ஜுக்கான பகிரங்கமான அழைப்பு ஏன் விடுக்கப்படுகிறது எனின், மூலை முடுக்குகளில் இருந்தும் கூட மக்கள் அதற்கு வரவேண்டும். உலகின் எந்தப் பாகத்திலுள்ளவர்களும் வருவார்கள் என்பதையே தொலைவான ஒவ்வொரு பாதை வழியாகவும் என்ற வார்த்தை குறித்து நிற்கிறது. பெரும் திரளான மக்கள் ஒன்று கூட்டப்பட வேண்டும் என்பதையே இந்த வசனம் உணர்த்துகிறது.

மக்கள் ஒன்றுதிரட்டப்படுதல் என்பது பொதுவாக இஸ்லாத்தின் எல்லா வணக்க வழிபாடுகளிலும் அவதானிக்கத் தக்க ஓர் உண்மையாகும். கலாநிதி அஹ்மத் ரைஸூனி அவர்கள், இஸ்லாம் ஐந்து அடிப்படைகள் மீது கட்டப்பட்டிருக்கிறது என்ற ஹதீஸுக்கு விளக்க மளிக்கும்போது, கலிமா, தொழுகை, நோன்பு, ஸகாத், ஹஜ் என்ற ஒவ்வொரு கடமையும் கட்டாயமாக நடைபெற வேண்டியவை, கூட்டு வடிவில் நடைபெற வேண்டியவை, திட்டமிட்ட ஒழுங்கில் நடைபெற வேண்டியவை என்கிறார்[1].

எனவே பொதுவாக வணக்க வழிபாடுகள் கூட்டான வடிவில் ஒரு ஒழுங்கு முறையில் நடைபெறுவதை இஸ்லாம் வழியுறுத்துகிறது. இவற்றில் ஹஜ்ஜைப் பொறுத்தவரை ஏனைய எல்லா வணக்க வழிபாடுகளை விடவும் கூட்டு வடிவம் மிகவும் முக்கியம் பெறுகிறது. இங்கு கூட்டுவடிவம் ஒரு பிரதேசத்தையோ அல்லது ஒரு ஊரையோ மாத்திரம் உள்ளடக்காமல் முழு உலகையும் உள்ளடக்கிய வகையில் அமைகிறது.

உண்மையில் உலக முஸ்லிம்களின் இந்த ஒன்று கூடல் என்ன செய்தியைச் சொல்கிறது? இஸ்லாம் முழு மனித சமூகத்தையும் ஒன்று திரட்டும் சக்தி வாய்ந்தது என்ற செய்தியை உலகிற்கு உரத்துச் சொல்கிறது. அதுவும் புறக்காரணிகளால் இந்த ஒன்றுகூடல் நிகழவில்லை. ஆட்சியாளர்களோ தலைவர்களோ போட்ட கட்டளைகளால் அது நடைபெறவில்லை. மாற்றமாக ஹஜ்ஜுக்கு வரும் ஒவ்வொரு தனிமனிதனும் தனது உள்ளார்ந்த தூண்டுதலின் அடிப்படையிலேயே வருகின்றான். நாளுக்கு நாள் அந்தத் தொகை அதிகரித்த வண்ணமே உள்ளது. எண்ணிக்கை வரையறைகளிட்டு கட்டுப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமளவுக்கு சுயவிருப்பத்தின் அடிப்படையிலேயே இந்தப் பெரும் மக்கள் கூட்டம் ஒன்று திரண்டு கொண்டிருக்கிறது.

அல்லாஹுதஆலா கூறுகிறான்: ''அல்லாஹ்வின் இந்தக் கிரியைகளை யார் மகத்துவப்படுத்துகிறாரோ அது அவர்களது உள்ளங்களின் தக்வாவின் காரணமாகவே நிகழ்கிறது.'' (ஹஜ்: 32)

தக்வா என்பது சுயதூண்டல். எனவே இஸ்லாம் எந்தவிதப் புறக்காரணிகளும் இன்றி மக்களை இயல்பாக ஒன்று திரள வைக்கக் கூடியது.

இந்த வசனத்தில் கிரியைகள் என்ற கருத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்ட அறபுச் சொல் 'ஷஆயிர்' என்பதாகும். இதன் பொருள் பற்றி கலாநிதி அஹ்மத் ரைஸூனி அவர்கள் கூறும் பொழுது, இது அடையாளம் என்ற கருத்தைக் குறிக்கும்.[2] எனவே ஹஜ் என்பது இஸ்லாத்தின் ஒரு அடையாளம், அதன் ஒரு வெளிப்பாடு. இந்த உலகில் இஸ்லாம் வாழ்கிறது. அது அழியவில்லை என்பதை உலக மக்களுக்கு ஞாபகப்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு நிகழ்வு அது என்கிறார்.

இரண்டாவது: பௌதீகப் பயன்களைப் பெற்றுக் கொள்ளுதல்

அல்குர்ஆன் ஹஜ்ஜுக்காக பகிரங்க அழைப்பு விடுங்கள் பெரும் திரளானவர்கள் வருவார்கள் என்று கூறிவிட்டு நோக்கத்தை இவ்வாறு சொல்கிறது:

''தமக்கான பௌதீகப் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ்வை நினைவுபடுத்தவதற்காகவும்.'' (ஹஜ்:28)

பௌதீகப் பயன்கள் என்ற கருத்தைச் சொல்ல 'மனாபிஃ' என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது அடிப்படையில் எல்லா வகையான பயன்களையும் குறிக்கப் பயன்படுகிறது. நேரடியான மறைமுகமான பௌதீக ஆன்மீக எல்லாப் பயன்களும் இங்கு உள்ளடங்கும். ஆனாலும் ஆன்மீகப் பயன்கள் அதே வசனத்தில் அல்லாஹ்வை நினைவுபடுத்தல் என்ற சொல்லின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டிருப்பதால் இந்த இடத்தில் மனாபிஃ என்பது பௌதீகப் பயன்களையே குறிப்பாக அடையாளப்படுத்துவதாகக் கொள்ள முடிகிறது.

ஹஜ் ஒரு வணக்கம். உலக முஸ்லிம்கள் அனைவரையும் ஒன்றிணைக்கும் வணக்கம். எனவே அந்த வணக்கத்தின் போது வெறுமனே ஆன்மீக விளைவுகள் மாத்திரமன்றி, ஒன்று திரள்வதன் பௌதீக விளைவுகளை அடைவதற்கான ஒரு வாய்ப்பையும் அல்லாஹுதஆலா ஏற்படுத்தித் தந்திருக்கின்றான்.

உண்மையில் அதனை ஒரு வாய்ப்பு என்பதை விடவும் கட்டாயம் அடைந்து கொள்ள வேண்டிய ஒரு இலக்காகவே அல்குர்ஆன் அடையாளப்படுத்தியிருக்கிறது. பௌதீகப் பயன்களை அடைந்து கொள்ளல் என்பது ஹஜ்ஜின் ஒரு மக்ஸத், அந்தவகையில் ஹஜ்ஜுக்கான திட்டமிடல் வெறுமனே ஹஜ் என்ற கிரியையை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடாக மாத்திரம் அமையக் கூடாது, முழு மனித சமூகத்திற்கும் பயனளிக்கக் கூடிய, சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களுக்கான ஒரு களமாக ஹஜ்ஜை மாற்றிக் கொள்வதற்கான ஏற்பாடே மிகவும் பொருத்தமானது. இங்கு உதாரணத்திற்காக இரண்டு விடயங்களை மாத்திரம் அடையாளப்படுத்துகிறேன்.

1. பொருளாதார நலன்கள்:

கலாநிதி யூசுப் அல்கர்ளாவி அவர்கள் பொருளாதார நலன்களை தனியானதொரு மக்ஸதாகவே விளங்கப்படுத்தியுள்ளார்[3].

இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: ஜாஹிலியாக் காலத்தில் உக்காஸ், மஜன்னா, துல் மஜாஸ் போன்ற சந்தைகள் காணப்பட்டன. ஹஜ் காலப் பகுதியில் வியாபாரம் செய்வதை மக்கள் பாவமாகக் கருதி சங்கடப்பட்டார்கள். நபியவர்களிடம் இது பற்றி வினவியபோது கீழ்வரும் அல்குர்ஆன் வசனம் இறங்கியது.

''உங்கள் இரட்சகனிடமிருந்து உங்களுக்குக் கிடைக்கும் பேறுகளை (செல்வம்) நீங்கள் எதிர்பார்ப்பதில் எந்தக் குற்றமும் இல்லை.'' (அல்பகரா - 198), என்றார்கள். (புஹாரி)

எனவே ஹஜ் காலப்பகுதி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குரிய ஒரு காலம். முஸ்லிம்கள் ஒன்று திரண்டு செல்வவிருத்தியில் ஈடுபடுவதற்கான ஒரு சந்தர்ப்பம். உலகப் பொருளாதாரத்தின் திசையையும் போக்கையும் தீர்மானிப்பதற்கான சக்தியாக முஸ்லிம் உம்மாவை மாற்றுவதற்கான ஒரு நிகழ்வு.

2. உலக சமாதானத்தைத் தீர்மானிப்பதற்கான காலம்:

அஷ்ஹுருல் ஹுரும் எனும் துல் கஃதா, துல் ஹஜ், முஹர்ரம், ரஜப் என்ற நான்கு மாதங்களில் ஒன்றான துல் ஹஜ் மாதத்தில் ஹஜ் கடமையை அல்லாஹ் வைத்திருக்கிறான். இந்த மாதங்களில் யுத்தம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக இந்தக் காலப்பகுதியில் நோன்பு நோற்றல் சிறப்புக்குரியது. மக்கா மதீனா பிரதேசங்களை ஹரம் எனும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களாக இஸ்லாம் கருதுகிறது.

ஹஜ் காலப்பகுதியில் இப்பிரதேசத்தின் மரங்கள் வெட்டப்படக் கூடாது. மிருகங்கள் வேட்டையாடப்படக் கூடாது. அடுத்து ஹஜ் கடமையின் பொதுத் தோற்றத்தைப் பார்த்தாலும் அங்கு முஸ்லிம்களில் பெரும் திரளான [illegible] கலந்து கொள்கிறது. [illegible] தன்னை விட்டு, அப்பால் விரட்டுவதற்கான ஏற்பாடு இருக்கிறது. மனித மனங்களை வலிந்து கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடு இருக்கிறது.

இந்த அனைத்து ஏற்பாடுகளையும் அல்லாஹ் ஏன் வைத்திருக்கிறான்? என்ற ஒரு கேள்வி கேட்டுப் பார்த்தால், சாதாரணமாகவே புரிந்துகொள்ள முடியுமான உண்மைதான், உலக சமாதானத்தை முஸ்லிம்கள் முன்னெடுப்பதற்கான ஒரு சந்தர்ப்பம் இருக்கிறது. முதலில் தமக்கு மத்தியிலான முரண்பாடுகளை பேசித் தீர்த்துக் கொள்ளவும், உடன்பாடுகளை எட்டவும் முடியும். நான்கு மாதங்கள் யுத்தம் செய்யத் தடுக்கப்பட்டமை என்பது நிர்ப்பந்தமாக சமாதான மேசைக்கு அழைத்து வருவதற்கான ஒரு ஏற்பாடு. ஏனெனில் சமாதான வாழ்வுதான் அடிப்படை, யுத்த வாழ்வு அல்ல.

நபியவர்கள் ஹஜ்ஜிலே ஆற்றிய இறுதியுரை வெறுமனே ஒரு வணக்கம் மட்டுமல்ல. மாற்றமாக அது ஒரு மாநாட்டுரை, அதன் உள்ளடக்கம் உலக சமாதானத்துக்கான ஒரு அழைப்பு. மனித உரிமைகள் காக்கப்படுவதற்கான ஒரு அழைப்பு.

குலபாஉர் ராஷிதூன்கள் தமது ஆட்சிக் காலத்தில் தமது கவர்னர்களது பணியினை மதிப்பீடு செய்வதற்கான காலமாக இதனைப் பயனபடுத்தினார்கள். மக்களது குறைகளைக் கேட்பதற்கான காலமாக இதனைப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

கலீபா உஸ்மான் (றழி) அவர்கள் எல்லாப் பிரதேசங்களுக்கும் அனுப்பிய ஒரு சுற்றறிக்கையில் குறிப்பட்ட விடயத்தைப் பாருங்கள். ''ஹஜ் காலப்பகுதியில் எனது ஒவ்வொரு கவர்னரும் தனது அறிக்கையை என்னிடத்தில் எடுத்து வர வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். நன்மையை ஏவவும் தீமையைத் தடுக்கவும் நான் மக்களுக்கு அதிகாரம் வழங்கியிருக்கிறேன். எனக்கோ அல்லது எனது கவர்னர்களுக்கு எதிராக முன்வைக்கப்படும் எந்த முறைப்பாட்டுக்கும் தீர்வு வழங்கப்படும். என்னிடத்திலோ எனது கவர்னர்களிடத்திலோ மக்களுக்குச் சேர வேண்டிய ஒரு உரிமை இருந்தால் அது உடனடியாக மக்களுக்கு வழங்கப்படும். சில மனிதர்கள் ஏசப்படுகிறார்கள் அடிக்கப்படுகிறார்கள் என்று மதீனாவாசிகள் என்னிடத்தில் ஒரு முறைப்பாட்டை வைத்திருக்கிறார்கள். இவை போன்ற முறைப்பாடுகள் யாரிடம் இருக்கின்றனவோ அவர்கள் ஹஜ் காலப்பகுதியில் உரிய ஆவணங்களுடன் வந்து, என்னிடமிருந்தோ அல்லது தமது கவர்னர்களிடமிருந்தோ தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ளட்டும் அல்லது அவற்றை தானம் செய்து விடட்டும். அல்லாஹ் தானம் செய்பவர்களை விரும்புகிறான்''[4].

மேற்சொல்லப்பட்ட இரு உதாரணங்களிலும் முக்கியமாக வலியுறுத்தப்படும் உண்மை என்னவெனில், முஸ்லிம் உம்மத் தனது சர்வதேசப் பணியை செய்வதற்கு கிலாபத் போன்றதொரு அரசியல் உடன்பாடு எட்டப்படும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஹஜ் கடமையின் போதே சிறந்த திட்டமிடலின் மூலம் தமது சர்வதேசப் பங்களிப்பை வழங்க முடியும். இஸ்லாம் என்பது உலகிற்கு ஒரு அருள் என்பதை செயல் வடிவில் கொண்டுவர முடியும்.

மூன்றாவது: ஹஜ் ஒரு செரிவான ஆன்மீகப் பயிற்சி நெறி

அல்குர்ஆனில் உள்ள ஹஜ் பற்றிய வசனங்களை பொதுவில் பார்க்கின்ற பொழுது, 'திக்ர்' எனும் அல்லாஹ்வை நினைவுகூர்தல் பற்றி அடிக்கடி பேசியிருப்பதை அவதானிக்கலாம். உதாரணமான ''நீங்கள் அறபாவிலிருந்து திரும்பி வந்தால் அல்லாஹ்வை நினைவுபடுத்துங்கள். அல்லாஹ் உங்களுக்கு காட்டித் தந்தது போல் நினைவுபடுத்துங்கள். உங்கள் கிரியைகளை முடித்துவிட்டான் உங்கள் பெற்றோரை நினைவுபடுத்துவது போல் அல்லது அதனை விடவும் கடுமையாக அல்லாஹ்வை நினைபடுத்துங்கள்.'' (பகரா: 198, 199, 200)

அதே போன்று மற்றோர் இடத்தில் ஹஜ்ஜின் நோக்கமாகவே திக்ரைக் குறிப்பிடுகிறது. ''தமக்கான பௌதீகப் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் குறிப்பிட்ட நாட்களில் அல்லாஹ்வை நினைவுபடுத்தவதற்காகவும்.'' (ஹஜ்:28)

அதே போன்று பாவங்கள், வீண் தர்க்கங்களில் ஈடுபடக் கூடாது என்றும் தக்வாவோடு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் அல்குர்ஆன் கூறுகிறது: ''ஹஜ் சில குறிப்பிட்ட மாதங்களுக்குரியது, அந்த மாதங்களில் ஹஜ்ஜை நிறைவேற்றுபவர் மனைவியுடன் உறவு கொள்ள வேண்டாம். பாவம் செய்ய வேண்டாம். வீண் தர்க்கங்களில் ஈடுபட வேண்டாம். நீங்கள் செய்யும் நற்கருமங்களை அல்லாஹ் நன்கறிவான். ஹஜ்ஜுக்குத் தேவையான பொருட்களை தயார்படுத்தி வைத்துக் கொள்ளுங்கள், மிகச் சிறந்த தயார்நிலை தக்வாவாகும்.'' (பகரா: 197)

இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் நபியவர்கள் கூறினார்கள்: ''யார் மனைவியுடன் உறவு கொள்ளாது, பாவங்களில் ஈடுபாடாது, ஹஜ்ஜை நிறைவேற்றுகிறாரோ அவர் அன்று பெற்றெடுக்கப்பட்ட குழந்தை போன்று பாவங்கள் அற்றவராக மாறுவார்'' என்றார்கள். (புஹாரி).

மேற்குறித்த அல்குர்ஆன் வசனங்கள் ஹதீஸ்களைப் பார்க்கின்ற பொழுது, ஹஜ் என்பது குறிப்பிட்ட காலம் ஓரிடத்தில் மனிதர்களை ஒன்றிணைத்து வழங்கப்படுகின்ற செரிவானதொரு ஆன்மீகப் பயிற்சி நெறி என்பது புலனாகின்றது. இத்தகைய செரிவானதொரு பயிற்சி நெறிக்கு மனிதன் உட்படவேண்டும் என்பது ஹஜ்ஜின் ஒரு மக்ஸத். அதாவது பல்வேறு வித்தியாசப்பட்ட செயற்பாடுகளுடன், மனித நடத்தைகளையும் உள்ளத்தையும் கட்டுப்படுத்தி, அல்லாஹ்வுடன் அவனை சந்திக்க வைக்கின்ற ஒரு வேலை நடைபெறவேண்டும்.

இதனை கலாநிதி ரைஸூனி அவர்கள் ''தௌரா தர்பியா'' தர்பியா பயிற்சி நெறி என்றார்கள்[5]. கலாநிதி கர்ளாவி அவர்கள் ''ஷஹ்னா ரூஹிய்யா''ஆன்மீக சார்ஜ் பண்ணுதல் என்றார்கள்[6].

இக்கருத்தை இன்னும் தெளிவுபடுத்தும் வகையில், கலாநிதி அஹ்மத் ரைஸூனி அவர்கள் கூறுகிறார்கள். ஹஜ் என்பது ஏனைய எல்லா இபாதத்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான இபாதத்தாகும். அதில் அவனது உடம்புக்கும் உள்ளத்திற்கும் அறிவுக்கும் செல்வத்திற்கும் நேரத்திற்கும் எல்லாவற்றிற்குமான பயிற்சி நடைபெறுகின்றது. ஹஜ்ஜில் சிரமம், போராட்டம், பிரார்த்தனை, திக்ர், சிந்தனை, பொறுமை, தியாகம், செலவழித்தல் என அனைத்தும் உள்ளடங்கியிருக்கிறது என்கிறார்[7].

(1). கலாநிதி அஹ்மத் ரைஸூனி, கட்டுரை, அல் அமலுல் இஸ்லாமி பைனல் லியக் அத் தன்மீமிய்யா வல் முபாதராத் அல் அபவிய்யா, அல் இஸ்லாஹ் வெப்தளம், 13 மே 2017.

(2). கலாநிதி அஹ்மத் ரைஸூனி, மகாஸிதுல் இபாதாத் விரிவுரைத் தொடர், 10 ஆவது அமர்வு, அல்மகாரிபிய்யா தொலைக்காட்சிச் சேவை, 2016.

(3). கலாநிதி யூசுப் அல்கர்ளாவி, அல் இபாதா பில் இஸ்லாம், மக்தபது வஹ்பா, கெய்ரோ, 24ம் பதிப்பு, 1995, பக்கம் 304.

(4). கலாநிதி யூசுப் அல்கர்ளாவி, அல் இபாதா பில் இஸ்லாம், மக்தபது வஹ்பா, கெய்ரோ, 24ம் பதிப்பு, 1995, பக்கம் 309.

(5). கலாநிதி அஹ்மத் ரைஸூனி, மகாஸிதுல் இபாதாத் விரிவுரைத் தொடர், 10 ஆவது அமர்வு, அல்மகாரிபிய்யா தொலைக்காட்சிச் சேவை, 2016.

(6). கலாநிதி யூசுப் அல்கர்ளாவி, அல் இபாதா பில் இஸ்லாம், மக்தபது வஹ்பா, கெய்ரோ, 24ம் பதிப்பு, 1995, பக்கம் 302.

(7). கலாநிதி அஹ்மத் ரைஸூனி, மகாஸிதுல் ஹஜ் வல் உம்ரா, கட்டுரை, ஷபகா அல் பிக்ஹிய்யா இணையத்தளம், 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைப்பந்தாட்ட வீராங்கனை ரிம்லா அக்தார்

பிரிட்டன் உதைப்பந்தாட்டக் கழகத்தின் உறுப்பினராக உள்ள ரிம்லா அக்தார், அந்நாட்டின் முஸ்லிம் பெண்கள் விளையாட்டுக் கழகத்தின் தலைவியாகவும் செயல்படுகின்றார். குறிப்பாக, பிரிட்டனில் வாழும் சிறுபான்மை இனச் சமூகங்களுக்கு நாட்டின் பல்வேறு துறைகளிலும் சம வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என செயல்பட்டு வருகின்றார்.

சிறந்த பேச்சாளரும் மாநாட்டு ஒருங்கிணைப்பாளரும் மத்தியஸ்தம் வகிப்பவருமான ரிம்லா ஒரு பட்டயக் கணக்காளர். பல்வேறு அமைப்புகளில் பல்வேறு பதவிகளை ரிம்லா வகித்து வருகின்றார். தேசிய ஓட்டப் பந்தய ஆலோசனைக் குழு, ஆசிய முஸ்லிம் பெண்கள் செயற்குழு, என்பவற்றிலும் இவர் அங்கத்துவம் வகிக்கிறார்.

2005 இல் பிரிட்டிஷ் முஸ்லிம் பெண்கள் உதைப்பந்தாட்டக் குழுவுக்கு தலைவியாகச் செயற்பட்டார். 2015 இல் பதின்ம வயது கிரிக்கெட் அணியில் இணைந்து விளையாடினார். 2013 இல் பிரிட்டனின் சண்டே டைம்ஸ் பத்திரிகையால் அவ்வருடத்தின் விளையாட்டு வீராங்கணையாகப் பிரகடனம் செய்யப்பட்டதோடு சமூக விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தொழில் ரீதியில் பட்டயக் கணக்காளராகப் பணியாற்றி வரும் அவரோடு சர்வதேச பட்டயக் கணக்காளர் ஒன்றியம் தனது இணையத்தளத்திற்காக நேர்கண்டது. அதன் முக்கிய பகுதி கீழே தரப்படுகின்றது.

*** உங்களுடைய விளையாட்டு ஆர்வம் எவ்வாறு ஆரம்பித்தது?**

1980 களிலும் 1990 களிலும் நாம் பிரிட்டனில் பல்வேறு இனவாத பாகுபாடுகளுக்கு உட்பட்டோம். எனக்கு மூத்த சகோதரர்கள் இருவர் உள்ளனர். அவர்களே என்னைப் பாதுகாத்தனர். விளையாட்டுத் துறையில் ஈடுபடவும் அவர்களே காரணம். விளையாட்டுத் துறை பலராலும் கவனிக்கப் படாத ஒன்று. ஹிஜாப் அணிந்த நிலையில் உதைப்பந்தாட்டத்தில் ஈடுபட்டமை அப்போது பலருக்கு அந்நியமாகவே தெரிந்தது. விளையாட்டு என்னிடம் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பியதோடு, ஏனைய மனிதர்களுக்கு உதவ வேண்டும் என்ற மனப்பான்மையையும் அளித்தது.

*** விளையாட்டில் சமத்துவம் ஏன் முக்கியமாகின்றது?**

சமூகத்தின் எல்லாத் தளங்களிலும் சமத்துவமும் அனைவரை உள்ளடக்குவதும் முக்கியமானது. குறிப்பாக, தற்போதைய உலக சூழலில் நீதியான எந்தவொரு சமூகத்திலும் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது திறமையை வெளிப்படுத்த வாய்ப்பளிக்கப்பட வேண்டும். விளையாட்டு மக்களை ஒன்றிணைப்பதற்கு ஒரு பலமான கருவியாகும். தனிமனிதர்களையும் சமூகங்களையும் விருத்தி செய்வதற்கு விளையாட்டு என்ற சக்தியை நாம் பயன்படுத்தலாம். ஒரு மிகச் சிறந்த பூகோள சமூகத்தைக் கட்டியெழுப்ப விளையாட்டு சிறந்ததோர் கருவியாகும்.

*** உங்களது வாழ்க்கையில் நீங்கள் அடைந்த மிகப் பெரிய சாதனை என்ன?**

MBE பட்டம் பெற்றமை முக்கியமானது. மிகப் பெரிய சாதனை என்று சொல்வதற்கில்லை. மிக இளம் வயதிலேயே பிரிட்டனின் உதைப்பந்தாட்டக் கழகத்தில் அங்கத்துவம் பெற்றமையும் முஸ்லிம் பெண்கள் விளையாட்டுக் கழகத்தின் தலைவியாகத் தெரிவுசெய்யப்பட்டமையும் முக்கியமானவை. எனது பயணம் இப்போதுதான் ஆரம்பித்துள்ளது.

*** உங்களது கடைசி இலக்கு என்ன?**

சமூகத்தில் தனித்துவத்தையும் சமத்துவத்தையும் உருவாக்குவதற்கு உழைக்கின்ற ஒருத்தி என்ற வகையில் நான் அடைய விரும்பும் இலக்கை எனது வாழ்நாளில் காண்பேனா என்று எனக்குத் தெரியவில்லை. எதிர்வரும் தலைமுறையேனும் அந்த இலக்கை அடைவதற்கான வழிவகைகளை விட்டுச் செல்வதே எனது நோக்கமாகும்.

*** உங்களது பட்டயக் கணக்காளர் எனும் தொழிற் தகைமை உங்களது முன்னேற்றத்திற்கு எந்தளவு தூரம் உதவியது?**

எனது வாழ்வின் முன்னேற்றத்தில் இந்தத் தொழிற் தகைமை மிகப் பெரிய பகுதியாகும். விஞ்ஞானபூர்வமான சிந்தனையிலிருந்து பரந்துபட்ட பூகோள வணிகப் புரிதலை அதுவே ஏற்படுத்தியது. மிகச் சரியான நேரத்தில் அந்தத் தகுதியை நான் பெற்றேன். அதே வேளை, முஸ்லிம் பெண்களின் விளையாட்டுக் கழகத்தில் நான் தலைவிப் பதவியைப் பெறுவதற்கு பட்டயக் கணக்காளர் தகைமை உதவியது.

*** நீங்கள் அடுத்தவர்களுக்கு விடுக்கும் ஆலோசனை என்ன?**

அடுத்தவர்கள் நம்மை ஏற்றுக்கொள்ளும் வகையில் நாம் செயல்பட வேண்டும். எனது தொழிற் தகைமையும் விளையாட்டுத் துறை ஈடுபாடும் அதற்கான வாய்ப்பை எனக்குத் தந்தது. முதலில் நாம் நம்மை நேசிக்க வேண்டும். நம்மை நாம் அங்கீகரிக்க வேண்டும். நாம் அடுத்தவர்களால் கவரப்படுவது போன்று நம்மால் அடுத்தவர்கள் கவரப்படும் வகையில் நமது சுவாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்.

வரலாற்றில் இலங்கை முஸ்லிம்களின் வெளிநாட்டு ராஜதந்திரப் பணிகள்

• **O.S.M. அலி** (வரலாற்றாய்வாளர்)

மானிட வாழ்வியல் சுழற்சிக்குள் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ள ஒவ்வொரு சமூக குழுமங்களும் தனது வரலாற்று எச்சங்களை விட்டுச் சென்றுள்ளன. இது ஓர் உண்மைத் தன்மையைக் கொண்டுள்ள செயற்பாடாகும்.

வரலாற்று நூல்களை நாம் கையாளும் பொழுது அந்த நூல்களில் பதியப்பட்டுள்ள சுவையான நிகழ்வுகளையும் வியப்புக்குரிய நிகழ்வுகளையும் மனதில் அசை போட்டு உள்வாங்கப்பட்டு அதற்கான ஒரு விமர்சனத்தை வெளிப்படுத்தி விட்டு திருப்தியடைந்து விடுகின்றோம். அல்லது தனது தேவைக்குரிய ஒரு உசாத்துணை நூலாக அதனைப் பயன்படுத்துகின்றோம்.

வரலாற்று நூல்களில் பதியப்பட்டுக் கிடக்கின்ற சிறுபான்மை இன மக்களின் குறியீடுகளை மிக நுண்ணியதாக அவதானிப்பதற்குத் தவறிவிடுகின்றோம். வரலாறுகளை அணுகும்போது நம்மை விட்டுச் சென்றுள்ள நமது சமூகக் குழுமங்களின் வாழ்வியல் கலாச்சார விழுமியங்களின் எச்சங்களை அறிந்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பினைப் பெறுகின்றோம்.

நிகழ்கால தேவைகளின் சிந்தனையோட்டங்களுக்கு கடந்த கால வாழ்வியலின் உண்மைத் தன்மைகளைக் கண்டறிந்து கொள்வதற்கான தேடலில் நாம் மிகவும் கவனஞ் செலுத்த முற்பட்டு விடுகின்றோம்.

இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் நிலைகொண்டிருந்த அனுராதபுரம், பொலன்னறுவை, குருனாகல, யாப்பகூவ, கம்பளை மற்றும் தம்பதெனிய ஆகிய இராஜ்யங்கள் சிதைவடைந்தன. ஆனால், இன்றுவரை அவற்றின் சிறப்புகள் அழியாது வாழ்கின்றன. கோட்டை இராஜ்யம் சிதறுண்ட நிலையில் இருந்தது. அது 1505 இல் இலங்கை மண்ணில் கால் பதித்த போர்த்துக்கேயர்களினால் சிதைவடைந்தது. கண்டி இராஜ்யம் எழுச்சி பெற்றது.

கண்டிய இராஜ்யம் 1602-1996 வரை ஆட்சியிலிருந்த டச்சுக்காரர்களினால் அதிகாரத்திற்குட்பட்ட எல்லையாக இணைக்கப்படவில்லை. அவர்களின் பிடிக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் தலைநிமிர்ந்து தனித்துவமான ஆட்சியில் நிலைகொண்டிருந்தது.

திருமலை நாயக்கர் பரம்பரையில் அரசர்கள்

- நரேந்திர சிம்ஹா - 1707 - 1739
- ஸ்ரீ விஜய ராஜசிம்ஹா - 1739 - 1747
- கீர்த்தி ஸ்ரீ ராஜசிம்ஹா

கண்டி இராஜ்யத்தின் நிருவாக சீரமைப்பு இந்திய திருமலை நாயக்கரின் வழித்தோன்றல்களினால் கண்காணிக்கப்பட்டு நிலையான ஆட்சி அதிகார அமைப்புகள் ஒழுங்கமைக்கப்பட்டு வந்தன. நிர்வகிக்கும் அதிகாரிகளை தேர்ந்தெடுக்கும் வழிமுறைகளிலும் அவர்களுக்கான பதவிகளை நிர்ணயிக்கும் வழிமுறைகளிலும் ஒவ்வொரு அதிகாரிகளுக்குரிய உடை அலங்காரங்களைத் தெரிந்தெடுக்கும் வழிமுறைகளிலும் ஒரு சிறப்பான செயல்முறைகள் நிலைகொண்டிருந்தன. இந்த சிறப்பம்சங்களைக் கண்டறிந்த ஐரோப்பியர்கள் வியந்தனர்.

கண்டி அரசனின் போர்ப் படை அணிகள் எதிரிகளின் படை அணிகளுடன் ஊடுருவிச் செல்லக் கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தது. கண்டி அரசனின் போர்ப் படை அணிகளை சாணக்கிய முறையில் வியூகம் அமைத்து நடாத்திச் செல்லக் கூடிய திறமையான நம்பிக்கைக்குரிய ஆற்றல் மிகுந்த தலைமைத்துவம் செயற்பட்டு வந்தது.

1766 ஆம் ஆண்டு கண்டி அரசர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் இடையே செய்யப்பட்டிருந்த உடன்படிக்கை செயலிழந்து போனது. கண்டி அரசன் துணிவுடன் கண்டி டச்சு விஸ்தீரணத்தைத் தடைப்படுத்த முற்பட்டான். டச்சு அதிகாரிகள் கண்டி அரசனிடமிருந்து கறுவா கொள் முதல் செய்வதனை விட தாங்கள் அதனை பயிர் செய்தால் அதிக இலாபம் பெற முடியும் என்ற ஓர் எதிர்பார்ப்புடன் கறுவா தோட்டங்களை அமைத்து, அதில் கறுவாச் செடிகளை நட்டுவித்து, அதனைப் பாதுகாப்பதற்காக அந்தத் தொழில்நுட்பத்தில் மிகுந்த அனுபவமுள்ள தொழிலாளர்களான 'சாலியர்' எனும் கணக்குக் குடும்பத்தைச் சேர்ந்தோர்களை சிலாபப் [illegible] யில் இருந்து அழைத்து வந்தன[illegible]

ஆனால், கண்டி அரசன் இவர்களை தனது கண்காணிப்புக்குள் கொண்டு வந்து கறுவாத் தோட்டங்களை நிர்மூலமாக்கி விட்டான். இதனை சற்றும் எதிர் பாராத டச்சுக்காரர்கள் அவமானத்துடன் பெரும் நஷ்டத்திலும் வீழ்ந்தனர்.

மக்களின் அன்றாடத் தேவைக்குரிய அத்தியவசியப் பொருட்களை இந்தியக் கடற்கரைப் பிரதேசத்திலிருந்து இலங்கை கடற்கரைப் பிரதேசத்திற்கு கள்ளக் கடத்தல் மூலமாக பொருட்களை நாயக்கர்களினால் கண்டி இராஜ்யத்திற்குள் கொண்டு வரப்பட்டன. இந்த கடத்தல்களை செய்து வந்த நாயக்கர்களுக்கு காரைக்கால் கடற் பகுதியில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களும் சிலாபப் பகுதியில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களும் பூரண ஒத்துழைப்பு நல்கினர். தமிழ் நாட்டு நவாப்களின் வருகைக்கு முன் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஒரு பகுதி நாயக்கரின் நிர்வாகத்தின் கீழும் மற்றைய பகுதி தேவர்களின் நிர்வாகத்திற்குக் கீழும் செயற்பட்டு வந்தது. அக்காலப் பகுதியில் அப்பிர தேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் அவர்களுடன் இணைந்து செயற்பட்டு வந்தனர். (அந்த நெருக்கத்தின் காரண மாக காரைக்கால் முஸ்லிம்கள் நாயக்கர் களுக்கு ஒத்துழைப்பு வழங்கினர்.)

இந்த கடத்தல் செயற்பாடுகளில் கண்டி மன்னனுக்கு ஆதாவாகவும் டச்சுக்காரர்களுக்கு எதிராகவும் முஸ்லிம்கள் செயற்பட்டனரே தவிர முஸ்லிம்கள் சுய இலாபத்திற்காக செயற்படவில்லை என்பதை நாம் நன்றாக உணர வேண்டும்.

இந்த கடத்தல் பொருட்களின் விற்பனை மூலமாக டச்சு அரசாங்கத்திற்கு பெரு நஷ்டம் ஏற்பட்டது. மேலும் கண்டி அரசன் தன்னிடம் சரணடைந்த போர்த்துக்கேய போர் வீரர்களைக் கொண்டு அழுத்தங்களை டச்சுக்காரர்களுக்குக் கொடுத்து வந்தான். இதற்கு மத்தியில் இயற்கை அழிவினால் ஏற்பட்ட பொருளாதார நஷ்டத்திற்குள் சிக்கி டச்சுக்காரர்கள் தத்தளித்தனர்.

[illegible]

செயற்பாடுகளைக் கண்டு வியப்புற்றனரே தவிர, முஸ்லிம் களின் பொருளாதார வளர்ச்சிக்கு இடை யூறாக பறங்கியர்களை (போர்த்துக்கேயர் மற்றும் சிங்களப் பெண்களின் திருமணத்தின் மூலமாகப் பிறந்தவர்கள்) ஊக்குவித்தனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தனர். அத்தோடு அவர்களுக்கு எல்லா விதமான வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுத்ததோடு, முஸ்லிம்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டும் என்று அழுத்தமும் கொடுத்தான். ஆனால், அவர்கள் முஸ்லிம்களுடன் இணைந்து செயற்பட்டதன் காரணமாக டச்சுக்காரர்கள் தோல்வியைத் தழுவினர்.

இந்தியாவில் கடற் பிரதேசங்களில், குறிப்பாக வங்காள விரிகுடாக் கடல் பிரதேசங்களில் பிரித்தானிய அதிகாரிகளுக்கும் பிரான்ஸிய அதிகாரிகளுக்கும் இடையே அடிக்கடி நிகழ்ந்து வந்த போர்களினால் அப்பிரதேசங்கள் பாதுகாப்பற்றவையாகவும் அச்சமூட்டக் கூடியவையாகவும் பிரித்தானியர்களுக்கு இருந்தன. அதனால் அவர்கள் தங்களுக்கு மிக பாதுகாப்பான ஓர் இடத்தை நாடினர்.

இலங்கையில் திருகோணமலை கடற் பிரதேசங்கள் இயற்கை வளமும் வனப்பும் மிகுந்த பகுதியாகக் காணப்பட்டமையால் அப்பிரதேசம் தங்களுக்கு உகந்ததாகவும் பயன்படக் கூடியதாகவும் இருக்குமென்று பிரித்தானிய ஆட்சி நிருவாகத்தின் தலைமைப் பீடங்கள் விரும்பின.

1796 இல் பிரித்தானிய கடற்படை வீரர்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களை கையகப்படுத்தினர் அக்காலப் பகுதியில் அப்பிரதேசங்கள் அனைத்தும் டச்சுக்காரர்களின் ஆட்சி, அதிகாரத்திற்கு உட்பட்ட பிரதேசங்களாக இருந்தன. இருந்தும் பலவந்தமாகக் கைப்பற்றினர். ஆனால், டச்சுக்காரர்கள் இலங்கையை விட்டு முழுமையாக வெளியேறினால் கடற்பிரதேசங்களைத் தங்கள் அதிகார நிருவாகத்திற்குள் கொண்டு வர முயும் என்ற நிலைப்பாட்டை உணர்ந்தனர். அதனால் டச்சுக்காரர்களுக்குக் கூடுதலான அழுத்தங்களைக் கொடுத்து வர ஆரம்பித்தனர்.

பொருளாதார வளர்ச்சியையும் செழிப்பையும் எதிர்பார்த்து வந்த டச்சுக்காரர்கள் தங்களுக்கு ஏற்பட்டு வரும் நஷ்டங்களில் இருந்தும் நெருக்கடியிலிருந்தும் விடுபடுவதற்கு பிரான்ஸிய அதிகாரிகளின் உதவியைப் பெற முடியாத ஒரு நெருக்கடியான சூழ்நிலையில் தவித்தனர்.

கண்டி அரசன் உதுமான் லெப்பை என்பவரை தனது தூதுவராக பிரான்ஸிய அதிகாரிகளிடம் 12 முறை அனுப்பி வைத்ததன் மூலமாக உதுமான் லெப்பை கண்டி மன்னனுக்குச்சாதகமான உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் உடன் படிக்கையின் மூலமாக பெற்று வந்து, கண்டி அரசனிடம் கையளித்திருந்தான். அதனால் ஏற்பட்டிருந்த மிகுந்த மகிழ்ச்சியின் காரணமாக உதுமான் லெப்பையை கௌரவித்து மகிழ்ந்தான் கண்டி அரசன்.

உதுமான் லெப்பை

சரளமாக பிரெஞ்சு மொழி பேசக் கூடிய ஆற்றலையம் அமைதியான முறையில் அன்றைய நெருக்கடியான சூழலை நன்றாக உணர்ந்து கொண்டு ஆற்றல் மிக்க செயலாற்றும் திறனுடம் உதுமான் லெப்பை செயற்பட்டார் என்பதை நாம் மறந்து விடக் கூடாது. அவருடைய தூதுத்துவப் பணி தோல்வி கண்டிருந்த டச்சு ஆட்சியாளர்கள் பிரெஞ்சு அதிகாரிகளின் துணையுடன் இன்னும் பத்து வருடங்கள் இலங்கையை ஆட்சி செய்திருப்பார்கள் என வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

அதனால் உதுமான் லெப்பையின் அப்பணி எத்கைய சிறப்பு வாயந்தது என்பதை நாம் உணர்ந்துகொள்ளலாம். உதுமான் லெப்பை போன்ற இன்னும் எத்தனையோ பேர் இலங்கை வரலாற்றின் இருளில் புதைந்து கிடக்கின்றனரோ தெரியவில்லை. இலங்கையை தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வரும் நாம், நமது முன்னோர்களின் இலங்கைக்கான அரும் பணிகளையும் பங்களிப்புகளையும் வெளிக்கொணர வேண்டும்.

உதுமான் லெப்பையின் ராஜதந்திர நகர்வுகளை அடுத்தே டச்சுக்காரர்கள் நாட்டை விட்டும் போகக் கூடிய நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள். அவர்கள் 1898 இல் நாட்டை விட்டுச் செல்லும் போது இலங்கையின் வளத்தை மட்டும் கொண்டு செல்லவில்லை. மனித அழிவையும் அவலத்தையும் தந்து சென்றார்கள் என்பதையும் நாம் மறந்து விடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்திய வங்கி... (04 ஆம் பக்கத் தொடர்)

- அதுமட்டுமல்லாது, இந்த வழக்கு விசாரணையில் மிகப் பிரதானமாக Perpetual Treasuries Limited மோசடிகளும் அது சார்ந்த விடயங்களுமே கவனத்தில் கொள்ளப்படுகிறது. ஆனால், இதனைத் தவிர்த்து ரவி கருணாநாயக்க இயக்குனராகவிருந்து, நிதியமைச்சர் ஆனதன் பின்பு, பதவி விலகி தமது மனைவி மற்றும் மகளிடம் ஒப்படைத்த Global Transport and Logistics நிறுவனம் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது.

- Global Transport and Logistics நிறுவனமானது 70% ரவி கருணாநாயக்க அவர்களது குடும்ப முதலீட்டையும், 30% Hampton Group நிறுவனத்தினது முதலீட்டாலும் உருவாக்கம் பெற்றுள்ளது. (ஆதாரம்: http://www.sundaytimes.lk/170806/columns/bond-probes-explosive-claims-threaten-to-eclipse-i-know-nothing-ravi-ks-sun-253229.html))

இதில் Hampton Group நிறுவனத்தின் உரிமையாளராக லக்ஷ்மி காந்தன் உள்ளார். இவர், கடந்த காலங்களில் மோசடி மற்றும் பல்வேறு விடயங்கள் தொடர்பில் தேடப்பட்ட எமில் காந்தனின் குடும்ப உறுப்பினர் ஆவார். அப்படியாயின், அவருக்கும் நிதியமைச்சரின் குடும்ப நிறுவனத்துக்குமான தொடர்பு என்ன என்பதையும் வெளிச்சத்திற்கு கொண்டுவர வேண்டியது அவசியமல்லவா?

- அதுபோல, Global Transport and Logistics சர்ச்சைக்குரிய வீட்டை கொள்வனவு செய்ய பணம் வழங்கியிருந்தது. இந்தப் பணம் செலான் வங்கியிடமிருந்து பெறப்பட்ட கடனிலிருந்து வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும், Global Transport and Logistics நிறுவனத்தின் மற்றுமொரு இயக்குனரான லக்ஷ்மி காந்தன் அவர்களின் பணத்திலிருந்துதான் குறித்த கடனுக்கான பணம் வங்கிக்கு வழங்கப்பட்டதாக Global Transport and Logistics கணக்காளர் கூறியுள்ளார்.

அவரது கூற்றுப்படி, பிரித்தானியாவிலிருந்து லக்ஷ்மி காந்தன் 2016 மற்றும் 2017 மாசி மாதம் இரண்டு தடவை இலங்கைக்கு வருகை தந்தபோது, சுமார் 70 மில்லியன் மற்றும் 75 மில்லியன் பணத்தை கையிலே கொண்டு வந்து நிறுவனத்தின் பாதுகாப்புப் பெட்டகத்தில் வைத்ததாகவும், நிறுவனம் வீட்டுக் கடனுக்கான மாதாந்த தவணைக் கட்டணத்தை கட்ட போதிய பணமின்மை காரணமாக, குறித்த பணத்தை உபயோகிக்க தனக்கு அறிவுறுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

- அப்படியாயின், சுமார் 145 மில்லியன் ரூபாய் லக்ஷ்மி காந்தனால் கொண்டுவரப்பட்ட பணத்திலிருந்துதான் வீட்டுக்கான கடன் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், குறித்த பணத்தை பெற்றுக் கொண்டதற்கு எவ்வகை பதிவுகளையும் Global Transport and Logistics தனது கணக்குகளில் கொண்டிருக்கவில்லை. அப்படியாயின், இவ்வளவு பெரிய தொகை இலங்கையின் பண மோசடி சட்டங்களையும் தாண்டி எவ்வாறு நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது என்கிற கேள்வி நமக்கே எழுகிறது அல்லவா?

- அத்துடன், ஒரு நிதியமைச்சரின் நிறுவனத்தில் குறித்த பணத்துக்கு எவ்வித கணக்குகளும் காட்டப்படாமை அதைவிட ஆச்சரியத்துகுரியதாக இருக்கிறது. அப்படியாயின், இந்த பணத்தின் மூலம் அல்லது இது எதன் மூலம் பெறப்பட்ட பணம் என ஆராயப்பட வேண்டியது அவசியமானது அல்லவா?

குறித்த பணம் முறைகேடான வகையில் உருவாக்கம் பெற்றதாயின் அதனை தனது சொந்த இலாபத்திற்காகப் பயன்படுத்திய ரவி கருணாநாயக்க மற்றும் அவரது குடும்பத்தினர் குற்றவாளிகள் அல்லவா?

நம் கண்முன்னே இடம்பெறும் வழக்கு விசாரணைக்கு வெளியேயும் நிறையவே கேள்விகள் விடையில்லாமல் தொக்கி நிற்கின்றன. இந்த நிலையில் அவசர அவசரமாக அமைச்சர் தனது பதவியை இராஜினாமா செய்து கொண்டமை, தன்மீது பதிந்துகொண்ட தவறான எண்ணத்தை போக்கி, பின்வழியால் தவறுகளை மூடி மறைப்பதற்கான செயல்பாடாக இருக்குமா? அல்லது மேலும் தன்பக்கமாக வழக்குகளோ, கேள்விக்கணைகளோ திரும்பிவிடக் கூடாது என்பதற்கான பாதுகாப்பு முயற்சி இதுவா? என சாமானியர்களுக்கு தோன்றுவதில் தவறில்லைதானே!

அமெரிக்கா... (07 ஆம் பக்கத் தொடர்)

திருகோணமலை துறைமுகக் கட்டுமானப் பணியில் பங்கு, திருகோணமலை மற்றும் ஹம்பந்தோட்டையில் சுதந்திர வர்த்தக வலயங்களில் பங்கு முதலியவைதான் இரண்டு நாடுகளுக்கும் இடையே முக்கிய பேசுபொருளாக அமைந்ததே ஒழிய போர்க் குற்ற விசாரணை, தமிழ்ப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள படைகளைத் திரும்பப் பெறுதல், காணாமற் போன தமிழர்கள் பற்றிய உண்மைகள், இலங்கை இந்திய ஒப்பந்த நிறைவேற்றம் ஆகியவை பேசப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மோடியின் வருகை மகத்தான வெற்றி எனவும் இரண்டு பிரதமர்களுக்கும் இடையேயான 'இரசாயனம்' படுபிரமாதமாக ஒத்துப் போவதாகவும் இலங்கை அமைச்சர் சரத் அமுனுகம சொல்லியுள்ளது குறிப்பிடத்தக்கது. ஒன்றை ஈழத் தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்தியாவில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தனி ஈழம் அமைய அது உதவாது. இலங்கை சிங்கள இனவாத அரசுகளுக்கே அது துணையாக அமையும்.

தனி ஈழம் பிரிந்தால் அது இந்தியாசிதைய ஒரு ஊக்குவிப்பாக அமையும் என்பதே இந்திய அரசியலாரின் புரிதல். தமிழ் அல்லது இந்து எனும் அடையாளத்தின் அடிப்படையில் பா.ஜ.க அரசு தனக்கு உதவும் என எண்ணி ஈழத்தில் சிவசேனா போன்ற பெயர்களில் இந்து அடையாளங்களுடன் கூடிய அமைப்புகளை உருவாக்கும் மறவன் புலவார், யோகேஸ்வரன் முதலானோர் இதைப் புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் என்கிற அடிப்படையிலும் சிங்கள இனவெறிக்குப் பலியாகிறவர்கள் என்கிற அடிப்படையிலும் இணைந்து நிற்க வேண்டிய தமிழர்களும், முஸ்லிம்களும் பிளவுபடுவதற்கே இது இட்டுச் செல்லும்.

இந்திய வெளியுறவுச் செயலர் ஜெய்சங்கர் சென்ற முறை இலங்கை வந்தபோது தமிழ்த் தலைவர்கள் அவரைச் சந்தித்து இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் உள்ளவாறு வடக்கு - கிழக்கு மாகாணங்களின் இணைப்பை வற்புறுத்த வேண்டும் எனக் கோரியபோது என்ன நடந்தது? இனிமேல் இந்தியா அதை வற்புறுத்தாது என அவர் வெளிப்படையாகச் சொல்லவில்லையா?

- **இலங்கை அரசியலின் அண்மைக் காலப் போக்குகளை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

போருக்குப் பிந்திய சூழலை முழுமையாகக் கணக்கில் எடுத்துக் கொண்டும், இலங்கை அரசியலில் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்புள்ள இந்திய அரசின் நோக்கங்கள், மற்றும் இன்றைய புவி அரசியல் சார்ந்த மாற்றங்கள் ஆகியவற்றைச் சரியாகக் கணக்கில் கொண்டு அரசியல் காய்களை நகர்த்துவதாக இன்றைய இலங்கை அரசியல், குறிப்பாக தமிழர்களின் அரசியல் இல்லை. மாறாக தேர்தல் அரசியல் சார்ந்த அபத்தங்கள், முரண்கள், பதவிப் போட்டிகள் என்பதாகத் தமிழர் ஒற்றுமை பலவீனமாகும் நிலையே உள்ளது.

வடக்கு கிழக்கு இணைப்புடன் கூடிய அதிகாரப் பகிர்வு மட்டுமின்றி போருக்குப் பிந்திய சூழலில் மேலெழுந்த எந்தக் கோரிக்கையிலும் பெரிதாக முன் நகர்வு இல்லை. இந்திய-இலங்கை ஒப்பந்தம் நிறைவேறி முப்பதாண்டுகள் ஆகியும் 13 ஆவது சட்டத் திருத்தம் நிறைவேற வாய்ப்பிருப்பதாகத் தோன்றவில்லை. இந்தத் திசையில் கடந்த ஓராண்டில் சில நகர்வுகள் தென்பட்ட போதும் இன்னொரு பக்கம் பௌத்த தலைமைப் பீடம் அதை வெளிப்படையாக எதிர்த்துள்ளதால், அது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது.

மொத்தத்தில் நிலைமையில் எந்த முன்னேற்றமும் இல்லை. இந்த அமைப்பில் முன்னேற்றம் சாத்தியமே இல்லை என்கிற எண்ணம் தமிழர்கள் மத்தியில் உறுதிப்படுவதைப் பற்றி இலங்கை அரசோ பௌத்த தலைமையோ கவலைப்படுவதாக இல்லை.

- **சர்வதேச அரசியல் போக்குகள் குறித்து..**

நான் முன்னரே சொன்னதுதான். சோவியத்தின் வீழ்ச்சி என்பது வெறும் சோவியத்தின் வீழ்ச்சியாக மட்டும் இல்லை. அறம் சார்ந்த அரசியலின் வீழ்ச்சியாகவும் அமைந்து விட்டதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அமெரிக்கத் தலைமையிலான NATO வுக்கு மாற்றாக அமைந்த COMECON, NAM எதுவும் இன்று இல்லை. லத்தின் அமெரிக்க இடதுசாரிகள் சற்றுத் தாக்குப் பிடித்தாலும் அவை பொருளாதார ரீதியாகப் பலவீனமாகவே உள்ளன.

சோவியத்திலிருந்த பிரிந்த நாடுகள் மற்றும் முன்னாள் சோவியத் கூட்டணியில் இருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளை NATO வில் சேர்த்துக் கொள்வதில்லை என்கிற வாக்குறுதியை மீறி இன்று அவை அதில் உள்ளடக்கப்படுவது மட்டுமல்லாமல், ரஷ்யாவின் கொல்லைப் புறம் வரைக்கும் இன்று NATO படைகளும் ஏவுகணைகளும் குவிக்கப்பட்டுள்ளன. பனிப்போர்க் கால முடிவுக்குப் பின்னும் கூட இன்னும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ரஷ்யாவும் சீனாவும்தான் உள்ளன.

முஸ்லிம் நாடுகளில் ஏற்பட்ட அரபு எழுச்சி மிகவும் நம்பிக்கையூட்டத் தக்கதாகத் தொடக்கத்தில் இருந்தாலும் எதிர்பார்த்த முன்னேற்றங்கள் இல்லை. மீண்டும் எகிப்தில் இராணுவ ஆட்சி, துருக்கியில் ஜனநாயகம் அழிக்கப்பட்டு சர்வாதிகாரத்தை நோக்கிய நகர்வு வேகமாக உள்ளது. நம் கண் முன் அழிந்து கொண்டுள்ள சிரியா இன்று உலக அரசியலில் ஏற்பட்டுள்ள அற வீழ்ச்சியின் ஒரு பௌதிக வெளிப்பாடு.

முஸ்லிம் நாடுகள் மத்தியில் அமெரிக்க ஏஜன்டாக இருந்து செயல்படும் சவூதி அரசின் செயல்பாடுகள் மிக ஆபத்தானவையாக உள்ளன. எனினும் உலகமயமான முதலாளியப் பொருளாதாரம் நெருக்கடிகளைச் சந்திப்பது தொடர்கிறது. முதலாளியம் நெருக்கடிகளைச் சந்தித்தே ஆகும் என்கிற மார்க்ஸின் கணிப்பு பொய்க்கவில்லை. தொழிலாளிகளின் தலைமையில் சோஷலிச அரசு என்பதுதான் இன்று பொய்த்துள்ளது.

- **அறிவுஜீவிகள் எவ்வளவு தூரம் சமூக ஊடகங்களை கையாள்கிறார்கள்?**

சமூக ஊடகங்கள் நமது கால கட்டத்தின் ஒரு மிக முக்கியமான வளர்ச்சி. முதலாளித்துவ ஊடகங்களுக்கும் ஒரு வகையில் எதேச்சாதிகார அரசுகளுக்குமே கூட அது ஒரு மிகப் பெரிய சவால். உண்மைகளை இனி அவ்வளவு எளிதாக அதிகாரத்தின் துணை கொண்டு மறைத்துவிட இயலாது என்கிற நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அவற்றின் மீதான கட்டுப்பாடு என்பதை நோக்கி இன்று அதிகாரங்கள் நகர்கின்றன.

ஒரு ஜனநாயகப்படுத்தப்பட்ட ஊடகம் என்கிற வகையில் எளிதில் அது அக்கப்போர்களால் நிரம்புகிற ஆபத்தையும் நாம் கூடவே காண முடிகிறது. இந்த ஊடகங்களைச் சரியான வகையில் பயன்படுத்துவது என்பது நம் கையில் தான் உள்ளது. இதற்கான சரியான பயிற்சியை நாம் இளைஞர்களுக்கும் இயக்க அணிகளுக்கும் அளிக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் நிச்சயமாக இவை பயனுள்ள, சக்தி வாய்ந்த ஆயுதங்களாக நமக்கு அமையும்.

கட்டாரிலுள்ள... (01ம் பக்கத் தொடர்)

1200 பேருக்கு மேல் கல்வி பயில்கின்றனர். எந்த வசதிகளும் இன்றி, முறையான நிதி ஒழுங்குகளுமின்றி கல்வி நடவடிக்கைகள் வீழ்ச்சி அடைந்து வரும் இந்தப் பாடசாலையை தற்போது தூதுவராலயம் பொறுப்பேற்றுள்ளது.

புதிய பாடசாலை அபிவிருத்திச் சங்கம் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இம்மாதம் 10 ஆம் திகதி முதல் பாடசாலை மீளவும் ஆரம்பிக்கப்படும் எனவும் கட்டாருக்கான இலங்கைத் தூதுவர் ஏ.எஸ்.பி.லியனகே தெரிவித்தார்.

கட்டாரில் நடத்தப்பட்டு வரும் இந்தச் சிங்களப் பாடசாலையின் மாணவர்கள், இங்குள்ள பல்கலைக்கழகங்களில் நுழைவதற்கான வாய்ப்புக்களைப் பெறும் வகையில் இந்தப் பாடசாலை அபிவிருத்தி செய்யப்படவுள்ளது. இதற்கென சகல வசதிகளையும் உள்ளடக்கிய கட்டடமொன்றுக்கான அடிக்கல் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன அவர்களினால் எதிர்வரும் ஒக்டோபர் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக தூதுவர் ஏ.எஸ்.பி.லியனகே தெரிவித்தார். இதற்குத் தேவையான நிலத்தை கட்டார் அரசாங்கம் வழங்கி உதவியுள்ளது.

இலங்கையின் தூதுவராலயம் அமைந்துள்ள எந்த வெளிநாட்டிலும், இவ்வாறு சிங்களப் பாடசாலைகள் பொறுப்பேற்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலின்... (09 ஆம் பக்கத் தொடர்)

சமீபகாலமாக பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நகல் சட்ட வரைபுகள் நாட்டின் உத்தியோகபூர்வமான மொழி என்ற அந்தஸ்திலிருந்து அறபை நீக்க வேண்டும் என வாதிக்கின்றன. எல்லோரையும் யூதர்களாக்கும் இத்திட்டம் பலஸ்தீனர்களால் கண்டிக்கப்படுகின்றது.

இஸ்ரேலில் வாழும் மிதவாத யூதர்கள் எவரும் நெடன் யாஹுவின் அரசாங்கம் கொண்டு வரும் அறபுகளுக்கெதிரான சட்ட நகல்களை எதிர்ப்பதில்லை. இது அவருக்கு ஒரு மானசீக ஆதரவை அளிக்கின்றது என தயானா சுட்டிக்காட்டுகின்றார். நெடன் யாஹுவின் திட்டம் இரு நாட்டுத் தீர்வை கிளப்பில் போடுகின்றது.

வொஷிங்டனைத் தளமாகக் கொண்ட PEW ஆய்வு மையம் மேற்கொண்ட கருத்துக் கணிப்பீட்டில் சுமார் அரைவாசி இஸ்ரேலிய யூதர்கள் இஸ்ரேலில் வாழும் பலஸ்தீன அறபுகளை வெளியேற்ற வேண்டும் என்ற கருத்தில் உள்ளனர் என சுட்டிக் காட்டுகின்றது. 400 மில்லியன் அறபு முஸ்லிம்கள் மத்தியில் 4 மில்லியன் யூதர்களோடு நகர்ந்து கொண்டிருக்கும் இஸ்ரேல், அறபுகளின் தலையெழுத்தை தலைகீழாகப் புரட்டுவதற்கு முயற்சிக்கின்றது. ஆனால், 40 கோடி அறபு முஸ்லிம்களோ அமைதியாக இருந்து இந்த அடக்குமுறையை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

புதிய இறைவரி... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆனாலும், தனிநபர் கணக்கீடானது அவரவர் வழங்கும் தகவலுக்கு ஏற்பவே தயாரிக்கப்படுகிறது. எனவே, கணக்காளர்கள் தரவுகளில் உள்ள தவறுகளுக்கு பொறுப்பாக முடியாது. இதுவும் விவாதத்துக்குரியதாகவே புதிய சட்டத்தில் உள்ளது.

- புதிய சட்டத்தின் பிரகாரம், வருமானத்தினை குறித்த காலத்திற்குள் தாக்கல் செய்யாதுவிடின், அதற்கான தண்டப் பணமாக சுமார் 400,000/- அறவிடப்படுவதாக சொல்லப்படுகிறது. ஆனாலும், தற்போது அந்தத் தொகை 50,000/- மாகவே உள்ளது. ஆனாலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இந்த தண்டப் பணம் அறவிடப்படுவதில்லை. இந்த அதிகரிப்பானது நிச்சயம் சிறு வணிக நிறுவனங்களையும், சிறு வருமானவரி செலுத்துபவர்களையும் பாதிக்கவே செய்யும்.

- இறைவரித் திணைக்களத்துக்கு எந்த சந்தர்ப்பத்திலும் வழங்க வேண்டிய ஏதேனும் தகவலை தனிநபர் அல்லது நிறுவனம் வழங்கத் தவறியிருப்பின் அவர்களுக்கு ஒரு மில்லியன் ரூபாய் வரை தண்டப்பணத்தினை விதிக்கக் கூடியதாக அமையும். இதன் போது, மிகச் சிறிய வருமானவரி செலுத்துவோர் ஏதேனும் தகவலை வழங்காதவிடத்து அவரும் ஒரு மில்லியன் தண்டப்பண விதிமுறைக்கு உள்ளாவார்கள். எனவே, தண்டப்பண அளவானது வரி செலுத்துவோரின் தன்மைக்கு ஏற்றவகையில் அமைய வேண்டும்.

- மூலதன ஆதாய வரி (Capital Gain Tax) இந்த புதிய இறைவரி அமுலாக்கலுடன் அறிமுகப்படுத்தப்படவுள்ளது வரவேற்கத்தக்கது. ஆனாலும், இந்த வரி அறிமுகப்படுத்தப்படும்போதே, தன்னகத்தே அதீத தெளிவின்மையைக் கொண்டுள்ளதாக வல்லுனர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். மூலதன ஆதாய வரி 10% ஆக அறவிடப்படுகிறது. ஆனால், இந்த வரியானது நபரொருவர் அன்பளிப்பாக சொத்தொன்றை கையளிக்கும் போதும் கூட இந்த வரியினை செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது.

நமது வழக்கங்களின் பிரகாரம், வயது முதிர்ந்தவர்கள் தமது சொத்துக்களை தமது பிள்ளைகளுக்கோ அல்லது அடுத்த சந்ததிக்கோ வழங்குவது வழமையாக உள்ளது. ஆனாலும், இந்த வரியின் காரணமாக முதியவர்கள் இந்த சொத்தினை வழங்குவதற்கு வரியாக பெரிய தொகையினை செலுத்தவேண்டி ஏற்படலாம். இது அவர்களது வருமான பரம்பலை பாதிக்கக்கூடும். எனவே, இது போன்ற விடயங்களை கவனிக்க வேண்டியது அவசியமாகிறது.

- புதிய இறைவரிச் சட்டமானது எந்தவொருவிடத்திலும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் Foreign Direct Investment தொடர்பிலும், அவற்றுக்கான வரி மூலங்கள் தொடர்பிலும் குறிப்பிடப்படவில்லை. எதிர்வரும் காலத்தில் இலங்கையில் கணிசமான அளவு பங்களிப்பினை அந்நிய முதலீடுகளே வழங்க உள்ளது. இந்த நிலையில், அவற்றுக்கான வரி மற்றும் வரிச் சலுகைகள் தொடர்பில் வெளிப்படுத்த வேண்டியது அவசியமான ஒன்றாகும்.

மேற்கூறிய விடயங்கள் போல இன்னும் பல்வேறு விடயங்கள் போதிய தெளிவற்ற தன்மையைக் கொண்டதாக இந்த புதிய சட்டம் அமைந்திருக்கிறது. இதன் காரணமாகவும், புதிய இறைவரிச் சட்டங்களுக்கு எதிர்ப்புக்கள் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டு இருக்கிறது. புதிய சட்டங்கள் என்பது வரி செலுத்துவோருக்கு ஒரு தண்டனையாக மாறிவிடக் கூடாது. மாறாக, அவர்களது ஒவ்வொரு உழைப்புக்கும் ஏற்றவகையில் வரி னனு அமைய வேண்டும். இதன் போதுதான், அமுலாக்கப்பட்ட வரிகளும் வினைத்திறன் வாயந்ததாக அமையும். இல்லையெனில், வரி ஏய்ப்பினை தவிர்க்க முடியாத சூழ்நிலையே ஏற்படும்.

மீள்பார்வை உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

மீள்பார்வை தனிப் பிரதி	- ரூபா 40.00	இந்தியா		மத்திய கிழக்கு நாடுகள்	- 4000.00	ஐக்கிய இராச்சியம்	- 5500.00
12 இதழ்கள்	- ரூபா 600.00	தனிப் பிரதி	- ரூபா 100.00	மலேசியா	- 4000.00	அமெரிக்கா	- 6500.00
24 இதழ்கள்	- ரூபா 1200.00	ஒரு வருடம்	- ரூபா 3500.00	ஐக்கிய அறபு இராச்சியம்	- 4000.00	அவுஸ்திரேலியா	- 4700.00
						சீனா	- 4600.00

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 077 581661 People's Bank A/c: 0561000053078164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வு மனப்பான்மை
(Inferiority Complex)

தாழ்வு மனப்பான்மை (inferiority complex) என்பது தன்னைத்தானே குறைத்து மதிப்பிடுகின்ற ஒரு தன்மை. திருப்தியின்மையானால் எழுகின்ற உணர்வு. பெரும்பாலும் தாழ்வு மனப்பான்மை உள்ளவர்கள் தம்மைப் பிறருடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். தாழ்வு மனப்பான்மை உள்ளவர்கள் தாம் குறைவானவர்கள், கீழ்நிலையில் உள்ளவர்கள், எதற்கும் பிரயோசனம் இல்லாதவர்கள் என்றே தம்மைப் பற்றிக் கருதுவார்கள். பலர் மனஅழுத்தத்தில் உழல்வார்கள். தற்கொலை செய்து கொள்ளக் கூடிய அபாயம் இவர்களில் உண்டு.

(கட்டற்ற கலைக்களஞ்சியமான விக்கிப்பீடியாவில் இருந்து...)

உங்களிடம் தாழ்வு மனப்பான்மை இருந்தால் முதலில் அதை நீங்கள் ஒழிக்கவேண்டும்.

தாழ்வு மனப்பான்மைதான் உங்கள் முன்னேற்றத்திற்கான மிகப் பெரிய தடைக் கல்லாகும். தாழ்வு மனப்பான்மை ஒருவரது தன்னம்பிக்கையைத் தகர்த்து எறிந்து விடும். எதையும் தோல்விகரமான மனப்பான்மையிலேயே எண்ணத் தோன்றும். சிலர் வறுமையான குடும்பத்தில் பிறந்து இருப்பார்கள். பள்ளியில் படிக்கும் போதும் சரி கல்லூரியில் படிக்கும் போதும் சரி இவர்கள் வசதியான பிள்ளைகளுடன் சேர்ந்து படிக்க வேண்டிய சூழ்நிலை இருந்திருக்கும். வசதியான பிள்ளைகள் அணிந்திருக்கும் உடைகள், செலவு செய்யும் மனப்பான்மை, உணவுப் பழக்க வழக்கங்கள் முதலியவை இவர்கள் மனதைப் பெரிதும் காயப்படுத்தி இவர்களுடைய தன்னம்பிக்கையை இழக்க வழி செய்கிறது. அதுவே அவர்களிடத்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணம் ஆகிறது.

இந்தத் தாழ்வு மனப்பான்மை காலப்போக்கில் மற்றவர்கள் தங்களை மதிக்க வேண்டும் பாராட்ட வேண்டும் என்ற ஆசையினால் நியாயத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட ஆரம்பித்து விடுகிறார்கள்.

காலப்போக்கில் உண்மை தெரிந்த உடன் மிகவும் மனம் நொந்து போய் எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் அவ நம்பிக்கையுடன் ஈடுபடுகின்றனர்.

தாழ்வு மனப்பான்மை உங்கள் தோற்றத்தையே மாற்றி மற்றவர்கள் உங்களை வெறுக்கும் அளவுக்கு செய்து விடும்.

சிலருக்குப் படிக்கும் காலத்திலேயே தாழ்வு மனப்பான்மை உண்டாகிவிடும். அதன் விளைவாகச் சரியாகப் பாடங்களில் கவனம் செலுத்த முடியாமல் போய் குறைவான மதிப்பெண் எடுப்பார்கள். மனம் நொந்து போய் இனி நம்மால் அதிக மதிப்பெண்கள் எடுக்க முடியாது என்ற தவறான முடிவுக்கு வந்து விடுவார்கள்.

பள்ளிப் படிப்பு என்பது ஒருவருடைய வாழ்க்கையை ஓரளவு தான் நிர்ணயம் செய்யும். ஒருவருடைய வளமான வாழ்க்கையைத் தீர்மானம் செய்ய வாழ்க்கையில் எத்தனையோ வழிகள் உள்ளன.

பிறக்கும் குழந்தைக்குத் தாழ்ந்தவரா உயர்ந்தவரா என்று தெரியாது. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்பதெல்லாம் சுய நலம் உள்ள மனிதர்களால் ஏற்படுத்தப் பட்டவை. படைப்பில் எவரும் உயர்ந்தவரும் அல்ல, தாழ்ந்தவரும் அல்ல. அனைவரும் சமம்.

இது போன்று தாழ்வு மனப்பான்மை உண்டாகப் பல காரணங்கள் கூறலாம். தாழ்வு மனப்பான்மையை உங்கள் மனதிலிருந்து விரட்ட வேண்டும் என்றால் முதலில் நம்பிக்கை எனும் விதையை உங்கள் மனதில் விதிக்க வேண்டும்.

நாம் எவருக்கும் தாழ்ந்தவர் அல்ல என்ற நம்பிக்கை விதையை மனதில் ஊட்டித் தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்து எறியுங்கள்.

மீள்பார்வை

தொகுப்பு: அஸாருதீன்



எவ்வளவு நேரம் செல்லும்

ஒரு வண்டியில் தேங்காய்களை ஏற்றிக்கொண்டு வேகமாக வந்துகொண்டு இருந்தான் ஒருவன். குறுக்குப் பாதை ஒன்று வந்தது. அங்கே ஒரு சிறுவன் நின்றிருந்தான்.

''தம்பி, இந்தப் பாதையில் போனால் ஊர் வருமா?'' என்று கேட்டான்.

''வருமே...'' என்றான் சிறுவன்.

''போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?''

''மெதுவாகச் சென்றால் பத்து நிமிடத்தில் போய்விடலாம். வேகமாகச் சென்றால் அரை மணி நேரம் ஆகும்'' என்றான்.

சிறுவன் சொன்ன பதிலைக் கேட்டு வண்டிக்காரனுக்குக் கோபம். ''என்ன கிண்டலா? வேகமாகச் சென்றால் எப்படி நேரம் அதிகமாகும்?'' என்று கேட்டான்.

''போய்த்தான் பாருங்களேன்'' என்று சிறுவன் சொன்னதும், அவன் வண்டியை வேகமாக விரட்டி சென்றான்.

சிறிது தூரம் போனதுமே பாதை முழுவதும் கற்கள் கொட்டி இருந்தது. வண்டி தடுமாறிக் கவிழ்ந்தது. தேங்காய்கள் சிதறின. வண்டியை நிமிர்த்தி கீழே சிதறிய தேங்காய்களை பொறுக்கி எடுத்துப் போடுவதற்கு அரை மணி நேரத்திற்கும் மேலாகிவிட்டது.

வண்டிக்காரனுக்கு சிறுவன் சொன்ன வார்த்தைகளின் அர்த்தம் புரிந்தது.

ஐக்கிய நாடுகள் சபை
(United Nations Organizations - UNO)

இரண்டாம் உலகப் போர் விளைவித்த நாசத்தால், பயங்கர விளைவுகளின் எதிரொலியாக எழுந்ததே ஐ.நா.சபை (U.N.O). போரை ஒழிக்க, பன்னாட்டுக் கூட்டுறவை வளர்க்க, உலக மக்களின் முன்னேற்றத்திற்கும், நல்வாழ்விற்கும் உதவ ஓர் உலக அமைப்பு உருவாக்கப்பட வேண்டிய அவசியம் உணரப் பட்டது. உலக நாடுகளின் அரசியல் அறிஞர்கள் இரண்டாம் உலகப் போரின் இறுதிக் கட்டத்தில் 1945, ஏப்ரலில் சான்பிரான்சிஸ்கோ மாநாட்டைக் கூட்டினர். 51 நாடுகளின் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். இம்மாநாடே ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படை சாசனத்தை வரைந்தது.

இது 1945, அக்டோபர் 24 ஆம் திகதி முதல் செயல்படத் தொடங்கியது. ஜூலை 2011 இல் தெற்கு சூடான் இதன் உறுப்பினராகச் சேர்ந்ததையடுத்து தற்போது ஐ.நா. சபை 193 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இதன் தலைமையகம் நியூயார்க்கில் உள்ளது. இதன் கொடியில் வெளிர் நீல நிறப் பின்னணியில் வெண்மை நிறத்தில் ஐ.நா. சபையின் சின்னமான ஆலிவ் இலைகளுடன் கூடிய உலகப்படம் அமைக்கப்பட்டுள்ளது. அக்டோபர் 24, ஐ.நா. தினமாகக் கொண்டாடப்படுகிறது. ஆங்கிலம், பிரெஞ்சு, ரஷ்யன், ஸ்பானிஷ், சீன, அராபிய மொழிகள் இச்சபையின் அலுவலக மொழிகளாகும்.

கவிப்பிகாரம்

சந்தித்து வருவதெல்லாம்
சிவப்பதிகாரத்தையே!
வெளிவரத் தயார் நிலையில்
அதன் பல அதிகாரங்கள்!

தொண்ணூற்றுப் பதினைந்திலேயே
கழுத்தில் தூண்டில் போடத்
தொடங்கி விட்டது
அருகாரிகரின் அநாகரிக...
அணுகுமுறை.

தனிச் சமூகமாக ஏற்க மறுத்து
தலையில் குட்டப் பார்த்தார்
பெண்ணான சேர்.

விரட்ட விரட்ட ஓடி வந்தோம்
ஓட ஓட விரட்டப்பட்டோம்
வடக்கிலிருந்து.



கறுப்பு ஜூலையை
தமிழருக்கு வழங்கி
கறுப்பு ஜூலை
முஸ்லிமுக்கு தந்தது
அளுத்கம்

உரிமை மாநிசம்
பதுக்கி வைக்கப்பட்டுள்ளது
நன்றியுள்ள நாய்களுக்கு
அமைச் செவும்புகளைத்
தின்னக் கொடுத்து!

கடைகளை எரிக்கும்
மஸ்ஜித்களை உடைக்கும்
வெறுப்பூட்டும் செயல்கள்
வெகு சிம்பலாகத்
தொடர்ந்தன.

அஞ்ஞாத வாசம்
அனுஷ்டிக்கிறாரோ
அஞ்ஞான சாரர்?

சிரிப்பதிகாரத்திலேயே
நேரம் கழிகின்றது
தலைவர்களுக்கு

சமூகத்தை
சூழ்ந்து நிற்கும்
சிவப்பதிகாரம் பற்றி
சிந்திப்பது யார்?

கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்

தமது கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட கலைப் படைப்புக்களை உருவாக்குவதில் முஸ்லிம் சமூகம் ஆர்வம் கொள்ள வேண்டும்

ஊடகவியலாளர் நிலார் என்.காஸிம்

தமது கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட கலைப் படைப்புக்களை உருவாக்குவதில் முஸ்லிம் சமூகம் ஆர்வம் கொள்ள வேண்டும் என இலங்கையின் தலை சிறந்த பாடலாசிரியரும் ஊடகவியலாளருமான நிலார் என். காஸிம் அண்மையில் இடம்பெற்ற இன்ஸாப் ஸலாஹுதீன் எழுதிய 'இலையில் தங்கிய துளிகள்' நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

எந்தவொரு சமூகத்தினதும் அடிப்படை உறுதியாக இருக்க வேண்டும் எனில் அச் சமூகத்தின் கலாசாரம் பலமாக இருக்க வேண்டும். கலாசாரம் பலமடைய வேண்டுமெனில் அவர்களது மொழி பலமடைய வேண்டும். அமெரிக்கா, ஜேர்மன், பிரான்ஸ் என பெரும்பாலான நாடுகளில் வசிக்கும் முஸ்லிம்கள் அங்கு பயன்படுத்தும் பெரும்பான்மையினரின் மொழியையே பேசுகிறார்கள்.

தொடர்பாடலில் போதாத் தன்மை அல்லது தெளிவின்மை இருக்கும்போது இரண்டு சமூகங்களுக்கு இடையிலான உறவு சரியாகக் கட்டியெழுப்பப்படுவதில்லை சிங்கள மொழி மீது எங்களது நாட்டம் இன்னும் அதிகமாக வேண்டும். பள்ளிவாயலில் சிங்களம் பேசுவது கூடாது என்ற ஒரு காலம் இருந்தது. இன்று குத்பாக்கள் சிங்கள மொழியில் நிகழ்த்தப்படுகின்றன. நாங்கள் சிங்கள மொழியை நல்ல முறையில் பயன்படுத்த பழகியிருக்கிறோம்.

எங்களது சமூகம் சமயத்திற்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்துடன் ஒப்பிடும் போது கலை கலாசாரத்திற்கு கொடுக்கின்ற முக்கியத்துவம் போதுமானதாக இல்லை. அழகியல் சார்ந்த பாடங்களை முஸ்லிம் கள் படிப்பதில்லை. கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்கள் கல்வி அமைச்சராக இருந்த காலத்தில் அழகியல் சார்ந்த ஏதாவது ஒரு பாடத்தை முஸ்லிம் மாணவர்கள் கற்க வேண்டும் என்று சொன்ன போது அவர் விமர்சிக்கப்பட்டார்.

இஸ்லாம் பரவியுள்ள நாடுகளில் இஸ்லாமிய கலை கலாசாரம் எந்தளவு பரவியுள்ளது என்பதை நாம் அவதானிக்க வேண்டும். ஈரான், சிரியா, லெபனான், எகிப்து போன்ற நாடுகளில் சினிமாத் துறை நல்ல வளர்ச்சியடைந்துள்ளது. முஸ்லிம் கலாசாரத்தை மையப்படுத்திய பல்வேறு கலை, இலக்கிய வடிவங்களை அங்கு நாம் காணலாம்.

ஆனால் இலங்கைச் சூழலில் அத்தகைய செயற்பாடுகளை நாம் அரிதாகவே காணக்கூடியதாக இருக்கின்றது. எமக்கான கலை இலக்கிய வடிவங்களை நாம்தான் வளர்த்தெடுக்க வேண்டும். மார்க்கத்தின் எல்லைக்குள் இருந்து கொண்டு [illegible] முடியுமானவற்றையாவது நாம் செய்ய[illegible]தில்லை. இது குறித்து முஸ்லிம் சமூகம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். முஸ்லிம் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்ட கலைப் படைப்புக்களை உருவாக்குவதில் நாம் நாட்டம் கொள்வதில்லை. இது குறித்து நாம் தீவிரமாக சிந்திக்க வேண்டும்.

எமது குழந்தைகள் அழகியல் சார்ந்த விடயங்களில் ஆர்வம் இல்லாது பாடப் புத்தகங்களில் மாத்திரம் கவனம் செலுத்தும்போது ரசனையற்றவர்களாக மாறுகிறார்கள். இதனால் எதிர்காலத்தில் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை அவர்கள் வன்முறைகளால் எதிர்கொள்ள முற்படுகிறார்கள்.

எமது அடுத்த தலைமுறையாவது புத்தாக்க சிந்தனைகளை உள்வாங்கி கலை இலக்கிய முயற்சியில் கூடுதல் கவனம் செலுத்தி வளர வேண்டும். இல்லாதபோது கலாசார அடையாளங்கள் எதுவுமற்ற ஒரு சமூகமாக நாம் இருக்க வேண்டிய நிலை வரும். தமிழ் மொழியில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு சிங்களத்தில் உரையாற்றக் கூடிய நானும் ஒரு சிங்கள திரைப்பட இயக்குனரும் அழைக்கப்பட்டிருப்பது குறித்து இன்ஸாபுடன் நான் உரையாடினேன். இதுதான் நாம் இனிமேல் நடைமுறைப்படுத்த வேண்டிய முறைமை என அவர் தெரிவித்தார். இது ஒரு சிறந்த அணுகுமுறை. இதனை நான் வரவேற்கிறேன்.

நாம் இனிமேலும் தனிமைப்படுத்தப் பட்ட ஒரு சமூகமாக வாழ முடியாது. ஏனைய சமூகங்களுடன் இணக்கமாகப் பழக வேண்டும். எம்மிடமுள்ள விடயங்களை அவர்களுடன் பகிர வேண்டும். அவர்களிடமிருந்து நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். அது மொழியினூடாக கலாசா[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி கால்பந்தாட்டத் தொடரில் மகுடம் சூடியது கோல்டன் ஸ்டார்

கண்டி மாவட்ட கால்பந்தாட்டச் சங்கம் ஒழுங்கு செய்த, கண்டி மாவட்ட கால்பந்தாட்டப் போட்டித் தொடரின் ஏ பிரிவில் சம்பியனாக, கண்டி கோல்டன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் தெரிவானதுடன், இரண்டாம் இடத்தை, கண்டி ஹைலைன் விளையாட்டுக் கழகம் பெற்றுக் கொண்டது.

கண்டி போகம்பறை மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில், முதற்பாதி முடிவடையும் போது, கோல்டன் ஸ்டார் விளையாட்டுக் கழக அணி, இரண்டு கோல்களைப் பெற்றுக் கொண்டதுடன், ஹைலைன் அணிக்கு, ஒரு கோலையும் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. போட்டியின் இரண்டாம் பகுதியின் இறுதி சில விநாடிகளில், ஒரு கோலை மட்டும் பெற்றுக் கொள்வதற்கு, ஹைலைன் அணிக்கு வாய்ப்புக் கிடைத்தது. இதனால், 2-1 என்ற கோல் கணக்கில், கண்டி கோல்டன் ஸ்டார் கழகம் வெற்றிபெற்று, சம்பியன் பட்டத்தைப் பெற்றுக் கொண்டது.

இப்போட்டித் தொடரில் வெற்றி பெற்றவர்களுக்கு, பரிசில்களையும் கேடயங்களையும் வழங்கும் பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதிகளாக, மத்திய மாகாண விளையாட்டுத் துறை அமைச்சர் திலின பண்டார தென்னக்கோன், இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் அநுர டி சில்வா ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஓய்வுபெறுகிறார் ரூனி!

இங்கிலாந்து உதைப்பந்தாட்ட அணியின் பிரபல வீரர் வெய்ன் ரூனி சர்வதேச உதைப்பந்தாட்ட போட்டிகளிலிருந்து உடனடியாக ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிக்கான இங்கிலாந்து குழாமில் ரூனி இணைத்துக் கொள்ளப்படாத காரணத்தினால் இவர் சர்வதேச உதைப்பந்தாட்ட போட்டிகளிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்துள்ளார். மென்செஸ்டர் யுனைடட் அணியின் தலைவராக செயற்பட்டுள்ள ரூனி, 119 சர்வதேச போட்டிகளில் விளையாடி 53 கோல்களை பெற்றுக்கொடுத்துள்ளார். இங்கிலாந்து அணி சார்பில் அதிக கோல்களை பெற்றவர் என்ற சாதனையையும் ரூனி தக்கவைத்துள்ளார்.

கடந்த தினம் நடை பெற்ற மென்செஸ்டர்சிட்டி அணிக்கெதிரான பிரீமியர் லீக் போட்டியில் ஒரு கோலை அடித்து, பிரீமியர் லீக் தொடரில் 200 கோல்களை அடித்த வர் என்ற சாதனையையும் இவர் நிலைநாட்டியிருந்தார்.

அதிகாரிகளிடம் சிக்கி ஆட்டமிழக்கும் இலங்கை அணி

இலங்கை அணிக்குள் வீரர்கள் வருவதும் போவதுமாக இருப்பது போல, நிர்வாகமும் நிறையவே மாற்றங்களை சந்தித்து வருகிறது. ஒவ்வொரு மாற்றமும் எதையெல்லாம் பாதிக்கச் செய்கிறதோ இல்லையோ, இலங்கை அணியின் பெறுபேறுகளிலும், வீரர்களின் உளவியலிலும் ஏகப்பட்ட பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது எனச் சொல்லலாம்.

தற்போதைய நிலையில், 2019 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ண போட்டிகளுக்கு இலங்கை அணி தகுதி பெறுவதே சந்தேகமாகவுள்ள நிலையில், கடந்த 20 மாதங்களில் இலங்கை அணியின் நிர்வாகம் பல உறுதியற்ற மாற்றங்களை எல்லாம் சந்தித்திருக்கிறது.

ஜனவரி 2016: வேகப்பந்து வீச்சு பயற்சியாளர் மீதான குற்றச்சாட்டு

வேகப் பந்துவீச்சு பயிற்சியாளர் அனுஷ சமரநாயக்க போட்டியை முன்கூட்டியே நிர்ணயிக்க முயற்சித்தார் என்கிற குற்றச்சாட்டுக்காக விசாரணை செய்யவென பதவி விலக்கப்பட்டார்.

பெப்ரவரி 2016: கிரஹாம் போர்ட் இன் மீள்வருகை

கிரஹாம் போர்ட் இலங்கை அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். இவர் பயிற்சியளித்த 2012 - 2014 காலப்பகுதியில் இலங்கை அணி உச்சத்தைத் தொட்டிருந்தது.

மார்ச் 2016: அணி நிர்வாக மாற்றம்

கபில விஜயகுணவர்த்தனவின் நிர்வாகம், விளையாட்டு அமைச்சுக்கு அமைவாக செயல்படவில்லை என்கிற காரணத்துடன் வெளியேற்றப்பட்டது. பதிலாக, இடைக்கால அடிப்படையில் அரவிந்த டீ சில்வா தலைமையில், குமார் சங்கக்கார, ரொமேஷ் களுவித்தாரண மற்றும் லலித் களுப்பெரும ஆகியோரை உள்ளடக்கிய குழு நியமிக்கப்பட்டது.

லசித் மலிங்கவின் பதவி விலகல்

உலகக் கிண்ண போட்டிகளில் பங்குபெறும் அணியின் தலைமையிலிருந்து லசித் மலிங்க விலக, T20 போட்டிகளுக்கும் அஞ்சலோ மத்தியூஸ் தலைமையேற்க வேண்டி ஏற்பட்டது.

ஏப்ரல் 2016: புதிய அணி நிர்வாகி

இலங்கை அணியின் நிர்வாகியாகவிருந்த (Team Manager) ரஞ்சித் பொன்னாண்டோவுக்கு பதிலாக சரித் சேனநாயக்க நியமிக்கப்பட்டார்.

மே 2016: நிர்வாகத்தின் உள்ளே, வெளியே ஆட்டம்

தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட தலைமை நிர்வாகியான அரவிந்த டீ சில்வா குறித்த பதவியிலிருந்து நீங்கி, கிரிக்கெட் ஆலோசகர் பதவியில் இணைந்து கொள்ள இவருக்கும், இவரது குழுவுக்கும் மாற்றீடாக சனத் ஜெயசூர்யா தலைமையில் ரொமேஷ் களுவித்தாரண, ரஞ்சித் மதுரசிங்க மற்றும் எரிக் உபசாந்த ஆகியோரை கொண்ட குழு பொறுப்பேற்றுக் கொண்டது.

ஜூலை - டிசம்பர் 2016: புதிய பதவிகளும், மாற்றங்களும்

இந்தக்காலப் பகுதியில் இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் உயர் செயல்திறன் நிர்வாகி (High Performance Manager) உருவாக்கப்பட்டு இங்கிலாந்து நாட்டவரான சைமன் வில்லிஸ் உள்வாங்கப்பட்டார். நிக் போதாஸ் இந்த காலப்பகுதியில் களத்தடுப்பாட்ட பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

டிசம்பரில் சரித் சேனநாயக்கவுக்குப் பதிலாக ரஞ்சித் பொன்னாண்டோ அணி நிர்வாகியாகக் கொண்டுவரப்பட்டார். இதே காலப்பகுதியில் இலங்கை அணியின் உடற்பயிற்சி நிபுணர் பதவி விலக, புதியவராக நிக் லீ இங்கிலாந்திலிருந்து வரவழைக்கப்பட்டார்.

மார்ச் 2017: மீண்டும் நிர்வாக மாற்றம்

அசங்க குருசிங்க இலங்கை கிரிக்கெட்டின் மேலாளராக (Cricket Manager) அறிவிக்கப்பட்டதுடன், ரஞ்சித் பொன்னாண்டோவுடன் இணைந்து செயலாற்றுவார் எனவும் அறிவிக்கப்பட்டது.

மே 2017: அலன் டொனால்ட் இன் வருகை

இலங்கை அணியின் பந்துவீச்சு பயிற்சியாளராக தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரரான அலன் டொனால்ட் நிர்வாகத்துக்குள் கொண்டுவரப்பட்டார். இதன்போது, இலங்கை அணியில் ஏற்கனவே பந்துவீச்சு பயிற்சியாளராகவிருந்த சம்பிக்க ராமநாயக்க Champions Trophy போட்டிகளின் போது பந்துவீச்சு பயிற்சியிலிருந்து புறக்கணிக்கப்பட்டார்.

ஜூலை 2017: நிர்வாகத்தின் தொடர் இழப்பு

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தில் உபதலைவர் பதவியை வகித்த ஜயந்த தர்மதாச தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார். Champions Trophyயின் தோல்வியுடன் 45 மாதகால பயிற்சியாளர் ஒப்பந்தத்தை வெறும் 15 மாதத்துடன் முடித்துக் கொண்டு பயிற்சியாளர் போர்ட் நாடு திரும்பினார்.

ஆகஸ்ட் 2017 முதல் இன்றுவரை: அடிமேல் அடி

- தற்காலிக பயிற்சியாளர் தலைமையில், இலங்கை அணி சர்வதேச கிரிக்கெட் அரங்கில் அடிமேல் அடி வாங்கிக்கொண்டிருக்கிறது.
- சிம்பாப்வே அணியுடனான தோல்வியில் அழுத்தங்களை தாங்கிக்கொள்ள முடியாதவராக தனது பதவியை இராஜினாமா செய்து கொண்டார் மத்தியூஸ்.
- இலங்கை அணியில் இடம் பெறாத சந்திமால் டெஸ்ட் அணித் தலைவராக அணிக்குள் உள்வாங்கப்பட்டார்.
- அணியில் தளம்பல் நிலையிலான பெறுபேறுகளை கொண்டுள்ள உபுல் தரங்க ஒருநாள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகளின் தலைவராக நியமிக்கப்பட்டார்.
- போட்டித்தடை காரணமாக தரங்கவுக்குப் பதிலாக சாமர கபுகெதர இந்தியாவுடனான 3 ஆவது ஒருநாள் போட்டிக்கு தலைவராக நியமிக்கப்பட்டார்.
- கபுகெதரவுக்குப் பதிலாக இந்தியாவுடனான எஞ்சிய போட்டிகளுக்கு லசித் மாலிங்க தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போது இடம்பெறும் இந்திய அணியுடனான போட்டிகளை நோக்கர்கக் கொண்டு ஹஷான் திலகரத்ன துடுப்பாட்ட பயிற்சியாளராகவும், சமிந்த வாஸ் பந்துவீச்சு பயிற்சியாளராகவும் நியமிக்கப்பட்டார்கள்.
- ஆனால், சமிந்த வாஸ் அறிவிக்கப்பட்ட சில தினங்களிலேயே ருமேஷ் ரத்னாயக்கா அந்த இடத்துக்கு கொண்டுவரப்பட்டு வாஸ் 19 வயதுக்குட்பட்டவர்களின் அபிவிருத்திப் பயற்சியாளராக மாற்றப்பட்டார்.

ஆகஸ்ட் 29 - 2017: தெரிவுக் குழு இராஜினாமா

இலங்கை கிரிக்கட் அணியின் தெரிவுக் குழுத் தலைவர் சனத் ஜயசூரிய உள்ளிட்ட தேர்வாளர்கள் பதவி விலகல் கடிதத்தை விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கையளித்தார்கள்.

கடந்த 20 மாதகாலத்துக்குள் ஒரு நிலையற்ற நிர்வாகமாக இலங்கை கிரிக்கெட் நிர்வாகம் இருந்திருக்கிறது. அணிக்குள் நிரந்தரமாக இருப்போமா? இல்லையா? என்கிற ஐயத்துடன் அணிக்குள் கொண்டுவரப்பட்ட புதிய வீரர்கள் எப்படி நம்பிக்கையுடன் செயல்படுவார்கள் என எதிர்பார்க்க முடியும்? ஒரு அணியாக இணைந்து விளையாடவோ, நிர்வாகத்துடன் சுமுக உறவையோ ஏற்படுத்திக்கொள்ள முடியாத நிலையில், அழுத்தங்களுக்கு மத்தியில் திறமையான வீரர்களாலும் பெறுபேறுகளை வெளிப்படுத்த முடியாது. அப்படியாயின், புதுமுக வீரர்களை கொண்ட இலங்கை அணி என்னவாகும் என யூகிக்க முடிகிறதா?

இலங்கை அணி மீண்டும் திறமையான அணியாக மீண்டெழுந்து வராதா? என்பதுதான் தற்போது ஒவ்வொரு உண்மையான ரசிகனதும் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

இப்பொழுது விற்பனையில்

தொ.இ - 077 3925923

இன்ஸாப் ஸலாஹுதீனின்
இலையில் தங்கிய துளிகள்

Dr. M.T. முஹம்மத் அலவி (BUMS) அவர்களால் எழுதப்பட்டு OMSED நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட உள்ளத்தின் ஆழத்திலிருந்து என்ற நூலின் வெளியீட்டு விழாவும், கிண்ணியா ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் ஏ.எம். ஹிதாயதுல்லாஹ் (நளீமீ) அவர்களால் நிகழ்த்தப்பட்ட சமூக நிறுவனங்களும், இளைஞர்களும் எனும் தலைப்பிலான உரையும் ஆகஸ்ட் 29 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது. OMSED Sri Lanka நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷெய்க் அஹ்ஸன் ஆரிப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூல் பற்றிய அறிமுகத்தை பயணம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் அஷ்ஷெய்க் அக்ரம் அப்துஸ் ஸமத் வழங்கினார். நிகழ்வில் கொழும்பு [illegible] கலாநிதி [illegible] ஹுஸைன். கபூர்தீன், வோகஸ் சி.எம்.எல் குரூப்பின் பிரதித் தலைவர் சிராஜ் ஸகரிய்யா உட்பட [illegible] மாமாயீல் தொகுத்து வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.